# நேற்று வரை நீ... யாரோ?

வெகு நேரம் மறைத்து வைத்திருந்த சூரியனை கிழக்கு வானில் வீசியெறிந்து விட்டு கோபமாய் போய்விட்டிருந்தது இரவு! வெப்பம் சுள்ளென உறைத்தது.

ரவிவர்மாவின் ஓவியம் ஒன்று கட்டிலில் உயிர் பெற்று படுத்திருந்தது.

உறக்கத்திலும் காந்தத்தை பதுக்கி வைத்திருக்கும் வசீகரமான முகம். பசுமை சூழ்ந்த மலைப்பிரதேசத்தை போர்த்தியிருந்த மேகமாய்... அவளின் சிலை வடிவ உடலை இளநீல நைட்டி கர்வத்துடன் அணைத்திருந்தது.

பேன் காற்றில் நடனமாடிய ஜன்னல் திரைச்சீலை அவ்வப்போது சூரியனின் கதிர்களை உள்ளே செலுத்த...

வெப்பம் தாங்காமல் ஷீலா முகம் சுளித்ததுக் கூட நடன முத்திரைப் போல்தான் இருந்தது.

கட்டிலில் எழுந்தமர்ந்து அழகாய் சோம்பல் முறித்த ஷீலாவை ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் அபார அழகி!

அதனால் ஏற்பட்ட கர்வம் உடல் முழுக்க இருந்தது. டேபிள் மேலிருந்த டைம்பீஸ் 7-45 எனக்காட்ட பதறிப்போனாள்.

"மைகாட்... இவ்வளவு நேரமாகவா தூங்கி விட்டேன்?" பரபரப்பாய் எழுந்துச் சென்று பால்கனியில் நின்றாள்.

எதிர்வீட்டு பால்கனி காலியாய் இருந்தது.

குபுக்கென கோபம் வந்தமர்ந்தது.

ஏமாத்திட்டேயில்லே... பார்த்துக்கறேன்!

பாத்ரூமிற்குள் நுழைந்தவள் தன் கோபத்தை கதவில் காட்டினாள்.

அந்த சப்தம் வீடு முழுக்க கேட்க... சடை பின்னி ரிப்பனை முடிச்சிட்டுக் கொண்டிருந்த மார்கரெட் அம்மாவைப் பார்த்து சொன்

**–ஆர். மணிமாலா**



னாள்.

"இந்த வீட்டு அல்லிராணி எழுந்தாச்சு!"

"அவ காதிலே விழுந்து தொலையப் போகுது மேகி! சும்மாயிரு!" என்றாள் அம்மா ரோஸ்லின்.

மார்கரெட் அந்த வீட்டின் கடைக்குட்டிப் பெண். பெயரை சுருக்கி 'மேகி' என்று அழைக்கப்படும் செல்லப்பெண்! ப்ளஸ் ஒன் படிக்கிற பள்ளி மாணவி. ஷீலா மூத்தவள். ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் ரிசப்ஷனிஸ்ட்! கைநிறைய சம்பளம். அவளுக்கு அடுத்து ஹென்றி! பிளஸ் டூ படிக்கிறான்.

செபாஸ்டியன்- அந்த வீட்டின் குடும்பத் தலைவர். சென்னை சுங்கவரி அலுவலகத்தில் பொறுப்பான அதிகாரி. அதிர்ந்து ஒரு வார்த்தை வராது அவரிடமிருந்து.

"ஷீலாவுக்கு நீ அம்மாவா? இல்லே... உனக்கு அவ அம்மாவா? அவளுக்குப் போய் ஏன் இப்படி பயப்படறே?"

"எல்லாத்திலேயும் குறை கண்டுபிடிக்கிற ரகம் உன் அக்கா! அவளுக்குத் தோதா விவாதம் பண்ணிக்கிட்டிருந்தா வீடு ஆலயமாயிருக்காது: சந்தைக் கடையாதான் இருக்கும். உனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு... கிளம்பற வழியைப் பார்!"

"அநியாயத்துக்கு நடுங்கறேம்மா!" சலிப்புடன் யூனிஃபார்ம் அணிய அறைக்குள் நுழைந்தாள், மேகி.

ஊசி மழையாய் தண்ணீர் பீய்ச்சியடிக்க ஷவரின் கீழ் வெகு நேரம் நின்றிருந்தாள் ஷீலா. மனசு கொதித்துக் கொண்டிருந்தது.

காலையில் எழுந்ததுமே ஏற்பட்ட ஏமாற்றத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எரிச்சலும் கோபமுமாய் சோப்பை வேக வேகமாய் தேய்த்தவளின் கையிலிருந்து வழுக்கிக் கொண்டு கழிவு நீர் குழாயில் விழுந்து விட்டது.

'ச்சட்... நேரம் பார்த்து இது வேறே...!' இன்னும் ஆத்திரம் மூண்டது.

டவலை மார்பு வரை கட்டிக் கொண்டு பாத்ரூமை விட்டு வெளியில் வந்தாள். அலமாரியை பார்த்தாள். எல்லா சோப்பும் தீர்ந்து விட்டிருந்தது.

'என்னப் பண்ணிட்டிருக்காங்க எல்லோரும் இந்த வீட்லே? பொறுப்பா பார்த்து வாங்கி வைக்கக் கூடாது?'

அறைக்கதவை கொஞ்சமாய் திறந்து தலையை மட்டும் நீட்டி, "மேகி... மேகி..." என்று குரல் கொடுத்தாள்.

"மேகி.... ஷீலா கூப்பிடறாப் பார்!" அம்மா குரல் கொடுக்க.. மேகி ஓடிவந்தாள்.

"என்ன ஷீலா?"

சோப் தீர்ந்துடுச்சு... எடுத்துட்டு வா!''

''நேத்துதானே முழுசாப் பார்த்தேன்!''

''உனக்கெப்படித் தெரியும்? என் ரூமுக்குள்ளே வந்தியா?'' என்றாள் சந்தேகப் பார்வையுடன்.

''அப்பா புதுசா வாங்கி வந்த ரூம்ஸ்ப்ரேயரை கொடுத்து வச்சிட்டு வரச்சொன்னார். அப்ப பார்த்தேன்.''

''சரி... சரி... பேசிக்கிட்டு நிக்காதே... சோப் நழுவி குழாயில் விழுந்திடுச்சு... சீக்கிரம் எடுத்துட்டு வா!''

''பாத்ரூம்ல பாட்டு மட்டும்தான் பாடுவேன்னு நினைச்சேன், டான்ஸூம் ஆடறேன்னு தெரியுது...''களுக்கென சிரித்தபடி நகர...

''ரொம்ப பேசறே மேகி... என்கிட்டே வேண்டாம்!''

அடுத்த நிமிடம் சோப்புடன் வந்தாள் மேகி.

பைக் சப்தம் கேட்டதும் வாசலுக்கு ஓடினான் ஹென்றி! செபாஸ்டியன் காய்கறிகள் அடங்கிய கூடையுடன் வந்துக் கொண்டிருந்தார்.

''வாங்கப்பா... இப்படி கொடுங்கப்பா... நான் தூக்கிட்டுப் போறேன்!''

செபாஸ்டியன் சிரித்தார்.

''என்ன ஹென்றி ரொம்ப ஐஸ் வைக்கிறே?''

''ஏன்ப்பா... இது அக்கறையா இருக்கக் கூடாதா? அம்மாவுக்கு உடம்பு முடியாமப் போனதிலேர்ந்து நீங்க தான் மார்க்கெட் போய் வர்றீங்க. அதனால உங்களால வாக்கிங் போக நேரமில்லாமப் போய்டுச்சு. எனக்கு தான் எக்ஸாம் முடிஞ்சு போச்சே. சும்மாதானே இருக்கேன்! இனி, நானே மார்க்கெட் போய்ட்டு வர்றேன்ப்பா!''

ஒரு கணம் மகன்னையேப் பார்த்தவர் அவன் தலையை கலைத்து விட்டார்.

''இனி, சும்மா இருக்க முடியாது ஹென்றி! நாளைலேர்ந்து நீ யோகா, கராத்தே, ஸ்விம்மிங், கம்ப்யூட்டர் க்ளாஸ்னு உன் நேரங்களை உருப்படியா செலவழிக்கப் போகிறே!''

''தெரியும்ப்பா... ஆனா, கூடவே இந்த வேலையும் என்னால செய்ய முடியும்ப்பா! ஸ்ப்ளெண்டர்ல கிளம்பினா பத்தே நிமிஷத்திலே ஷாப்பிங் முடிச்சிட்டு வந்துடுவேன்ப்பா!''

''ஸ்ப்ளெண்டர்?''

''ஆமாம்ப்பா! இன்னும் ரெண்டு மாசத்துல காலேஜ்ல ஜாய்ன் பண்ணனும். பைக்னா போக வர வசதியாயிருக்கும். அதை இப்பவே வாங்கி கொடுத்தீங்கன்னா ஓட்டறதுக்கு பழகிக்குவேன்!'' சங்கோஜத்துடன் சொன்னான்.



''அதானே பார்த்தேன்? கோழிக்குஞ்சி வெளியில்ல திரியுதேன்னு பருந்து கவலைப்பட்டுச்சாம்!''

''அப்பா... ப்ளீஸ்ப்பா! என் ப்ரண்ட்ஸ் எல்லோரும் பைக் வச்சிருக்காங்கப்பா!''

''நேத்துதான் பிறந்த மாதிரி இருக்கு. வருஷம் ஓடிப்போய், கிடுகிடுன்னு வளர்ந்து பைக் கேக்கற வாலிபனாய்ட்டே! பத்திரமா ஓட்டுவியா?''

''கவனமா ஓட்டுவேன்ப்பா!'' அவசரமாய் பதில் வந்தது.

''சரி... அஞ்சு நாள் போகட்டும். வாங்கித் தர்றேன். அதனால மத்த க்ளாஸ் எல்லாம் போகாம இருக்கக் கூடாது!''

''உங்க நம்பிக்கைய வீணாக்க மாட்டேன்ப்பா!''

''வெரிகுட்!''

''ஏங்க... எனக்குத்தான் சரியாகிடுச்சே... உங்களை யார் மார்க்கெட் போகச் சொன்னா? நாளைலேர்ந்து நானே போகிறேன். குளிச்சிட்டு வாங்க. டிபன் ரெடியாயிருக்கு. ஹென்றி நீயும் வா!'' என்றபடி காய்கறிக் கூடையை வாங்கிக் கொண்டாள் ரோஸ்லின்.

செபாஸ்டியன் கண்ணாடியை கழற்றி மனைவியிடம் கொடுத்து விட்டு குளிக்கச் சென்றார்.

''டிபன் எடுத்து வைம்மா... டிரஸ் பண்ணிட்டு வந்திடறேன்!'' ஹென்றி நகர... புத்தக மூட்டையை சுமந்தபடி மேகி வந்தாள்.

''லன்ச் பாக்ஸ் எங்கேம்மா?''

இதோ வச்சிருக்கேன். மிச்சம் வைக்காம சாப்பிடணும்!''

''அளவுக்கு மீறி வச்சிருந்தா மிச்சம் வரும்... வர்றேன்ம்மா!''

ஓடினாள் மேகி.

''பார்த்து... பார்த்துப் போ! லேட்டா எந்திரிக்கறது... அரக்க பரக்க ஓடறது...''

''பளார்...!''

திடுக்கிட்டு திரும்பினாள் ரோஸ்லின்.

---



''எதுக்குபடத்துல நிறைய குளியல் சீன் வைக்கச் சொல்றீங்க?''

''தண்ணீர் பஞ்சத்துல புரொடியூசர் செலவுல நல்லா குளிச்சிக்கலாம்னு தான்''

- அ.ப.ஜெயபால், பரங்கிபேட்டை.

ஷீலாவின் கரம் ஹென்றியின் கன்னத்தில் இறங்கிய சப்தம் தான் அது!

''ஷீலா... என்ன இது?'' என்றாள் பதறிப்போய் ரோஸ்லின்.

''ஹென்றி கண்கள் கலங்க தலை கவிழ்ந்திருந்தான்.

''நல்லா ஸ்மெல் பண்ணிப் பார்! என் பர்ப்யூமை எடுத்து திருட்டுத்தனமா யூஸ் பண்ணியிருக்கான்!''

''நா.... நான்தான் ஸாரி கேட்டேனே?''

''ஸாரி கேட்டா? செஞ்சது தப்பில்லைன்னு ஆகிடுமா? என்னைக் கேட்காம எப்படி எடுக்கலாம்?''

''கேட்டா மட்டும் கொடுத்துடுவியா ஷீலா? ஒரு சாதாரண செண்ட்டை எடுத்ததுக்கு ஏன் இப்படி மோசமா நடந்துக்கறே?''

''அப்படித்தான் நடந்துப்பேன்! என் திங்ஸை என்னைத் தவிர வேற யாரும் தொடக்கூடாது. தொட்டா... விட மாட்டேன்!''

எச்சரித்து விட்டு போனவளை திக்பிரமையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர் ரோஸ்லினும், ஹென்றியும்.

## 2

டைட் ஜீன்ஸ், லூஸான காட்டன் ஷர்ட்! கிறிஸ்டலில் உருவாக்கப்பட்ட சின்னதாய் ஸ்டட்! பியூட்டி பார்லரின் உபயத்தில் நடிகை மீனாவின் ஹேர் ஸ்டைல் கட்டிங்!

அவ்வளவேதான்!

அதுவே அள்ளிக் கொண்டுப் போயிற்று. முகத்திற்கு துளி பவுடர் கிடையாது. போட்டதே தெரியாத நிறத்தில் லிப்ஸ்டிக் மட்டுமே! களைப்புடன் யார் வந்து அவள் எதிரில் அமர்ந்தாலும் புத்துணர்ச்சி வந்து நிரம்பி விடும்.

ஆனால் மகளின் அழகும், உடையும் ரோஸ்லினுக்குதான் வயிற்றை கலக்கும்.

எல்லா விஷயத்திலும் தரம் பார்ப்பவள். தனக்கு முன்னுரிமை வேண்டுமென நினைப்பவள். தன் அழகின் மீதும், திறமை மீதும் தலைக்கனம் கொண்டவள்! இப்படிப்பட்ட பெண்ணிற்கு எந்த உலகத்தில் போய் மாப்பிள்ளை பார்ப்பது? நம் மனசுக்கு நிறைவென்று தெரிகின்ற எல்லாமே ஷீலாவைப் பொறுத்தவரை குறையாகவே தெரியும்!

டைனிங் டேபிள் முன் வந்தமர்ந்தாள்.

''மம்மி... டிபன்!''

''இதோ வந்துட்டேன்!''

ஹாட் பேக்குகளை கொண்டு வந்து டேபிள் முன் பரப்பினாள் ரோஸ்லின்.

''டாடி ஆபீஸ்க்கு போய்ட்டாரா?''

''எப்பவும் நீ புறப்பட்ட பிறகுதானே ஷீலா நான் கிளம்புவேன்?'' சட்டையின் கையை மடித்து விட்டபடி அவளின் எதிரில் வந்தமர்ந்தார் செபாஸ்டியன்.

''குட்மார்னிங் டாடி!''

''குட்மார்னிங்!'' என்றபடி அவரே இருவருக்கும் தட்டு வைத்து ஹாட் பேகை திறந்தார்.

ஷீலாவின் முகம் சுருங்கிற்று.

''மம்மி என்ன இது பொங்கலா?''

''ஆமாம்... இதோ வடையும் இருக்கு!''

''நான் உன்னை என்ன கேட்டேன்? நீ என்ன சமைச்சிருக்கே?''

''அடடா... மறந்துட்டேன் ஷீலா! நீ ஊத்தப்பம் கேட்டேயில்லே? சுத்தமா மறந்துட்டேன்ம்மா! ஹென்றி பொங்கல் வேணும்னு கேட்டான். அதனாலதான்...''

''ஓஹோ... உன் செல்லப்பிள்ளை கேட்டதும் சமைச்சு கொடுக்கத் தெரியுது. அதுவும் ஆண்பிள்ளை! அதனால அவனுக்கு முக்கியத்துவம் தர்றே!''

''என்ன ஷீலா... சாதாரண விஷயம். அதுக்குப் போய் இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணனுமா? நாளைக்கு நீ கேட்டதை கண்டிப்பா சமைச்சு தர்றேன்!''

''நான் ஆர்ப்பாட்டம் பண்றேனா? எனக்கு டிபனும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம்!'' கோபத்துடன் விருட்டென சேரை பின்னுக்குத் தள்ளி எழுந்தாள் ஷீலா!

எழுந்த வேகத்தில் தண்ணீருடன் கண்ணாடி டம்ளர் டேபிள் மீதிருந்து கீழே விழுந்து சிதறியது.



''பாட்டி! சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?''

''சுட்ட பழமா...? அது என்ன முருகா?''

''பக்கத்து வீட்டு தோட்டத்திலிருந்து 'சுட்ட' பழம் பாட்டி''

- சீர்காழி வி.ரேவதி, தஞ்சை.



செபாஸ்டியன், மகளின் கையைப் பற்றிக் கொண்டார்.

''காம் டவுன் ஷீலா! நீ இந்த வீட்டின் தலை மகள். உனக்கில்லாத உரிமையா? டாடி சொல்றேனில்லே? என் மேல் மரியாதையிருக்கில்லே? அப்படின்னா என் பேச்சை கேள்... சிட் டவுன்!''

பொருமலுடன் அமர்ந்தாள்.

''எதுக்குடா உனக்கு இவ்வளவு கோபம் வருது? அம்மா நீ கேட்டதை நாளைக்கு சமைச்சுத் தர்றேன்னு சொல்றாயில்லே? பொங்கலும் உனக்கு பிடிக்கும் தானே? சாப்பிடுடா!'' என்றார் கெஞ்சலுடன்.

''இன்னைக்குப் பிடிக்கலே... தட்ஸால்! நான் கேட்டது கிடைக்காதப்ப... ஏன் சாப்பிடணும்? கம்பெல் பண்ணாதீங்க... எனக்கு வேண்டாம்... நான் போறேன்!''

ஷீலாவைப் பற்றி அவர்களுக்கு நன்றாகவேத் தெரியும். தான் நினைத்ததை அடையும் வரை நார்மலுக்கு வர மாட்டாள். இன்று முழுக்கவே இதன் காரணமாக சாப்பிடாமலே இருந்து விடுவாள்.

ரோஸ்லினுக்கு மனசு கேட்கவில்லை.

''சரி ஷீலா... நீ கேட்ட ஊத்தப்பம் ரெடி பண்ணித் தந்திடறேன்... பத்து நிமிஷம் வெயிட் பண்றியா?''

''ஒண்ணும் வேண்டாம்!''

''பிடிவாதம் பிடிக்காதே ஷீலா... இதோ வந்துட்டேன்!'' தயவாய் கன்னத்தை வருடி விட்டு செல்லவும்... மனமிரங்கினாள் ஷீலா.

மகளையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் செபாஸ்டியன்.

''என்ன டாடி... நீங்க சாப்பிடலே? ஆபீசுக்கு போகணுமே?''

''பரவாயில்லேம்மா... ஊத்தப்பம் வந்திடட்டும். ரெண்டு பேரும் ஒண்ணாகவே சாப்பிடலாம்.''

''தாங்க்ஸ் டாடி! ஹென்றிக்கு பைக் வாங்கி தரப் போறீங்களாமே... நிஜமாவா?''

''ம்''

''அப்படியென்ன அவசரம் அவனுக்கு?''

''என்னம்மா சொல்றே?''

''இப்ப அவனுக்கு பைக் அவசியமா? எல்லா வசதிகளும் நீங்களே அவனுக்கு ஏற்படுத்தி கொடுத்தா கஷ்டப்பட்டு உழைச்சு முன்னுக்கு வரணும்ங்கற எண்ணம் வராதே டாடி!''

''.....''

''நானும்தான் வேலைக்குப் போறேன். ஆனா டூ வீலர் வேணும்னு நான் உங்களை டிஸ்டர்ப் பண்ணலையே! நானே என்

னோட சேவிங்ஸ்லதானே வாங்கினேன்? அதே மாதிரி அவனும் வாங்கிக்கட்டுமே!''

''நீ சொல்றது சரிதான் ஷீலா! ஆனா, வாங்கித் தர்றேன்னு சொல்லிட்டேனே... இப்ப முடியாதுன்னா சரியா வராதே! இனி யோசிச்சு பண்றேன் சரியா?''

''என்னவோ பண்ணுங்க டாடி... அவஸ்தைப்படப் போறது நீங்கதான்!''

அந்தப் பேச்சை அதற்கு மேலும் வளர்த்தால் சரி வராது என்பதால் கீழே உடைந்து சிதறியிருந்த கண்ணாடித் துண்டுகளை கவனமாய் பொறுக்கினார்.

''விடுங்க... மம்மி க்ளீன் பண்ணுவாங்க!''

''பரவாயில்லேம்மா... இதோ முடிச்சாச்சு! பாவம் அவளும் எவ்வளவுதான் செய்வா?''

சமையலறையில் வேக வேகமாய் வெங்காயத்தை கட் பண்ணிக் கொண்டிருந்தாள் ரோஸ்லின். கண்களில் சாறு பட்டு கண்ணீர் வந்துக் கொண்டேயிருக்க... பதட்டத்தில் விரலையும் சேர்த்து நறுக்கிக் கொள்ள...

ரத்தம் கொட்டியது.

''ஸ்ஸ்... ஆ!'' வலி தாளாமல் துடித்து விட்டாள்.

''மம்மீ... ரெடியா?''

''இ... இதோ... அஞ்சு நிமிஷம்தான்!'' குரல் கொடுத்தவள் இடுப்பில் செருகியிருந்த கர்ச்சீப்பை எடுத்து விரலில் சுற்றிக் கொண்டு, மளமளவென காரியத்தில் இறங்கினாள்.

ஐந்தே நிமிடத்தில் சுடச்சுட ஊத்தப்பமும், தேங்காய் சட்னியும் ஷீலாவின் முன் இருந்தது.

''தேங்க்ஸ் மம்மி!'' ஆர்வமாய் சாப்பிட ஆரம்பித்தாள்.

''நீங்க இன்னும் சாப்பிடலையா? ஆபீஸ்க்கு நேரமாய்டுச்சே?'' அசுரகதியில் தட்டு வைத்து பொங்கலை பரிமாறினாள்.

''ஷீலாவோட சேர்ந்து சாப்பிடணும்னுதான்.... அட... என்ன இது கையிலே? ரத்தம் வருதே?'' பதற்றமாய் கேட்டார் செபாஸ்டியன்.

''வெங்காயம் நறுக்கும் போது... விரல்ல கத்திப்பட்டுடுச்சு...''

''பார்த்து செய்யக்கூடாதா மம்மி?''

''நிறைய ரத்தம் போயிருக்கே? அப்பவே என்னை கூப்பிட்டிருக்கலாமில்லே... இப்படி வா...!''

''அட... நீங்க சாப்பிடுங்க... சின்ன காயம்தான். நான் பார்த்துக்கறேன்.''



''நல்லா பார்த்துப்பே... சும்மாயிரு!'' பர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்து வந்தார்.

''டாடி... நான் ஹெல்ப் பண்ணணுமா?''

''வேண்டாம்மா... உனக்கு டைமாய்டுச்சு... நீ சாப்பிட்டு கிளம்பு!''

செபாஸ்டியன் மனைவியின் விரலை நன்கு சுத்தப்படுத்தி, மருந்துப் போட்டு கட்டுப் போட்டார்.

''ஆழமாய் வெட்டியிருக்கு. ஈவ்னிங் வந்ததும் டாக்டரிடம் போகலாம். ஒரு செப்டிக் இன்ஜெக்ஷன் போட்டுக்கறது நல்லது!''

''ஏங்க பெரிசுப் பண்ணிக்கிட்டு... நீங்க சாப்பிடுங்க முதல்ல!'' அவரின் கைப்பற்றி உட்கார வைத்தாள்.

''ஈவ்னிங் ரெடியாயிரு!'' என்றார் அழுத்தமாய்.

''ஓகே டாடி, நான் கிளம்பறேன். பை மம்மி!'' ஷீலா தட்டிலேயே கையை கழுவிட்டு போய் விட்டாள்.

செபாஸ்டியன் பெருமூச்சு விட்டார். சாப்பிடாமல் விரல்களால் அளைத்தார்.

''என்னங்க... சாப்பிடாம என்ன யோசனை?''

''ஷீலாவை நினைச்சாதான் கவலையாயிருக்கு ரோஸ்லின்? ரொம்ப செல்லம் கொடுத்து அவளை வளர்க்கறதுல கேர் எடுத்துக்காம விட்டுட்டோமோன்னு இருக்கு!''

''நாம நல்லாதான் வளர்த்திருக்கோம். ஏன் மத்த ரெண்டு பேரும் எப்படியிருக்காங்க? யாரோடயும் ஒட்ட மாட்டேங்கறா. அவ மட்டும் நல்லாயிருந்தா போதும்ங்கற எண்ணம். கூடப் பொறந்தவங்களாச்சேன்னு யார் மேலேயும் பாசமில்லே. இப்பக்கூட ஹென்றி அவளோட செண்ட்டை எடுத்து போட்டுக்கிட்டானு வளர்ந்த பிள்ளையாச்சேன்னுக் கூடப் பார்க்காம அறைஞ்சிட்டா! அவனும் கோவிச்சுக் கிட்டு சாப்பிடாமலே போய்ட்டான்!''

''அவளை எப்படி கண்ட்ரோல் பண்றதுன்னே புரியலே ரோஸ்லின். பிடிவாதம் அதிகம்தான், நினைச்சது கிடைச்சே ஆகணும்ங்கிற

"உங்க கட்சியில் மட்டும் ஏன் கோஷ்டிப் பூசல் இல்லை?"

"நான் மட்டும் தான் என் கட்சியில் இருக்கிறேன்கிறதை குத்திக் காட்டுகிறாயா?

-எம்.அசோக்ராஜ்.



பிடிவாதம் வாழ்க்கைக்கு சரிப்படாது. அதுவும் பெண் பிள்ளை. வேற வீட்டில் வாழப்போகிறவ. எப்படி அட்ஜஸ்ட் பண்ணிக்கப்போகிறா? நினைச்சாலே பயமாயிருக்கு!'' என்றபடி எழுந்து கொண்டார்.

''என்னங்க சாப்பிடாமலே...''

''ப்ச்... வேணாம் ரோஸ்லின்... பசிக்கலே!'' என்ற வரை கவலையுடன் பார்த்தாள் ரோஸ்லின்.

## 3

மழை இரண்டாம் நாளாக தொடர்ந்து பெய்துக் கொண்டிருந்தது.

வாடிக்கிடந்த பயிருக்கும், வறண்டுக் கிடந்த பூமிக்கும் வரப்பிரசாதம்.

கமலம் மனநிறைவுடன் வாசலில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

மழைக்கு பயந்து மல்லிகைக் கொடியின் இண்டு இடுக்கில் மறைந்தமர்ந்துக் கொண்டிருந்தன சிட்டுக் குருவிகள் இரண்டு.

முருங்கை மரக்கிளையில், நனைவதைப் பொருட்படுத்தாமல் சோர்ந்துப் போய் அமர்ந்திருந்தது காகம்.

சாரலில் நனைந்திருந்த வாசல் படியை கனமான துணியால் துடைத்தாள்.

''காற்று சிலுசிலுன்னு இருக்கு. நீ ஏம்மா வாசல்ல நிக்கறே? உள்ளே வா!'' குளியலறையிலிருந்து வெளிப்பட்ட வினயா அம்மாவை செல்லமாய் கடிந்துக் கொண்டாள்.

குரல் கேட்டு திரும்பிய கமலம் மகளை ஏற இறங்கப் பார்த்தாள்.

திருத்தமான முகம். கஞ்சியில் மொட மொடத்த பருத்திப் புடவை. மாநிறமாய், லட்சணமாய் இருந்தாள்.

''என்னை விடு... மழைக் கொட்டுது... பச்சைத் தண்ணியிலே தலைக்கு குளிச்சிட்டு வந்திருக்கே? அரையடி கூந்தல்னா பரவாயில்லை. உன் கூந்தல் காயுமா?''

''கோவிலுக்குப் போகணுமே... குளிக்காம இருக்க முடியுமா? சரி... சரி நீ உள்ளே வா! அப்படியென்ன பார்த்துக்கிட்டிருக்கே?''

''இதோ, அதோன்னு ஏமாத்திட்டு... பெய்திட்டிருக்கிற மழையைத்தான்! நம்ம ஊர் மக்கள் வயித்தில பாலை வார்த்திருக்கே? இன்னும் ஒரு வாரம் வருண பகவான் இதே மாதிரி வாரி வழங்கினா... ஏரி, குளம்னு நிறைஞ்சிடுமே!''

''மழைத்தண்ணிப் பட்டாலே உனக்கு ஆகாதேம்மா. சாரல்ல



நனையறே பார்... உள்ளே வா... சாப்பிட்டியா?''

''உன்னை விட்டுட்டு நான் என்னைக்கு தனியா சாப்பிட்டிருக்கேன்?''

''என்னம்மா நீ! மாத்திரைப் போடணுமே... நேரத்துக்கு சாப்பிட வேணாமா? சரி... உட்கார்... இதோ வந்துட்டேன்'' என்றவள் சேலையை இழுத்து செருகிக்கொண்டு அமர்ந்தாள்.

அம்மாவுக்கு இட்லி வைத்து... அவளுக்கு பிடித்த வடைகறியை மணக்க, மணக்க ஊற்றினாள் வினயா.

''உனக்கு தட்டு போட்டுக்கலியா வினயா?'' அம்மா ஆச்சர்யமாய் கேட்டாள்.

''இன்னைக்கு வெள்ளிக்கிழமையாச்சேம்மா? கோவிலுக்கு போய் விளக்கேற்றாம சாப்பிட மாட்டேனே...!''

''மறந்துட்டேன் வினயா! மழை கொட்டுதே... அவசியம் போகணுமா?''

''புயலே வந்தாலும் போவேன்... இட்லி வைக்கவா?''

''போதும்மா... அந்த அங்காள பரமேஸ்வரி சீக்கிரம் உன் விஷயத்திலே கண்ணைத் திறக்கணும். நீயும்தான் ரெண்டு வருஷமா விடாம விளக்கேத்தறே... கருணை வைக்கலியே!''

''போம்மா... நான் ஒண்ணும் மாமாவை நினைச்சு விளக்கேத்தலே...!'' சிணுங்கலும், நாணமுமாய் சொன்னாள்.

வாய் விட்டு சிரித்தாள் கமலம்.

''எங்கப்பன் குதிருக்குள் இல்லைன்னு சொன்னது இதைத்தான் வினயா!''

''போம்மா... உனக்கு எப்பவுமே விளையாட்டுத்தான்! மாமாவை பத்து வருஷத்துக்கு முன்னாடி பார்த்தது. இப்ப எப்படி இருப்பார்னே தெரியாது. அப்புறம் எப்படி?''

''உன் வயசெல்லாம் தாண்டி வந்தவடி நான்! போதும் எல்லாத்தையும் எடுத்துடு...!'' கையைக் கழுவினாள்.

''என்னம்மா... அதுக்குள்ளே எந்திரிச்சிட்டே?''

''பசிக்க மாட்டேங்குது வினயா... வயசாய்டுச்சில்லே... அளவோட சாப்பிடறது நல்லது தானே?''

''அதுக்காக, குழந்தை மாதிரி சாப்பிடணுமா? டாக்டர் கிட்டே போய் ஒரு செக்கப் பண்ணிக்கலாம்!''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். அந்த மாத்திரையை எடுத்துக் கொடு!''

''இந்த விஷயத்தில் மட்டும் நான் உன் ஆலோசனையை என்னைக்குக் கேட்டிருக்கேன்? கோவிலுக்கு போய் வந்ததும் ஹாஸ்பிடல் போகிறோம்... அவ்வளவுதான்! இந்தா... இந்த மாத்திரையைப்

போட்டுக்கிட்டு படுத்து ரெஸ்ட் எடு!''

''சின்ன விஷயத்தை பெரிசாக்குவியே... சரி... சரி... கோவிலுக்குப் போகும் போது மறக்காம குடை எடுத்துக்கிட்டுப்போ!''

''சரிம்மா...'' என்றவாறு தன்னறைக்குள் சென்றாள்.

மரப்பீரோவின் ஒரு பக்கம் முழுக்க கண்ணாடி பதிக்கப்பட்டிருந்தது. தலையில் சுற்றியிருந்த டவலை உருவினாள்.

அலை அலையாய் அடர்த்தியான கூந்தல் கருமேகம் போல் இடைதாண்டிப் பரவியது.

அந்த கிராமத்துப் பெண்களுக்கு வினயாவின் கூந்தல் மீது பொறாமை உண்டு. அவளுக்கிருப்பதுப்போல் தங்களுக்கு நீளமாய் இல்லையே என்கிற ஆதங்கம்.

நீளமான கூந்தல் வினயாவிற்கு தனி அழகை தந்தது.

கஸ்தூரி மஞ்சள் பூசியதில் மினுமினுத்த முகத்தில் சின்ன ஸ்டிக்கர் பொட்டு கூடுதல் அழகைத் தந்தது.

ஈரக் கூந்தலை லூஸாக பின்னலிட்டு, தோட்டத்தில் பறித்து தொடுத்திருந்த குண்டு மல்லிகைச் சரத்தை சூட்டிக் கொண்டு தன்னை இப்படியும், அப்படியுமாய் கண்ணாடியில் பார்த்தாள்.

பிரமாத அழகியில்லை. ஆனால் தெய்வீக அழகு குடி கொண்டிருந்தது.

'அம்மா... என்னை இன்னும் கொஞ்சம் நிறத்துடன் பெற்றிருக்கலாம்.'

மனதில் அடிக்கடி தோன்றும் இந்த விஷயத்தை அம்மாவிடமே பலமுறை கேட்டிருக்கிறாள்.

'உனக்கென்னடி ராஜாத்தி! என்ன குறை உனக்கு? நிறத்திலே என்ன இருக்கு? அதுவும் நீ ஒண்ணும் கறுப்பு இல்லையே! புதுநிறமா... லட்சணமாதானே இருக்கே?' என்பாள்.

வினயா கோவிலுக்கு புறப்படு முன் அவளைப்பற்றி சிறு குறிப்பு.

அவளுக்கு அம்மா மட்டுமே! அவளுக்கு பத்து வயதாய் இருக்கும் போதே அப்பா பாண்டியன் பாம்பு கடித்து இறந்து விட்டார். சொந்தமாய் கொஞ்சம் நிலபுலன் உண்டு. பாண்டியன் இறந்த பிறகு, அவைகளை குத்தகைக்கு விட்டு, அதில் வரும் வருமானத்தை வைத்து குடும்பத்தை நடத்தி வந்தாள் கமலம். வாழ்க்கையை நடத்த அந்த வருமானம் போதுமானதாகவே இருந்தது. அதிலேயே மிச்சம் பிடித்து மகளை நன்றாகப் படிக்க வைத்தாள். நகைகளை வாங்கி சேமித்தாள்.

அவர்கள் இருந்தது கும்பகோணத்தையொட்டியிருந்த சிறு கிராமத்தில். வினயா கும்பகோணத்திற்கு சென்றுதான் கல்லூரியில் படித்தாள்.



மகளை ஒழுக்கமாய், உயர்வான நல்ல எண்ணங்களுடன் வளர்த்திருந்தாள்.

வினயாவுக்கு கடவுள் பக்தி அதிகம். சமையலில் கெட்டி. வீட்டை சுத்தமாய், அழகாய் வைத்துக்கொள்வாள். தோட்டம் வளர்ப்பில் ஈடுபாடு அதிகம். வீட்டைச் சுற்றி ஓரளவு இடம் இருந்தது. அதில் பின்புறம் காய்கறி செடிகளும், மா, வாழை, சப்போட்டா மரங்களும், முன்புறம் பூச்செடிகளுமாய் நந்தவனமாக்கியிருந்தாள்.

வீட்டைச் சுற்றி பசுமையாய் இருந்ததே மனதிலுள்ள சோர்வுகளை அகற்றி அமைதியாய் வைத்திருந்தது. கமலத்திற்கு ஆஸ்துமாவும் பிரஷரும் இருந்தது. சாப்பிட்டு மாத்திரைப் போட்டு படுத்து விட்டால்... வினயா தன் நேரங்களை செடி கொடிகளுடன் செலவிட வந்து விடுவாள். மென்மையான மன உணர்வுகளைக் கொண்ட பெண்.

''அம்மா... வரட்டுமா?'' அர்ச்சனைக் கூடையுடன் கிளம்பினாள் வினயா.

''குடை எடுத்துக்கிட்டியா?''

''எடுத்துக்கிட்டேன்ம்மா!''

''சீக்கிரமா வந்துடு!''

''சரிம்மா!''

நீண்ட கூந்தல் இடுப்பு அசைவிற்கேற்ப நடனமாட சென்ற மகளைப் பார்த்து பெருமூச்சு விட்டாள்.

'திருமண வயதாகி விட்டது. நல்ல வரனைப் பார்த்து புகுந்த வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டால்... அவளின் பெரும் பாரம், கடமை முடிந்து விடும். ஆனால் அவள் மனதில் அரியணை ஏறியிருப்பது கமலத்தின் அண்ணன் மகன். முறைப் பையன் என்பதாலேயே அவனுக்குத்தான் மணமுடிக்கணும் என்றில்லையே! பட்டணத்து வாசமும், படிப்பும் இந்த அத்தை குடும்பத்தையே மறக்கடித்து விட்டிருக்க நிறைய வாய்ப்பிருக்கிறதே! இவளானால்... அவனையே நினைத்துக் கொண்டு... நடக்கக் கூடிய காரியமா? வினயா வரட்டும்... இதைப்பற்றி இன்றே மனம் விட்டு பேசிவிட வேண்டும்.

சற்றே கண்ணயர்ந்தாள்.

இரண்டு நிமிடம் சென்றிருக்காது.

''போஸ்ட்!'' என்ற குரல் கேட்டது. தொடர்ந்து ஈரம் படர்ந்த இன்லன்ட் வந்து விழுந்தது.

முகவரி எழுதப்பட்டிருந்த கையெழுத்தை வைத்தே அது அண்ணன் சவுந்தர பாண்டியனிடமிருந்து என்றுப் புரிந்தது.

அவளுக்கு எழுத படிக்கத் தெரியாது.

'வினயா வரட்டும்' என்று காத்திருந்தாள்.

"மாமாவிடமிருந்து வந்திருக்கும்மா!" கடிதத்தைப் பார்த்ததுமே உற்சாகமானாள்.

"பிரிச்சுப் படி வினயா!"

"இதோ..." அவசர அவசரமாய் பிரித்தாள்.

"அன்புள்ள தங்கை கமலத்திற்கு!

நலம்... நலமறிய ஆவல்!

இரண்டு மாதமாய் என்னிடமிருந்து கடிதம் வராமல் குழம்பிப் போயிருப்பாய்! தவறாக எண்ணாதே. கமலம், இங்கு உன் அண்ணிக்கு உடல்நிலை சரியில்லை. இப்போது பரவாயில்லை. அதனால் தான் கடிதம் எழுத முடியவில்லை.

என் மருமகள் வினயா எப்படியிருக்கிறாள்?"

சட்டென படிப்பதை நிறுத்திய வினயா வெட்கத்துடன் அம்மாவைப் பார்த்து சிரித்து விட்டு மறுபடி தொடர்ந்தாள்.

"நம் ஊரில் குல தெய்வ விசேஷ பூஜையில் இந்த வருடம் குடும்பத்தோடு கலந்து கொள்ள விரும்புகிறோம். சரியா தேதியை குறிப்பிட்டு எழுது. முதல் நாளே வந்து விடுகிறோம். உன் உடம்பை கவனமாக பார்த்துக் கொள்."

இப்படிக்கு,

சவுந்தரபாண்டியன்.

கமலத்தின் முகம் மலர்ந்தது. அவளை விட அதிக சந்தோஷத்தில் இருந்தாள் வினயா.

"அண்ணனை பார்த்து எவ்வளவு நாளாய்டுச்சு!"

"ஆமாம்மா... அத்தையப் பார்த்துக் கூட ரொம்ப நாளாய்டுச்சு!"

"அத்தையை மட்டுமா?"

"போம்மா... எப்பவும் கிண்டல் பண்ணிக்கிட்டு!" சிணுங்கி



"அப்பா! சமையல் அறைக்கு உள்ளே திருடன் புகுந்துட்டு அய்யோ அம்மான்னு கத்தறான்"

"உன் அம்மா சமைச்சு வச்சதை தின்னு தொலைச்சிட்டான் போல்"

-கு.அருணாசலம், தென்காசி.



னாள் கடிதத்துடன் எழுந்து ஓடிப் போனாள்.

'என் மருமகள் வினயா எப்படியிருக்கிறாள்?'

அந்த வரியை மீண்டும்... மீண்டும்... படித்துக் கொண்டேயிருந்தாள் வினயா.

## 4

மழையில் குளித்ததில் பச்சைபசேல் என்று சுத்தமாய் இருந்த தோட்டத்தை பார்க்கையில் உற்சாகம் கூடியது வினயாவிற்கு.

"லேசா... லேசா... நீயில்லாமல் வாழ்வது லேசா..." மெலிதாய் பாடிக் கொண்டே உதிர்ந்திருந்த சருகுகளை பெருக்கி சுத்தம் பண்ணினாள்.

காற்றில் பற்றியிருந்த கயிறை விட்டு கீழே விழுந்து கிடந்தது கொடி சம்பங்கி.

"அடடா... என் செல்லமே... கீழே விழுந்துட்டியா?"

எடுத்து கயிற்றில் படர விட்டாள்.

நகர முற்பட்டவளை ரோஜாச் செடி அழைத்தது. முள்ளில் சேலை மாட்டியிருந்தது.

"என்னடா... பிடிச்சிழுக்கறே? உன்னை கண்டுக்காம போறேன்னு நினச்சிட்டியா? செக்கச் செவேர்னு இருக்கிற உன்னைப் பார்க்கும் போதெல்லாம் என் அத்தான் நினைவுதான் வரும் தெரியுமா?" அதனருகில் அமர்ந்து ரோஜா இதழில் அமர்ந்திருந்த மழைத் துளியை லேசாய் சுண்டி விட்டாள்.

"என் மாமாகிட்டேர்ந்து லெட்டர் வந்திருக்கு தெரியுமா? குடும்பத்தோடு இங்கே வரப்போறாங்களாம். அத்தானும் வருவார். பத்து வருஷம் கழிச்சு வரப்போறார். இப்ப எப்படியிருப்பார்? உயரமாய் வளர்ந்து, மீசையெல்லாம் வச்சுக்கிட்டு... ஹீரோ மாதிரி இருப்பாரில்லே? அவருக்கும் என்னைப் பார்க்கணும்னு ஆர்வமாயிருக்கும் இல்லே? நான் நல்லாயிருக்கேனா? என்னை அவருக்குப் பிடிக்குமா?"

காற்றில் ரோஜா தலையாட்டி சிரித்தது.

அவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த கமலத்தினுள் ஒரு பயம் முளைவிட்டது.

'கடவுளே... இந்தப் பெண் அளவுக்கு மீறி ஆசையை வளர்த்திருக்கிறாளே! சிறு வயதில் முடிச்சுப் போட்ட எத்தனையோ பந்தங்கள் சிறுசுகள் தலையெடுக்க... எடுக்க காணாமல் போய் விடுகிறதே! பெரியவர்கள் ஆசைப்பட்டால் மட்டும் போதுமா? இவளைப் போல் அவனுக்கும் ஆசையிருந்திருந்தால்... இந்த பத்து வருடத்தில் எத்தனையோ தடவை இவளைப் பார்க்க வந்திருப்பானே? அண்ணன்

வேறு மருமகள் என்று இவள் ஆசைக்கு நெய் ஊற்றுகிறார். எல்லாம் என் மகளின் எண்ணப்படி நடக்கணும் தாயே பரமேஸ்வரி! சிறு பெண்... தோல்வியை தாங்கிக் கொள்ள மாட்டாள். மனம் போல் மாங்கல்யத்தைக் கொடு!' குல தெய்வத்திடம் மானசீகமாய் வேண்டிக் கொண்டாள்.

அந்த அலுவலகம் குட்டி நட்சத்திர ஓட்டலைப் போல்... நவீனமாய், அலங்காரமாய் இருந்தது. தரையில் முகம் தெரிந்தது. ஒவ்வொரு மூலையிலும் போன்சாய் மரங்கள். மாடர்ன் உடையணிந்த யுவதிகளும், டை கட்டின இளைஞர்களும் தப்பித்தவறிக் கூட தமிழில் பேசவில்லை.

பார்க்கிங்கில் தன் கைனடிக்கை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்துக் கொண்டிருந்த ஷீலாவை லிப்ட்டிலிருந்து வெளிப்பட்ட ரெப்ரசென்டேடிவ் லாரன்ஸ் ஏக்கத்துடன் பார்த்தான்.

ஷீலா இரண்டு வருடமாய் அங்கு பணிபுரிகிறாள். பணியில் சேர்ந்த புதிதில் அவனால் மிகவும் கவரப்பட்டாள் ஷீலா. ஒரு நாள் லாரன்ஸ் அவளிடம் நாகரீகமாக தன் மனதையும் வெளிப்படுத்தினான்.

சில கணங்கள் அவனையே மவுனமாகப் பார்த்தவள் சிரித்து விட்டாள்.

''ஸாரி மிஸ்டர் லாரன்ஸ்... எனக்கு அந்த ஐடியாவே இல்லை!'' என்றாள்.

''உடனே பதில் சொல்ல வேண்டாம் ப்ரண்ட்ஸாக பழகுவோம். என் கேரக்டர் உங்களுக்கு பிடிக்கும் என்று நம்புகிறேன். அதன் பிறகு...''

''ஸாரி... லவ்னா... லவ்வோட முடிஞ்சுப் போகிற விஷயமில்லை. அதற்கடுத்து நிறைய இருக்கிறது. எனக்கு கேரக்டர் மட்டுமல்ல... பேமிலி பேகிரவுண்டும் முக்கியம். நான் பணத்துக்காக ஆசைப்படலே. பட், ஐ லைக் லோன்லி. உங்க வீட்லே அம்மா, அப்பா, ஒரு விதவை அக்கா, கல்யாண வயசுல ரெண்டு தங்கைகள், படிக்கிற தம்பின்னு குடும்பம் மொத்தமும் உங்க கையை எதிர்பார்த்துக்கிட்டிருக்கு. அதை நான் தப்புன்னு சொல்லலே! பட், வாழ்க்கையை பிரச்சினையில்லாம அனுபவிக்கணும்னு ஆசைப்படறவ நான்! எந்த பிக்கல் பிடுங்கலும் இல்லாம, குடும்ப பாரத்தை சுமக்கிற கடமையில்லாம இருக்கிற அலையன்ஸ்தான் என் சாய்ஸ். நான் பளிச்சுனு பேசிடற கேரக்டர். ப்ளீஸ்... டோண்ட் மிஸ்டேக் மீ!'' என்று அழகாய் அவன் மூக்கை உடைத்தவள்.

அவள் கோணத்தில்... அவளின் உள்ளக்கிடக்கைகளை வெளிப்



படுத்தினாள். லாரன்ஸுக்கு வலித்தாலும் அவள் எதிர்பார்ப்பை தவறென்று எண்ண முடியவில்லை. ஷீலா ஒரு சுதந்திரப் பறவை! தன் குடும்பக் கூட்டுக்குள் சிறைப்பட வேண்டும் என்று ஆசைப்படுவது முட்டாள்தனமல்லவா? அன்றோடு தன் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான். பழையபடி சகஜமாய் பேசுவான். என்றாலும் அவனைப் பார்க்கும்போதெல்லாம் ஷீலாவின் கண்களில் ஒருவித எகத்தாளம் தோன்றி மறையும். அதனால் முடிந்தவரை, பார்த்தும் பார்க்காததுப் போல் கடந்து விடுவான்.

இப்போதும் அதைத்தான் செய்தான்.

அவள் தன் சீட்டில் வந்தமர்ந்ததும் சொல்லி வைத்தாற்போல் போன் அலறியது.

''ஹலோ'' என்றாள் எடுத்து.

''ஹலோ ஷீலா.. நான்தான்!''

அந்தக் குரலை கேட்டதும் பட்டென ரிசீவரை வைத்தாள்.

மறுபடி...

மறுபடி...

மறுபடி...

எட்டாவது முறை கோபத்துடன், ''ஹலோ'' என்றாள்.

''ப்ளீஸ் ஷீலா... போனை வச்சிடாதே! ஏன் என் மேலே இவ்வளவு கோபம்?''

''உனக்கு தெரியாது?''

''தெரியாது... என்ன விஷயம் சொல்லு!''

''என்னை அலட்சியப்படுத்திட்டேயில்லே?''

''நானா? உன்னையா? அபாண்டமா பேசாதே ஷீலா!''

''யார் நானா? மார்னிங் நான் எழுந்து வந்து பார்த்தப்ப நீ இல்லே! அதுக்கு என்ன அர்த்தம்? அலட்சியம்தானே?''

''இல்லே ஷீலா... நான் அரைமணி நேரமா பால்கனியிலேயே தான் நின்னுக்கிட்டிருந்தேன். நீதான் வரலே. அப்புறம் அம்மா கூப்பிட்டாங்கன்னு போய்ட்டேன். நீதான் லேட்டா எந்திரிச்சிருக்கே?''

''அதுக்கும் நீதான் காரணம்! கனவுல வந்து என்னை டிஸ்டர்ப் பண்ணிக்கிட்டிருந்தே! அதனால லேட்டா எந்திரிச்சேன். எனக்காக அரைமணி நேரம் கூட வெய்ட் பண்ண முடியலேன்னா... என் மேல் வச்சிருக்கிற லவ்வுக்கு ஆயுசு கம்மியா?''

''அபசகுனமா பேசாதே ஷீலா! என் உயிரே நீதான். என்னை தப்பா எடை போடாதே! கனவுல நான் உன்னை டிஸ்டர்ப் பண்ணினேனா? என்ன பண்ணினேன்?''

''ஜொள்ளு விடாதே!''

''ப்ளீஸ் சொல்லேன்!''

''நேர்ல வா சொல்றேன்''

''எப்ப?''

''இன்னைக்கு ஈவ்னிங்!''

''இன்னைக்கு ஈவ்னிங்கா?''

''ஏன் இழுக்கறே? இன்னைக்குத்தான்!''

''ஷீலா... ப்ளீஸ்டா... ஈவ்னிங் வேண்டாமே! அதுக்கு முன்னாடி நீ எப்ப வரச் சொன்னாலும் வர்றேன்.''

''ஏன்?''

''அம்மா என்னை சீக்கிரமா வரச் சொன்னாங்க ஷீலா. போயாகணும். நீ பர்மிஷன் போட்டுட்டு வந்துடு. இல்லேன்னா ஆப்டே லீவு போட்டுடு. நானும் லீவு போட்டுடறேன்!''

''ஸாரி... என்னால லீவும் எடுக்க முடியாது. பர்மிஷனும் போட முடியாது'' என்றாள் அழுத்தமாய்.

''அப்ப நாளைக்கு மீட் பண்ணலாமா?''

''லுக்... ஈவ்னிங் வர்றதுன்னா வா! இன்னைக்கு வரலேன்னா நான் வேற மாதிரி முடிவெடுத்திடுவேன்.''

''ப்ளீஸ் ஷீலா! அம்மாவுக்கு உடம்புக்கு முடியலே. ஹாஸ்பிடலுக்கு அழைச்சிட்டு போகணும். அப்பாய்ண்ட்மென்ட் கூட வாங்கிட்டேன். நான் எப்படி?'' என்றான் தவிப்புடன் தினகர்.

''அப்ப... நான் உனக்கு முக்கியமில்லை!''

''நான் அப்படி சொல்லலே... புரிஞ்சுக்க ஷீலா!''

''நான் உன்னை இன்னைக்கு ஈவ்னிங் பார்த்தே ஆகணும். நாம ரெகுலரா மீட் பண்ற அதே ஸ்பாட்ல வெய்ட் பண்ணுவேன்'' என்று பட்டென்று போனை வைத்து விட்டாள் ஷீலா.

டென்ஷனில் விரல் நகங்கள் பற்களுக்கு இரையாகின.

'எப்போதும்... அழைத்ததும் பூனைக்குட்டிப் போல் ஓடி வருபவன். இன்றென்ன புதிதாய் ஆர்க்யூ பண்ணுகிறான்? சரியில்லையே! சும்மா விடக்கூடாது.''

தினகர் பொறுமையிழந்து வாட்ச்சை பார்த்தான். அவன் அங்கு வந்து ஒன்றரை மணி நேரம் ஓடி விட்டது.

வருவதாகச் சொன்ன ஷீலாவை இன்னும் காணோம். போன் பண்ணலாம் என்றால் செல்போனை ஆப் பண்ணி வைத்திருக்கிறாள்.

போய் விடலாம் என்றால்... பயமாக இருந்தது. அவன் சென்ற பிறகு அவள் வந்து விட்டால்? தொல்லைதான்.

அவன் நின்றிருந்தது... ரெஸ்டாரெண்டின் வாசல்... போவோ



ரும், வருவோரும் அவனை வியப்பாய் பார்த்தபடி சென்றது சங்கடத்தை தந்தது.

மேலும் பதினைந்து நிமிடம் கரைந்த பின் டூவீலரில் வந்திறங்கினாள் ஷீலா.

'அப்பாடா' என்றிருந்தது தினகருக்கு.

''ஏன் ஷீலா இவ்ளோ லேட்?''

''ஏன் காத்திருக்க முடியலியா?''

''ஐயோ... அதுக்கில்லேடா... சரி உள்ளே வா!''

''ஸாரி... ரொம்ப தலைவலிக்குது... நான் வீட்டுக்குப் போகணும்!''

''அடடா... தலைவலியா? சூடா ஒரு காபி சாப்பிடலாம் ஷீலா... சரியாப் போய்டும்!''

''ப்ச்... வீட்டுக்கே போய் சாப்பிட்டுக்கறேன்.''

''நான் உனக்காகத்தான் ஷீலா வந்தேன்? ஒரு நிமிஷம் கூட இருக்காம புறப்படறேன்ங்கறியே!''

''வலிக்குதில்லே? எனக்கும் வலிச்சுது. அதையும் நீயும் அனுபவிக்கணும்னுதான் உன்னை வரச்சொன்னேன். எனக்காக நீ எந்த நிமிஷத்திலும் எதையும் செய்யத் தயாராயிருக்கணும். எனக்காக எதையும் தூக்கியெறியணும். நான் உன்கிட்டே எதிர்பார்க்கறது... அதைதான்! நாளைக்கு சந்திப்போம்!''

அவன் பதிலை எதிர்பாராதவளாய் வண்டியை ஸ்டார்ட் பண்ணி புறப்பட்டவளை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான் தினகர்.

## 5

''சங்கடமாயிருக்குங்க... நானே தேய்ச்சுக்கறேன்... விட்ருங்க!'' என்றாள் பிரபாவதி.

அவள் காலில் தைலத்தை தடவி இதமாய் மசாஜ் செய்துக் கொண்டிருந்த சவுந்தர பாண்டியன் சிரித்தார்.

''பல்வலி... ன்னு இதுவரை நான் டாக்டர் கிட்ட போனதே கிடையாது!''

''ஆச்சரியமா இருக்கே...!''

''ஆமாங்க... பல்செட்டுக்கு வலி ஏன் வருது?

- தேனி.எஸ்.மாரியப்பன்.



''ஏன் நான் தேய்ச்சு விட்டா என்ன? எதுக்காக சங்கடப்படறே?''

''நீங்க என் காலைத் தொட்டு... ஐயோ வேண்டாங்க விட்ருங்க!''

''அதனாலென்ன? பொண்டாட்டி காலைத் தொட்டா மரியாதை குறைஞ்சுப் போய்டுமா? சக தர்மினின்னு ஏன் சொல்றோம்? சகலத்திலும் ஒரு ஆணின் வாழ்க்கையில் சரி பாதியாகி விட்டதால் தானே? புருஷனுக்கு ஒரு பிரச்சினை என்றால் மனைவி மட்டும்தான் துடிச்சுப் போகணுமா? அந்த அன்பும், அக்கறையும், பரிதவிப்பும் ஆண்களுக்கும் உண்டு. புரிஞ்சுதா?''

''நான் என்ன சொன்னாலும் கேட்கப் போவதில்லைங்கறதை மட்டும் புரிஞ்சுக்கிட்டேன். போதும் விடுங்க!''

சவுந்தரபாண்டியன் ஹாட்பேகை எடுத்து ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்தார்.

''இன்னைக்காவது நீ ஹாஸ்பிடல் போயிருக்கலாம்.''

''நானும் போறதாகத் தானே இருந்தேன்? தினகர்தான் ஆபீஸ்லே முக்கியமான வேலையிருக்கு. இன்னைக்கு வரமுடியாது. நாளைக்கு போகலாம்னு சொல்லிட்டான்!''

"அப்பவே நீ எனக்கு போன் பண்ணி இருக்கலாமே! கடையை பையனை பார்த்துக்க சொல்லிட்டு நான் வந்து கூட்டிட்டு போயிருப்பேனே?''

''அந்தப் பையன் ஏற்கனவே கல்லாப் பெட்டியிலே கை வச்சவன். அவனை நம்பி விட்டுட்டு வர்றது சரியா இருக்காதே! என்ன இப்ப? வலி குறைஞ்சுப் போச்சு. தேவைப்பட்டா நாளைக்கு ஹாஸ்பிடல் போய்க்கறேன்!''

''அடிக்கடி கால் வலியால அவதிப்படறீயே பிரபா? கண்டிப்பா டாக்டரிடம் போயே ஆகணும். நாளைக்கு கடையை மூடிட்டே வர்றேன்'' என்ற சவுந்தர பாணடியன் யானைகவுனியில் சொந்தமாக மரக்கடை வைத்திருக்கிறார். சொந்தமாய் வீடு, நிலபுலன்கள் என்று ஓரளவு வசதியான வாழ்க்கை. ஒரே மகன் தினகர். தனியார் நிறுவனத்தின் மேனேஜராக பணிபுரிகிறான்.

வாசலில் பைக் சப்தம் கேட்டது.

''தினகர் வந்துட்டான். வந்ததும் காபி குடிக்கணும் அவனுக்கு'' எந்திரிக்க முற்பட்டவளை கைப்பிடித்து மறுபடி அமர்த்தினார் சவுந்தர பாண்டியன்.

''இன்னும் அஞ்சு நிமிஷம் முடியட்டும். ஒத்தடம் கொடுத்து முடிச்சிடறேன். என்ன அவசரம் இப்ப?''

''காபி போடணுங்க!''

''தினகர் அஞ்சு நிமிஷம் வெய்ட் பண்ணட்டுமே!''



''கால்வலி எப்படிம்மா இருக்கு?'' என்று கேட்டபடி அவர்கள் அருகில் வந்தான் தினகர்.

''பரவாயில்லேப்பா...!'' என்றாள் பிரபாவதி.

''என்ன பரவாயில்லே? நான் வீட்டுக்கு வரும் போது வலியிலே துடிச்சிட்டிருந்தா உங்கம்மா! ஏம்பா... ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டுட்டு உன்னால வரமுடியாதா? இவ ஒருத்தி படுத்துட்டா நம்ம பொழப்பு நாறிப் போய்டும்...'' என்றார் கோபமாக.

''இ... இல்லேப்பா... முக்கியமான வேலையிருந்தது... வர முடியலேப்பா!''

''விடுங்க... பெரிசு பண்ணிக்கிட்டு. அவன் என்ன ஊரையா சுத்திட்டு வர்றான்? முக்கியமான வேலை இருந்திருக்கு. வர முடியாம போய்டுச்சு. கொஞ்சம் பொறு தினகர். காபி போட்டு எடுத்துட்டு வர்றேன்!''

''வேண்டாம்மா... டைமாய்டுச்சே! ஒரேயடியா சாப்பாடு சாப்பிட்டுக்கறேன்!''

''இன்னைக்கு டிபன்தான்! உனக்கு பிடிச்ச சப்பாத்தி. சென்னா மசாலா! முகம் கழுவிட்டு வா... சூடா போட்டுத் தர்றேன். ஏங்க நீங்களும் சாப்பிட்டுக்குங்க!''

''மாவை நான் உருட்டித் தர்றேன்!''

''உங்களுக்கெதுக்குங்க சிரமம்? வேணாம் நானே பார்த்துக்கறேன்!''

''எனக்கெந்த சிரமமும் இல்லே பிரபா! நீ சும்மாயிருந்தாலே போதும்!'' சவுந்தர பாண்டியன் மாவை உருட்ட தயாரானார்.

அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தினகருக்கு வருத்தமாய் இருந்தது.

'பாவம் அம்மா! எனக்காக மெனக்கெடுக்கிறாள். அளவற்ற பாசம் வைத்திருக்கிறாள். ஆனால், அவளுக்கு என்னால் சமயத்தில் உதவ முடியவில்லையே! மாலை நேரம் முழுக்க காத்திருந்ததிலேயே கரைந்துப் போய் விட்டதே! ஷீலா கொஞ்சம் அனுசரித்து நடந்திருக்கலாம்.''

''டிரஸ் மாத்திட்டு வா தினகர்! சூடா சாப்பிட்டாதான் கூடுதலா ரெண்டு சாப்பிடுவே!''

தாயின் கரிசனத்தில் நெகிழ்ந்துப் போனான்.

ஐந்து நிமிடத்தில் சாப்பிட அமர்ந்து விட்டான்.

''நீங்களும் சாப்பிட்டுக்குங்க... மீதிய நான் பார்த்துக்கறேன்.''

சவுந்தரபாண்டியனும் மகனுடன் அமர்ந்தார்.

''அம்மா... நாளைக்கு கண்டிப்பா நாம ஹாஸ்பிடல் போய்டலாம்!''

''ஒண்ணும் வேணாம். நீ உன் வேலைய கவனி. நான் கடைய மூடிட்டு அவளை கூட்டிட்டுப் போறேன்.''

''ஏம்ப்பா... என் மேலே கோபமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே... உன் ஆபீஸ் சூழ்நிலை அப்படியிருக்கப்ப உன்னை கோவிச்சு என்ன ஆகப்போகுது? ஆனா, உங்கம்மாவுக்கு தேவை ரெஸ்ட்டு. வீட்டு வேலை அது இதுன்னு செய்யாம ஃபுல் ரெஸ்ட் எடுக்கணும்.''

''அப்ப... வேலைக்கு ஒரு ஆள் போட்டுடலாம்!''

''நான் சொல்ல வந்தது வேற...''

''என்னப்பா?''

''சீக்கிரமே உன் கல்யாணத்தை முடிக்கணும்!''

''அ...அப்பா... கல்யாணமா?''

''இதுக்கேன்டா அலர்றே?''

''கொஞ்ச நாள் போகட்டும்ப்பா...!''

''உனக்கு இருபத்தெட்டு வயசு முடிஞ்சு பத்து மாசமாயாச்சு... ஞாபகமிருக்கா? இதுவே லேட்டு!''

தினகருக்கு சப்பாத்தி இறங்கவில்லை.

'ஷீலாவைப் பற்றி சொல்லி விடலாமா? இதுதான் சந்தர்ப்பம்! ஆனால், எப்படி எடுத்துக்கொள்வார்கள்? அம்மாவுக்கு வேறு உடம்பு சரியில்லை'.

''என்ன தினகர் தட்டையே பார்த்திட்டிருக்கே? சாப்பிடு... இன்னொரு சப்பாத்தி போடவா?''

''வேண்டாம்மா... போதும்!''

''அ... சொல்ல மறந்துட்டேனே... இன்னைக்கு உன் அத்தைக்கிட்டேர்ந்து லெட்டர் வந்தது தினகர்!''

''அத்தையா? எந்த அத்தை?''

''நல்ல கேள்வி! உனக்கு எத்தனை அத்தைப்பா இருக்காங்க?

---



''வயதானாலே, குழந்தை மாதிரின்னு சொன்னதை என், தாத்தா தப்பா, புரிஞ்சிகிட்டார்.''

''ஏன், இப்போ என்னாச்சு?''

''வேற ஒண்ணுமில்ல போலியோ, சொட்டு மருந்து கொடுக்கத்தான், அழைச்சிகிட்டு போக சொல்றாரு!''

-பூவை அருள்தாசன்.





எனக்கு இருக்கிறதோ ஒரே தங்கச்சிதானே?''

''ஓ... கமலம் அத்தைய சொல்றீங்களா?''

''ஆமாம்! அடுத்த வாரம் நீ நாலு நாள் லீவு போட வேண்டி வரும்!''

''லீவா? நாலு நாளா? எதுக்குப்பா?'' என்றான் ஆச்சர்யமாய்.

''கமலம் வரச்சொல்லி எழுதியிருக்கா! நம்ம குல செய்வ பூஜை! பெரிய திருவிழாவா கொண்டாடுவாங்க. இந்த வருஷம் குடும்பத்தோட வர்றதா வேண்டிக்கிட்டேன்.''

''நான் வரலேப்பா... நாலு நாள் லீவெல்லாம் ஆபீஸ்ல தர மாட்டாங்க!'' என்று உடனடியாக மறுத்தான்.

''அப்படின்னா... அப்படிப்பட்ட வேலையே உனக்கு வேணாம். ராஜினாமா பண்ணிடு. எனக்கு குல தெய்வ பூஜைதான் முக்கியம்!''

''அ...ப்,,,பா!'' மிரட்சியுடன் பார்த்தான்.

''பொழைக்க வழியா இல்லே? என் கடைய பார்த்துக்க. உன் சம்பளத்தை விட ரெண்டு மடங்கு சம்பளம் கிடைக்கும்.''

''நா... நான் வர்றேன்பா!'' என்றான் மெல்லியக் குரலில்.

அமர்த்தலான சிரிப்பு வெளிப்பட்டது சவுந்தரபாண்டியனிடமிருந்து.

ஜன்னல் வழியே பாதி வளர்ந்த நிலா அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது.

பிரபாவதி கொடுத்த வெற்றிலையை வாய்க்குள் அடக்கிக் கொண்டார் சவுந்தரபாண்டியன்.

''நாளன்னிக்கு நீயும் நானும் கடைக்கு போய்ட்டு வரலாம் பிரபா!''

''எதுக்குங்க?''

''கமலத்துக்கும், வினயாவுக்கும் துணிமணிகள் வாங்கணும்''

''நானே சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேங்க! வினயா படிச்சுட்டு சும்மாதான் இருக்காளாமா?''

''கமலத்தை தனியே விட்டுட்டு அவ எப்படி வேலைக்கு போவாள்?''

''எப்படி இருந்தாலும் ஒரு நாள் அம்மாவை விட்டு பிரிஞ்சு புருஷன் வீட்டுக்கு போய்தானே ஆகணும்?''

''அதென்ன புருஷன் வீட்டுக்கு? நம்ம வீட்டுக்குன்னு சொல்லு!''

''சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன்! ஊர் ஊரா சல்லடைப் போட்டு தேடினாலும் நம்ம பிள்ளைக்கு வினயா மாதிரி ஒரு



பொண்ணு கிடைப்பாளா, என்ன? ஏங்க... கமலம் மட்டும் அந்த ஊர்ல எதுக்குங்க தனியே கிடந்து அல்லாடணும்? நாம யாரு? அசலாரா? நம்ம கூடவே வந்து இருக்கலாமில்லே?''

''அவ புருஷன் வாழ்ந்த வீடு! சாகிற வரை என் இருப்பிடம் இந்த வீடுதான்னு சொல்லிட்டா. அவளை மாத்தறது ரொம்ப கஷ்டம் பிரபா!''

''வினயாதான் இந்த வீட்டு மருமகள்னு நீங்களும், நானும் முடிவுப் பண்ணியாச்சு. ஆனா தினகர் ஒப்புக்குவானா?''

''ஏன் அவனுக்கென்ன கேடு? வேணாம்னு சொல்லிடுவானா?''

''இது அந்தக்காலமில்லீங்க. பெத்தவங்க சொன்னதும் மறுப்பு சொல்லாம தாலிக் கட்டறதுக்கு?''

''அதான் ஊருக்குப் போறோமில்லே? வினயாவைப் பார்த்த பிறகு... அவ வேணாம்னு சொல்லிட முடியுமா? இந்த வீட்டுக்கு வினயாவைத் தவிர வேற யாரும் மருமகளா வந்துட முடியாது!'' என்றார் தெளிவாக.

நிலா பயந்து போய் மேகத்திற்குள் ஒளிந்துக்கொண்டது.

## 6

ஷீலாவையே விழியகலாது பார்த்துக் கொண்டிருந்தான் தினகர்.

பூக்களில் உள்ள அழகு மொத்தமும் அவளிடம் குடிகொண்டிருந்தது. பேசும் போது கூட விழுந்த கன்னக்குழிகள் காந்தத்தை பதுக்கியிருந்த கண்கள். கவர்ச்சியை உள்ளடக்கியிருந்த குமிழ் இதழ்கள். ஒழுங்கான பல்வரிசை. நிடுநிடுவென வளர்ந்திருந்த சந்தன நிற உடலுக்கு எந்த உடையும் பொருத்தமாய் இருந்தது. அவள் தலையை அசைத்து பேசும் போது விழுந்த கூந்தலை லாவகமாய் ஒதுக்கிய விரல்களின் அசைவில் கூட நளினம்.

இவளுக்காக... இந்த அழகுக்காக உலகையே தானமாக கொடுப்பதில் தவறில்லை என்று தோன்றியது.

முன்தினம் அவளை காய்ச்சி எடுத்ததெல்லாம் அவளை பார்த்ததும் மாயமாய் மறைந்து விட்டது.

ஷீலாவைப் பொறுத்த வரை தினகர் தலையாட்டி பொம்மை, காலையே சுற்றிவரும் நாய்க்குட்டி.

பேசுவதை நிறுத்திவிட்டு தினகரையே பார்த்தாள். அவனின் விழிகள் அவள் முகத்தைவிட்டு அசையவே இல்லை.

''என்னாச்சு?''

''.....''

"தினகர் உன்னைத்தான்!"

"அ... என்ன... என்ன... ஷீலா?"

"என்னாச்சு... என்னையே பார்த்துக் கொண்டிருக்கே?"

"நீ ரொம்ப அழகாயிருக்கே ஷீலா!"

"ம்..." என்றாள் ஸ்டைலாய் பார்த்தபடி.

"நீ என்னை காதலிக்கிறேங்கிறதே எனக்கு கவுரவமான விஷயம் ஷீலா!"

"ம்..." என்றாள் ஸ்டைலாய் பார்த்தபடி.

அழகான புன்னகை மூலம் அந்த வார்த்தையை அங்கீகரித்தாள்.

"உன்னை பார்க்காம, உன்கிட்டே பேசாம என்னால இருக்கவே முடியலே. நல்ல வேளை... என் அதிர்ஷ்டம். எதிர்வீட்டிலேயே நீயிருப்பது!"

"அவ்ளோ லவ்வா என் மேலே?"

"அதை வார்த்தையால சொல்லிட முடியாது. அந்தளவுக்கு பாசம் வச்சிருக்கேன்."

"இந்த அன்பு எப்பவும் மாறக்கூடாது தினகர்!"

"அது முடியறக் காரியமில்லே ஷீலா. என் பேச்சு, மூச்சு, உயிர், உணர்வு எல்லாமே நீதான்!"

"இப்படி நீ பேசறது எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு தினகர். நாம எந்த சூழ்நிலையிலேயும் பிரியக்கூடாது. நாம வேற வேற மதத்தை சேர்ந்தவங்க. கண்டிப்பா ரெண்டு பேர் சைடிலேயும் பலத்த எதிர்ப்பு வரும்.

நாம சேரணுங்கறதுக்காக ரெண்டு பேரும் எதையும் தூக்கியெறிய தயாராயிருக்கணும். என்ன சொல்றே?"

"நீ எனக்கு வேணும். உன்னைத்தவிர வேறெதுவும் எனக்கு முக்கியமில்லே ஷீலா!"



"உன் மாமியாருக்கு ஆபரேசன் உடனே பண்ணியாகனும்"

"சரிங்க டாக்டர் சார்! ஹால்ல மாலை போட்டு மாட்டறதுக்கு இப்பவே நான் அவர்களை ஒரு போட்டோ பிடிச்சிறேன்"

-ஜக்கி, லட்சுமி புரம்.



"என்னைப் பார்க்காம இருக்க முடியாதுங்கறே. அடுத்த வாரம் நாலு நாள் லீவு போட்டுட்டு கும்பகோணம் போகணும்ங்கறே! அதெப்படி?"

"அப்பா வற்புறுத்தல் ஷீலா! எனக்குப் போகவே பிடிக்கலே. அந்த நாலு நாளும் உன்னைப் பிரிஞ்சு எப்படித்தான் இருக்கப் போகிறேனோ?"

"போகாம அவாய்ட் பண்ண முடியாதா?"

"அப்பாவை சமாளிக்க முடியாது! ஆனா, தினமும் நாலஞ்சு முறை போன் பண்ணுவேன். செல்லை ஆன்லேயே வச்சிரு!"

"சரி!"

"நான் ஒண்ணு கேப்பேன்... பதில் சொல்வியா?"

"என்ன?"

"நீ என்னை எந்தளவு நேசிக்கறே?"

ஒரு நிமிடம் அவனையே ஆழமாய்ப் பார்த்தவள் சொல்லத் தொடங்கினாள்.

"நீ இப்ப சொன்னியே பார்க்காம இருக்க முடியாது. பேசாம இருக்க முடியாதுன்னு... அதைவிட ஆயிரம் மடங்கு உனக்காக உருகறவ நான்! உன் மனசுல என்னைத்தவிர வேற யாரும் இருக்கக்கூடாது. முக்கியத்துவம் தரக்கூடாது. அப்படி இருந்துட்டா... நான் நேசிக்கிற தினகரை கொலை பண்ணவும் தயங்க மாட்டேன்! ஏன்னா... தினகர் எனக்கு மட்டுமே சொந்தமானவன்!"

"தாங்ஸ் மை டியர்... தாங்க்ஸ்..." என்றான் நெகிழ்ந்துப் போய் அவள் கைகளை பற்றிக்கொண்டு.

காய்கறிகள் அடங்கிய கூடை கனத்தது. வெயில் உக்கிரமாய் சுட்டெரித்தது. புடவை தலைப்பால் பொங்கிய வியர்வையை துடைத்தபடி ஒரு மரத்தடி நிழலில் நின்றாள் பிரபாவதி. நா உலர்ந்துப் போனது.

எதிரில் இருந்த கடையில் ஜூஸ் குடிக்கலாமா என்று தோன்றிய எண்ணத்தை உடனே மாற்றிக்கொண்டாள்.

கடையில் ஈ மானாவாரியாக மொய்த்துக் கொண்டிருந்தது.

'வேண்டாம்... இங்கு குடிப்பதை விட சாக்கடை தண்ணீரையே குடித்து விடலாம். பதினைந்து நிமிடம் நடந்தால் வீட்டிற்கே போய் விடலாம்!'

"என்ன இங்கே நிக்கறீங்க?"

குரல் கேட்டு திரும்பினாள்.

எதிர் வீட்டு ரோஸ்லின். அவள் கையிலும் காய்கறிகள் அடங்கிய பிரம்பு கூடை. ஒரு கையில் குடை.

''வெயிலுக்கு ஒதுங்கினேன்.''

''கவனிச்சேன். தாகமாயிருக்கா? என்கிட்டே தண்ணீர் இருக்கு, வேணுமா?''

ஆச்சர்யமாய் பார்த்தாள் பிரபாவதி.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? வெயில் மண்டையைப் பிளக்குது. வெளியே எங்கே கிளம்பினாலும் ஒரு பாட்டில் தண்ணீரோட தான் கிளம்புவேன். இந்தாங்க!''

''ரொம்ப நன்றிங்க!'' அவள் தந்த பாட்டிலை கவிழ்த்து மடக், மடக்கென குடித்துவிட்டு தந்தாள். ''இனி நானும் தண்ணீர் பாட்டிலோடதான் வெளியே கிளம்புவேன்.''

''போகலாமா?''

''ம்...''

ஒரே குடையில இருவரும் ஒண்டிக் கொண்டு நடந்தனர்.

''உங்க பொண்ணுக்கு எப்ப கல்யாணம்?''

''பார்த்துக்கிட்டிருக்கோம். கூடிய சீக்கிரமே நடந்திடும்.''

''உங்க வீட்லே எப்ப?''

''பொண்ணு ரெடியா இருக்கா. என் நாத்தனார் பொண்ணுதான்!''

''அப்புறமென்ன, முடிச்சிட வேண்டியதுதானே?''

''மூணு மாசத்துக்குள்ளே முடிச்சிடுவோம்!''

''உங்க பேகிலேர்ந்து அந்த பாக்கெட் கீழே விழறமாதிரி இருக்கு. இப்படிக் கொடுங்க... என் பேக்ல வச்சுக்கறேன்'' என்று கேட்டு வாங்கிக் கொண்டாள் ரோஸ்லின்.

பேசிக்கொண்டே தெருவில் நுழைந்த இருவரையும் அவரவர் வீட்டு பால்கனியில் நின்றபடி சைட் அடித்துக் கொண்டிருந்த தினகரும், ஷீலாவும் பார்த்தனர்.

இருவரின் முகத்திலும் பரவசம்.

''சீக்கிரம்மா... பசிக்குது... சமையல் முடிஞ்சுதா?'' ஷீலா நச்சரித்தாள்.

''இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கடி... முடிஞ்சிடும். அடடா'' என்றபடி அப்போதுதான் பார்த்தாள். ரோஸ்லின்.

சமையல் மேடை மீது பிரபாவதியின் மைதா மாவு பாக்கெட்.

''என்ன அடடா?''

''இது எதிர் வீட்டுக்காரம்மாவோடது. மறந்துப் போய் நானே



எடுத்துக்கிட்டு வந்துட்டேன். கொஞ்சம் இதை கிளறிவிட்டுக்கிட்டிரு. இதை கொண்டு போய் கொடுத்துட்டு வந்திடறேன்!''

''நீ ஆடி அசைஞ்சு போய்ட்டு வர்றதுக்குள்ளே, எனக்கு பசியெல்லாம் பறந்துடும். நீ சமையலை முடி. நான் கொடுத்துட்டு வர்றேன்!''

''நீயா?''

''ஏன்... நான் போனா என்ன?''

''நாம இந்த தெருவுக்கு குடிவந்து ஏழு வருஷமாய்டுச்சு. இது வரை ஒரு நாள் கூட அந்தம்மாகிட்டே நீ பேசினதே இல்லையே!''

''இப்ப பேசிட்டா போச்சு!'' காஷுவலாய் சொல்லி விட்டு பாக்கெட்டுடன் நகர்ந்தாள்.

''இப்படியேவா போகப்போறே? வேற டிரஸ் மாத்திக்க!''

''பட்டுப்புடவை கட்டிப்போகவா? சும்மா அலம்பல் பண்ணாதே! இப்ப நைட்டிதான் தேசிய உடை!'' அம்மாவின் கூற்றை அலட்சியப்படுத்திவிட்டு போய்விட்டாள்.

காலிங்பெல் கதறலைத் தொடர்ந்தது. கதவைத்திறந்த தினகர் திறந்த வாயை மூடவில்லை.

''ஹேய்... ஷீலா... நீயா? வாட் எ சர்ப்ரைஸ்?''

''ஷ்... உங்கம்மா இருக்காங்களா?''

''உள்ளே வா!''

''கால் மீ... வாங்க!''

''யாரது தினகர்?'' சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள் பிரபாவதி.

''உ...உள்ளே வாங்க மேடம்! அம்மா எதிர்வீட்லேர்ந்து வந்திருக்காங்க!'' சொல்லிவிட்டு நல்லப் பிள்ளையாய் நகர்ந்தான்.

''வாம்மா... ரோஸ்லினோட பொண்ணுதானே நீ? இப்பதான் உன்னை ரொம்ப பக்கத்தில் பார்க்கிறேன். உள்ளே வா!''

''இதை அம்மா கொடுத்துட்டு வரச் சொன்னாங்க ஆன்ட்டி. மறந்துப் போய் அம்மா எடுத்துட்டு வந்துட்டாங்களாம்!''

வாங்கிக் கொண்டவள் ''காபி சாப்பிடறியாம்மா?'' என்றாள்.

''ம்ஹூம்... லஞ்ச் சாப்பிடப் போகிறேன். ஐஸ் வாட்டர் மட்டும் கொடுங்க!''

பிரபாவதி கிச்சனுக்குள் செல்ல... பின்னேயே ஷீலாவும் சென்றாள்.

''கிச்சன் கொஞ்சம் சின்னதாகயிருக்கே... கஷ்டமாயில்லே?''

''பழகிப் போச்சும்மா... இந்தா!'' ஐஸ் வாட்டரை நீட்ட... பருகினாள்.

சுற்றி நோட்டமிட்டாள். தட்டிலிருந்த கேரட்களில் ஒன்றை எடுத்து கடித்தவள், பாதி சாப்பிட்டு விட்டு தட்டிலேயேப் போட்டாள்.

பிரபாவதிக்கு அவள் செய்கை பிடிக்கவில்லை.

''உங்க முகத்திலே ஏன் ஆன்ட்டி இவ்ளோ பிம்ப்பிள் மார்க்ஸ் இருக்கு?'' என்றாள் அவளின் பருக்களின் தழும்பை பார்த்து.

''நான் எதையும் பெரிசா எடுத்துக்கறதில்லேம்மா!'' என்றாள் எரிச்சலை கட்டுப்படுத்தி.

''நீங்க பியூட்டி பார்லர் போகலாமே! இல்லேன்னா நான் சொல்ற பியூட்டி டிப்ஸை ஃபாலோ பண்ணீங்கனா... ஒரே மாசத்திலே க்யூர் ஆயிடும்...'' என்று எதிராளியின் மன உணர்வுகளை உணராமல் அவள் பாட்டுக்கு பேசிக்கொண்டே போனாள்.

'சே... என்ன பெண்ணிவள்... கொஞ்சம்கூட இங்கிதம் தெரியாதவள்.'

''சரி... ஆன்ட்டி... நான் போறேன். பசிக்குது... பை!''

'சீக்கிரம் போய்த் தொலை!'

ஹாலில் ஒரு ஓரமாய் நின்றிருந்த தினகரின் பின்புறம் செல்லமாய் தட்டிவிட்டு சென்றாள்.

எச்சில் வழிய அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் தினகர்.

## 7

பிரேயர் முடிந்து சர்ச்சை விட்டு வெளியே வந்தார் செபாஸ்டியன்.

''செபாஸ்டியன்... செபாஸ்டியன்!'' யாரோ அழைக்கும் குரல் கேட்க... திரும்பினார்.

லூர்துசாமி! அவரின் தூரத்து உறவினர்.

''ஹலோ லூர்து சார்... பார்த்து ரொம்ப நாளாச்சே... நல்லாயிருக்கீங்களா?''

''நல்லாயிருக்கேன். நீங்க, ரோஸ்லின், குழந்தைங்க எல்லோரும் நல்லாயிருக்கீங்களா?''

''கர்த்தரோட கிருபையால எல்லோரும் நலமே!''

''நானே உங்க வீட்டுக்கு வரணும்னு நினைச்சிட்டிருந்தேன். நல்ல வேளை... இங்கேயே பார்த்துட்டேன்!''

''என்ன விஷயம் லூர்து சார்?''

''எல்லாம் நல்ல விஷயம்தான்! ஷீலாவுக்கு நல்ல அலையன்ஸ் பார்த்துக்கிட்டிருக்கேன்னு சொன்னீங்களே, பார்த்து முடிச்சிட்டீங்களா?''



''இல்லே...''

''அருமையான அலையன்ஸ் ஒண்ணு இருக்கு!''

''யாரு?''

''நம்ம தேவ சகாயத்தோட மச்சினன். மகிமை ராஜைத் தெரியுமில்லே?''

''நல்லாத் தெரியுமே! நல்ல மனுஷன். கார், பங்களான்னு வசதியா வாழ்ந்தவர். வேளாங்கண்ணிக்கு போகிறப்ப குடும்பத்தோட கார் ஆக்ஸிடன்ட் ஆகி, பையனைத்தவிர அத்தனை பேரும் இறந்துட்டாங்களே!''

''அந்த பையனைப் பத்திதான் சொல்ல வர்றேன். குடும்பம் மொத்தத்தையும் பறிகொடுத்துட்டு, இங்கிருக்கப் பிடிக்காம சொத்தெல்லாம் வித்துட்டு அமெரிக்காவுக்கு போய்ட்டான். அங்கேயே படிச்சு, வேலையை தேடிக்கிட்டு இப்ப மும்பையிலே செட்டிலாய்ட்டான். பையனை இப்ப பார்க்கணுமே. அவ்வளவு ஸ்மார்ட்டா இருக்கான். பணத்துக்கும் பஞ்சமில்லே...

பதினைஞ்சு நாள் முன்னாடி என்னைத் தேடி வந்திருந்தான். கல்யாணம் பண்ணிக்கப்போகிறேன் அங்கிள். நல்ல குடும்பத்துப் பொண்ணா பார்த்து சொல்லுங்கன்னு சொன்னான். எனக்கு சட்டுனு ஷீலா ஞாபகம்தான் வந்தது. நல்ல பையன், அழகு, பணம், ஷீலா ஓகோன்னு இருப்பா. இந்தா இதுதான் அந்தப் பையன் விக்டரோட போட்டோ!''

வாங்கிப் பார்த்த செபாஸ்டியன் அசந்து போய்விட்டார்.

''மேகி...''

''என்னம்மா?''

பால்கனியிலே வச்சிருக்கிற ரோஜாச் செடியெல்லாம் தண்ணியில்லாம வாடிக்கிடக்கு. தண்ணி ஊத்திட்டு வாம்மா!''

''போம்மா, நான் படிச்சிட்டிருக்கேன்!''

''நல்லப் பொண்ணில்லே...!''

''படிக்கக்கூட விட மாட்டீங்களா இந்த வீட்லே? சே! ஏன் அந்த மகாராணி ஊத்தக் கூடாதா? தினமும் ரோஸை பறிச்சு வச்சுக்கத் தெரியுதில்லே?'' முணு முணுத்துக் கொண்டே மாடிப்படியேறியவள், ஷீலா பால்கனியில் நின்றபடி சைகை மூலம் யாரிடமோ பேசுவது தெரிய...

வியப்புடன் விரைந்துச் சென்றவளின் கண்களில் எதிர் வீட்டு பால்கனியும், தினகர் அனுப்பி வைத்த பறக்கும் முத்தத்தையும் பார்த்து திகைத்து விட்டாள்.

வந்த சுவடே தெரியாமல் இறங்கி வந்தவள்... அதன் பின் படித்த எதுவும் மனதில் பதியவில்லை. இதயம் ஒருவித பயத்துடன் துடித்தது.

மழை நின்று... சூரியன் தன் பணியை தொடர ஆரம்பித்திருந்தது.

தோட்டத்தில் இறங்கி வேலை செய்துக் கொண்டிருந்தாள் வினயா.

''என்னடி பண்ணிக்கிட்டிருக்கே?'' குரல் கொடுத்தாள் கமலம்.

''சம்பங்கி கிழங்கை நட்டுக்கிட்டிருக்கேன்ம்மா!''

''அதுக்காக வெயில்ல காயணுமா? பொழுது போனப்பிறகு பார்க்கக் கூடாதா? ஏகப்பட்ட வேலையிருக்கே? நாளைக்கு மாமா குடும்பத்தோட வர்றாரே!''

''நாளைக்குத்தானே? இன்னும் நேரமிருக்கு. கொல்லையிலே சருகுகள் குமிஞ்சிருக்கு. அவங்கள்லாம் வரும் போது சுத்தமாயிருக்க வேணாமா? இந்த வேலையெல்லாம் முடிச்சிட்டுதான் இடியாப்பத்துக்கு மாவரைக்கணும்.''

''என்னவோ செய்!''

வினயா கொல்லைப்புறம் சென்று விட்டாள்.

பத்து நிமிடம் சென்றிருக்கும்.

''வாங்க.., வாங்கண்ணா, வாங்கண்ணி... வினயா... வினயா யார் வந்திருக்காங்கன்னு வந்து பாரு!'' பதட்டமும், உற்சாகமுமாய் அம்மாவின் குரல் அவளை எட்ட...

போட்டது போட்டபடி ஓடி வந்தவள்... ஒரு கணம் மூச்சு விட மறந்துப் போனாள் வினயா.

மாமா, தன் குடும்பத்தோடு வந்து விட்டார்.

சவுந்தர பாண்டியனும், பிரபாவதியும் அவளிருந்த கோலத்தைப் பார்த்து சிரித்து விட்டனர்.

''என்ன கோலமிது வினயா? கையெல்லாம் மண் அப்பிக்கிடக்கு... என்னப் பண்ணிக்கிட்டிருந்தே?'' என்றாள் பிரபாவதி.

''எப்பவும் தோட்டமே கதின்னு கிடப்பா... முதல்ல... குளிச்சிட்டு வா... போ...!'' அம்மா விரட்ட... ஓடினாள்.

ஓடும் போதே கடைக்கண்ணால் தினகரை பார்த்து விட்டே ஓடினாள்.

'என் அத்தானா இது? நடிகர் விக்ரம் மாதிரி எவ்ளோ அழகாயிருக்கார்!' சிறகில்லாமல் பறந்தாள்.

தினகர் முகத்தை சுளித்தான்.



'உடம்பெங்கும் மண்ணோடு... கசகசவென்று கருப்பாய்... இவளையா அம்மாவும், அப்பாவும் வாய் ஓயாமல் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தார்கள்?

முதல் பார்வையிலேயே அவளை பிடிக்காமல் போயிற்று தினகருக்கு.

''நாளைக்கு வர்றதா சொன்னீங்களேண்ணா. நீங்க இன்னைக்கு வரப்போறது தெரிஞ்சிருந்தா... வினயா சீவி சிங்காரிச்சிட்டு உங்களை வரவேற்க தயாரா இருந்திருப்பா!''

''திருவிழா முடிஞ்சு ரெண்டு நாள் இருந்துட்டுப் போலாம்னு நினைச்சிருந்தோம். உன் மருமகனுக்கு ஆபீஸ்ல ஆடிட்டிங் டைமாம். திருவிழா முடிஞ்ச மறுநாளே கிளம்பியாகணும். சரி, இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே? அதான் நேத்தே புறப்பட்டுட்டோம்.''

தினகர் மனதிற்குள் பொருமினான்.

'மருமகனாம்... நானா, இவர்களுக்கா? வயசாச்சுதே ஒழிய பேசற இங்கிதம் வரலை இவருக்கு!'

''தினகரை பார்த்து எம்புட்டு வருஷமாய்டுச்சு? சின்னப்புள்ளையாப் பார்த்தது. கிடுகிடுன்னு அழகா வளர்ந்து நிக்குது. ஏன்ப்பா ஒண்ணுமே பேச மாட்டேங்கறே?''

''அ... அது... ஒண்ணுமில்லே... நல்லாருக்கீங்களா?''

''எனக்கொன்னும் குறையில்லே தம்பி. உங்களை எல்லாம் பார்த்ததும் பத்து வயசு குறைஞ்சிட்ட மாதிரி சந்தோஷமாயிருக்கு!''

''ஓ... அப்படியா?'' என்ற வார்த்தையோடு வாயை மூடிக் கொண்டான்.

கிராமத்து சூழ்நிலை, அங்குள்ள படிக்காத மக்கள், காற்றோடு கலந்திருந்த பச்சை வாசனை, நகர்ப்புற வசதியற்ற வீடு, முக்கியமாய் வினயா... எதுவுமேப் பிடிக்காமல் ஒவ்வொரு நிமிடத்தையும் நெட்டித்தள்ளிக் கொண்டிருந்தான் தினகர்.

வகை வகையாய் சமைத்து பரிமாறியதை மாமாவும் அத்தையும் கேட்டு கேட்டு வாங்கி சாப்பிட்டனர்.

''அடடா... அடடா... சிக்கனையும், மட்டனையும் நீ இவ்வளவு அருமையா சமைப்பியா? என் மருமகளோட கைப்பக்குவம் வேறு யாருக்கு வரும்? கமலம் சீக்கிரமா உன் பொண்ணை என் வீட்டுக்கு அனுப்பி வை!''

''வேண்டாம்னா சொல்லப் போறேன்? முறைப்படி அழைச்சிட்டுப் போவீங்கன்னுதானே காத்திருக்கிறேன்?''

''ஆடி முடிஞ்சதும் நாள் குறிச்சிடலாம்!''

தினகர் பாதி சாப்பாட்டோடு எழுந்துக் கொண்டான்.

வினயா சங்கடத்துடன் தாய் மாமனைப் பார்க்க, அவர் தினகரி டம், ''என்ன தினகர் எந்திரிச்சிட்டே?'' என்றார்.

''வயிறு வலிக்குது... போதும்!''

அவன் சரியாக சாப்பிடாததில் வினயாவுக்கு நிறைய வருத்தம்.

அங்கிருந்த மூன்று நாட்களும் அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்பதில் வினயாவுக்கு ஏகப்பட்ட கவலை.

வலிய சென்று பேசவும் பயம். அவனோ எப்போது பார்த்தா லும் தனியே சென்று செல்போனில் பேசிக் கொண்டிருப்பான். ஏதா வது பேசலாம் என்று நினைத்த நினைப்பிலும் மண் விழும்.

ஒரு வழியாய்... திருவிழா முடிந்து ரெயிலேறிய போதுதான் 'அப்பாடா' என்றிருந்தது தினகருக்கு.

''ஏன்டா... வினயா கிட்டே போய்ட்டு வர்றேன்னு ஒரு வார்த் தைக் கூட சொல்லாம கொள்ளாம எங்களுக்கு முன்னே கிளம் பிட்டே?'' என்று கேட்டார் சவுந்தர பாண்டியன்.

''ஆமா... அவளுக்கு அது ஒண்ணுதான் குறை?''

''அவகிட்டே என்னக் குறையை கண்டே?''

''அது எனக்கு தேவையில்லாதது. ஆனா என் கோபமெல்லாம் உங்க ரெண்டு பேர் மேலேதான்!''

''என்னடா சொல்றே?''

''பின்னே என்ன? வாய்க்கு வாய் அவளை மருமகள் மரும கள்னு கேலிப் பண்றீங்க?''

''இதிலே கோபப்படவோ, கேலிப்பண்ணவோ என்னடா இருக்கு? உள்ளதைதானே சொன்னோம்? என்னைக்கிருந்தாலும் வின யாதான் என் வீட்டு மருமகள்!''

''என்னப்பா உளர்றீங்க?''

''உளறலே தினகர் உண்மையத்தான் சொல்றேன். வினயாதான் இந்த ஜென்மத்துல உன் மனைவின்னு வைத்தீஸ்வரன் கோவில் நாடி ஜோதிடத்திலேயே சொல்லிட்டாங்க!''



''இவ்வளவு நாள் ஜெயில்ல இருந்தேன்... அந்த ஆளு வந்து பார்த் தானா?''

''என்ன அவசரம்? இன்னும் நிறைய கேசுல உள்ளே போகப்போ றாரே... அப்ப வந்து பார்த்துக்கறேன்னு சொல்றாருங்க!''

-கிரிஜா மணாளன்



''எனக்கு இந்த ஜோஸியம், ஜாதகம் இதிலெல்லாம் நம்பிக்கை யில்லை!'' என் கல்யாண விஷயத்திலே அதுக்கெல்லாம் முக்கியத்து வம் தரமாட்டேன்!''

''பரவாயில்லை... அப்படியே பண்ணிடலாம். எப்படியோ வினயா என் மருமகளா வந்தா... அதுப்போதும். என்ன பிரபா வாயைப் பார்த்துக்கிட்டு... படுத்துத் தூங்கு. இவனை பேச விட்டா பேசிக்கிட்டேதான் இருப்பான். நீ படு!'' என்று சவுந்தர பாண்டியன் படுத்து விட்டார்.

தினகர் உறக்கம் வராமல் தவித்துப் போனான்.

## 8

இரவு ஏழு மணி!

ஹென்றி வெளியே சென்றிருந்தான். ரோஸ் லின் மேகியோடு உறவினர் வீட்டுக்குச் சென்றி ருந்தாள்.

மடியில் தட்டு வைத்து சிப்ஸை கொறித்த படி டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள் ஷீலா.

இன்று எப்படியாவது பேசி விடுவது என்ற முடிவுடன் ஹாலுக்கு வந்தார் செபாஸ்டியன்.

பக்கத்தில் வந்தமர்ந்தவரைப் பார்த்து, ''சிப்ஸ் சாப்பிடறீங்களா டாடி?'' என்றாள்.

''வேண்டாம்மா!''

''....!''

''எனக்கு ரிடையர் ஆக இன்னும் நாலு வருஷம்தான் இருக்கு ஷீலா!''

''தெரியுமே!''

''உனக்கும் இருபத்தி நாலு வயசாய்டுச்சு. கல்யாணம் பண்ணி டலாம்னு இருக்கேன்!''

ஷீலா அப்பாவைப் பார்த்து சிரித்தாள்.

''என்னப்பா திடீர்னு?''

''அப்படியில்லேம்மா... இப்ப உனக்கு பண்ணி முடிச்சிட் டேன்னா அடுத்து மேகிக்கு பண்ண ஏற்பாடு பண்ணிக்க அவகாசம் கிடைக்கும்.''

''கொஞ்ச நாள் போகட்டும் டாடி... இப்ப வேண்டாம்!''

''ஒரு அருமையான அலையன்ஸ் வந்திருக்கு ஷீலா. நாம தேடி னாலும் கிடைக்காத வரன்... வீடு தேடி வந்திருக்கு. பேரு விக்டர்....'' என்றபடி விளக்கமாய் சொன்னார்.

''இதோ... இதுதான் விக்டரோட போட்டோ... பார்!''

வாங்கி சுவாரஸ்யமின்றி பார்த்து விட்டு திருப்பிக் கொடுத்தாள்.

''என்னம்மா சொல்றே? பையன் நல்லாயில்லே?''

''என்னை இம்ப்ரஸ் பண்ணலே? இப்ப கல்யாணம் வேணாம் டாடி!'' கொஞ்ச நாள் போகட்டும். ப்ளீஸ்...''

''உனக்கும் வயசாகுதே ஷீலா! நல்ல அலையன்ஸை ஏன் வேணாங்கறே?''

''டாடி... ப்ளீஸ் ட்ரைடு அன்டர்ஸ்டான்ட் மீ! எனக்கு கல்யாணம் பண்ணிக்கற மூட் இப்ப இல்லே... இப்ப என்னை விட்ருங்க!'' ரிமோட்டை கோபமாய் சோபாவின் மீது எறிந்து விட்டு மாடியேறிப் போனாள்.

மகளின் பேச்சிலும், செய்கையிலும் ஒரு வித பதட்டம் இருப்பதை உணர்ந்த செபாஸ்டியனின் புருவங்கள் உயர்ந்தன.

''பிரபா... அந்த பேப்பரை எடு!''

''...?''

''பிரபா... உன்னைத்தான்!''

''அ... என்னங்க?'' திடுக்கிட்டு திரும்பினாள்.

''நான் கூப்பிட்டது கூட காதிலே விழாம அப்படியென்ன யோசனை? அந்தப் பேப்பரை எடு!''

கொடுத்தாள்.

''ஏன் பிரபா டல்லாயிருக்கே? கால் வலிக்குதா?''

''அதெல்லாமில்லீங்க. தினகரை நினைச்சாதான் கவலையாயிருக்கு!''

''ஏன்... அவனுக்கென்ன?''

''வினயாவுக்கு என்ன குறை? அற்புதமான பொண்ணு. ஆனா, அவனுக்கு வினயாவை பிடிக்கலையோன்னு தோணுது!''

''நானும் அதைப்பத்தி யோசிச்சேன். வினயா கிராமத்துப் பொண்ணு. அதனாலேயே அவமேலே அவன் இன்டரஸ்ட் காட்டலே. மத்தப்படி அவளோட பழகிப்பார்த்தா... அவனுக்கு பிடிச்சிடும்.''

''பிடிவாதமா மறுத்தா என்னங்க பண்றது? பாவம் வினயா ரொம்ப ஆசை வச்சிருக்கா!''

''என் பிடிவாதத்தை காட்டுவேன். இதோ பார் பிரபா! வினயா தினகருக்குதான். இந்த முடிச்சை யாராலும் அவிழ்க்க முடியாது. கண்டதையும் போட்டு குழப்பிக்காம இரு!''



''ஹூம்... ஒரே ஒரு பிள்ளையைப் பெத்துட்டு நிம்மதியில்லாம இருக்கோம்...!'' பெருமூச்சு விட்டபடி நகர்ந்தாள் பிரபாவதி.

''பேசினீங்களா? என்னங்க சொன்னா?'' ரோஸ்லின் கணவரிடம் ஆர்வமாய் கேட்டாள்.

''ம்... பேசினேன்... இப்ப கல்யாணம் வேண்டாமாம். அவளாக கேட்கறப்ப பண்ணிவச்சா போதுமாம்!''

''என்னது... அவளாக கேட்கறப்ப பண்ணனுமா? இதைக் கேட்டுட்டு சும்மாவா விட்டீங்க?''

''வேறென்ன பண்ண முடியும்? ஆனா, ரோஸ்லின் அவ நமக்கு தெரியாம என்னமோ தப்புப்பண்றா...''

''என்னங்க சொல்றீங்க?''

''எனக்கு சொல்லத் தெரியலே... பட், சம்திங் ராங்! அவளை க்ளோஸா வாட்ச் பண்ணனும்!''

மேகிக்கு உதடுகள் துடித்தன.

'சொல்லி விடலாமா? நான் பார்த்த விஷயத்தை சொல்லி விடலாமா? ஏன் சொன்னேன்னு ஷீலா என்னை அடித்து விட்டால்? அதற்காக சொல்லாமலும் இருக்க முடியாதே!'

''மேகி... பெரியவங்க பேசறப்ப பக்கத்திலே வரக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல... போ!'' அப்பா அதட்டவும், எழுந்த தைரியம் அப்படியே அமிழ்ந்துப் போனது.

டென்ஷனாயிருக்கும் சமயம் எப்போதாவது சிகரெட் பிடிப்பார் செபாஸ்டியன்.

ஊர் அடங்கிவிட்ட இரவுப் பொழுதில் அவர் மட்டும் தனியே அமர்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்.

மாடியின் ஹாலின் விளக்கு எரிந்துக் கொண்டிருந்ததை மாடிப்படி வழியே ஊடுருவிய வெளிச்சம் சொன்னது.

'ஷீலா அணைக்க மறந்து விட்டாளோ?' சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் வைத்து அழுத்தி சாகடித்து விட்டு மெல்லப் படியேறினார்.

கிசுகிசுப்பாய் யாரிடமோ ஹாலிலிருந்த போனில் பேசிக் கொண்டிருந்தாள் ஷீலா.

'இந்நேரத்தில் யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாள்?' செபாஸ்டியனுக்கு வியப்பை மீறி பயம் ஏற்பட்டது.

''ரொம்ப நாளைக்கு இப்படியே காலம் தள்ள முடியாது. எங்க வீட்டிலும் எனக்கு அலையன்ஸ் பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க. இப்போதைக்கு கல்யாணப் பேச்சை எடுக்காதீங்கன்னு சொல்லிட்டேன்

னாலும் இனி, இது தொடரும். நானும் இதே மாதிரி சொல்லி தடுத்துக்கிட்டே இருக்க முடியாது. ஏன்னு காரணம் கேப்பாங்க. உனக்குத்தான் தெரியுமே.... எனக்கு விளக்கம் சொல்ல பிடிக்காது.''

''....''

''ஒரு மாசத்துக்குள்ளே நாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணியாகணும். அதுக்கான ஏற்பாட்டை பண்ணு.''

''....''

''என் செல்போனை சார்ஜ் பண்ணிட்டிருக்கேன். காலைல அதுல கூப்பிடு; வச்சிடறேன்!'' ரிசீவரை வைத்து விட்டு தன் அறைக்குச் சென்று கதவை தாழிட்டுக் கொண்டாள்.

குப்பென்று வியர்த்து விட்டது செபாஸ்டியனுக்கு.

'ஜீஸஸ்... ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணப் போகிறாளாமா? யாரை? அதனால்தான் விக்டரை அவாய்ட் பண்ணினாளா? எவ்வளவு தைரியம்... விடக் கூடாது!''

செபாஸ்டியன் காலர் ஐடியில் கடைசியாய் அழைத்த நம்பரை பார்த்தார். செல்போன் நம்பர் அது!

ரீ டையல் பண்ணினார்.

''ஹாய்... என் எதிர்வீட்டு தேவதையே... மறுபடி இந்த அத்தானின் நினைவு வந்து விட்டதா?'' என்றது ஆண்குரல்.

சட்டென்று கட் பண்ணியவருக்கு புரிந்துப் போயிற்று.

'எதிர்வீட்டு ராஸ்கலின் வேலையா இது?' கோபம் பொங்கியது.

காலையில் பிரச்சினை வெடித்தது.

சாப்பிட அமர்ந்த மகளிடம், ''இன்னைக்கு நீ ஆபீஸுக்கு போக வேண்டாம். உன்கிட்டே கொஞ்சம் பேசணும்'' என்று கண்டிப்புடன் பேசிய அப்பாவை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

''என்ன டாடி... அவ்வளவு முக்கியமான விஷயமா?''

''ஆமாம்!''

''என்ன சொல்லுங்க?''

''முதல்ல சாப்பிடு!''

''முதல்ல சொல்லுங்க?''

''சாப்பிடுன்னு சொல்றேன்ல? என்ன பார்த்துட்டே நிக்கறே? பரிமாறு!'' மனைவியை அதட்டினார்.

ஷீலா அவரையே ஆச்சர்யமாய் பார்த்தாள்.

'விஷயம் தெரிந்து விட்டதோ, எப்படி?'

அவர் அதட்டலில் சாப்பிட ஆரம்பித்தாள்.

''நீ நீங்க சாப்பிடலையா டாடி?''





''இல்லே...''

சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருந்தார்.

''இப்ப சொல்லு... யாரவன்?''

''யாரைக் கேக்கறீங்க?''

''நைட்ல பதினோரு மணிக்கு போன்ல பேசிட்டிருந்தியே... அவனை!''

''.....?!''

''எவ்வளவு நம்பிக்கை வச்சிருந்தேன்? நீயா இப்படி?''

''லிஸன் டாடி! நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்னு ஆபீஸுக்கு போக விடாம இப்படி பேசறீங்க?''

''செய்யறதையும் செஞ்சுட்டு என்ன தப்புப் பண்ணினேன்னா கேக்கறே? உனக்கு ரொம்ப இடம் கொடுத்துட்டோம். அதான் தப்புப் பண்றதுக்கூட உணராம பேசறே!''

''ரோஸ்லின்... நீ பேசாதே... போ!''

''அவ பேசறதை...''

''நீ போன்னு சொல்றேனே... சொல்லு ஷீலா... யாரவன்?''

''இதுக்கு பிறகும் மறைக்க விரும்பலே. நான் தினகரை நேசிக்கிறேன். அவரைதான் கல்யாணம் பண்ணிப்பேன்!'' என்றாள் தெளிவாக.

''ஷிட்... ஷீலா... அவன் வேற ரிலிஜன்...''

''ஜாதி, மதம் பார்த்துதான் காதலிக்கணும்னா... அதுக்குப் பேர் காதல் கிடையாது!''

பொங்கி வந்த கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டார்.

'ஷீலா பூமராங் மாதிரி. நமக்கே திருப்பி அடிப்பாள். அவளிடம் கனிவாய் பேசிதான் காரியத்தை சாதிக்க வேண்டும்.'

''சரி... ஷீலா... எனக்கும் புரியுது. ஆனா, நம்ம குடும்பத்துக்குன்னு ஒரு கவுரவம் இருக்கு. இதுவரை நம்ம பரம்பரையிலே யாரும் மதம் விட்டு மதம் கல்யாணம் பண்ணினதில்லை. உனக்க

---

''அநியாயமா ஒரே ஒரு ஓட்டுல நீங்க தோத்துப் போனதுக்கு யாரு காரணம் தலைவரே''

''அந்த ராட்சசி... என் ஒய்ஃப் தான் எனக்கு போட்டுருக்க மாட்டாப்பா''!.

-கிரிஜா மணாளன்.





டுத்து மேகியிருக்கா. உன்னால அவ ப்யூச்சர் பாதிக்கக்கூடாது. தினகருக்கும் அவங்க சொந்தக்கார பொண்ணைப் பார்த்து முடிவுப் பண்ணிட்டாங்க. மத்தவங்க மனசை புண்படுத்தி வாழ்க்கைய துவங்கறதுலே அர்த்தமில்லே ஷீலா! விட்ரும்மா... நாங்க பார்க்கிற பையனை கல்யாணம் பண்ணிக்கிட்டு...''

''போதும்ப்பா... பேசினது போதும்! எவ்வளவு சுயநலமா பேசறீங்க? மேகிக்காக... நான் விரும்பாத வாழ்க்கையை வாழனுமா? நான் இந்த எதிர்ப்பையெல்லாம் எதிர்பார்த்ததுதான்! யாருக்காகவும் என் சந்தோஷத்தை விட்டுத்தர மாட்டேன். முடிஞ்சா உங்களை நீங்க மாத்திக்குங்க. மாத்திக்கலேன்னாலும் ஐ டோன்ட் கேர்! நான் மேஜர் என்னைக் கட்டுப்படுத்த யாருக்கும் ரைட்ஸ் இல்லே!''

திமிராய் பேசி விட்டு... எழுந்துச் சென்றாள்.

செபாஸ்டியனின் முகம் இருண்டு போனது.

## 9

அலுவலகம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த தினகர் ஒரு பிரளயத்தை எதிர்பார்த்தேச் சென்றான்.

ஷீலா வீட்டில் விஷயம் தெரிந்து பிரச்சினை வெடித்ததை... அவள் மூலமாக தெரிந்ததும், கண்டிப்பாய் அவளின் பெற்றோர் அவர்கள் வீட்டிற்கு வந்து விவகாரத்தை பெரிசு பண்ணியிருப்பார்கள் என்று புரிந்தது.

காதல் என்றால் எதிர்ப்பு இல்லாமலா? பேஸ் பண்ணிதான் ஆகணும். ஷீலாதான் என் மனைவி என்று முடிவு செய்தபின், பெற்றோரின் மனதை காயப்படுத்துவது தவிர்க்க முடியாதது. எங்கள் மனதை புரிந்து இரு வீட்டாரும் இறங்கி வந்தால் எல்லோருக்கும் சந்தோஷம். ஆனால், நடக்கிற காரியமா?

அவன் பைக்கை நிறுத்தி விட்டு வீட்டிற்குள் நுழையும் போதே அம்மாவின் விசும்பல் சத்தம் கேட்டது. அழுதழுது முகம் வீங்கியிருந்தது. சவுந்தரப்பாண்டியனின் முகத்தில் ஆக்ரோஷம்.

''இதோ வர்றாரே... உன் பிள்ளை!''

''டேய் பாவி... என்னடா இப்படி பண்ணிட்டே? நாங்க உனக்கு அருமை பெருமையாய் ஒரு பெண்ணை பார்த்து வச்சிருக்கப்ப... எப்படிடா அந்த மேனாமினுக்கியை பார்த்து தொலைச்சே?''

''அம்மா... ஒரு பெண்ணை அநாவசியமா பேசாதேம்மா!''

''பாருங்களேன்... அந்த நாய்க்காக பரிஞ்சுக்கிட்டு பேசறதை!''

''அம்மா... மறுபடியும் சொல்றேன்... ஷீலாவை நீங்க கண்டபடி பேசறதை என்னால அனுமதிக்க முடியாது!''

"என்னடா அனுமதிக்க முடியாது? அவளோட அம்மாவும் அப்பாவும் கால்ல விழாத குறையா கெஞ்சிட்டுப் போறாங்கடா, 'எங்க பொண்ணை, எங்ககிட்டே ஒப்படைச்சிடுங்க... உங்க பிள்ளை கிட்டே சொல்லி ஒரு நல்ல பதிலை சொல்லுங்கன்னு...' எவ்வளவு நெஞ்சழுத்தமிருந்தா, ஒரு கிறிஸ்தவப் பொண்ணை காதலிச்சிருப்பே? ஜாதி விட்டு ஜாதி காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்ட ஒரே காரணத்துக்காக தன் பொண்ணை தலை முழுகினவர் என் தாய் மாமன். அந்த பரம்பரையிலே வந்தவன்டா நான்! நாங்க சம்மதிக்க மாட்டோம்னு தெரிஞ்சும் நீ இப்படியொரு காரியம் பண்ணியிருக்கேன்னா... நாங்க உனக்கு வேண்டாம்னு முடிவுப் பண்ணிட்டே... அப்படித்தானே?"

"அப்பா... அவசரப்பட்டு பேசாதீங்க... எனக்கு உங்க மேலேயும் அம்மா மேலேயும் நிறைய பாசம் இருக்குப்பா. அதே சமயம் ஷீலா மேலேயும் ரொம்ப ஆசை வச்சுட்டேன். அவளை என்னால் மறக்க முடியாது. தயவுப் பண்ணி எங்க மனசை புரிஞ்சுக்கிட்டு கல்யாணம் பண்ணி வச்சிடுங்க!"

"அப்ப வினயா?"

"அவமுகம் கூட எனக்கு நினைவில் இல்லேப்பா! எனக்கு எல்லா வகையிலும் பொருத்தமானவ ஷீலாதான்! ஜாதி, மதம்னு பார்க்காம எங்களை சேர்த்து வைங்கப்பா... ப்ளீஸ்!" கை கூப்பினான்.

சவுந்தரபாண்டியன் மகனின் கையைப் பற்றிக் கொண்டார்.

"டேய்... ராஜா... உன்னை எப்படியெல்லாம் வளர்த்தேன்? என் ஒரே பிள்ளைடா நீ! என் கவுரவத்தை காப்பாத்தற கடமை உனக்கு தானே இருக்கு? வினயா நல்லப் பொண்ணு... உன் மேலே ரொம்ப பாசம் வச்சிருக்கா... நீ தான் அவளுக்குன்னு பேசி முடிவுப் பண்ணிட்டோம். அவளை ஏமாத்தாதே தினகர். உன் கால்ல வேணும்னாலும் விழறேன்!" சடாரென மகன் காலில் விழுந்தார்.

"என்னங்க..." என்று பிரபாவதி பதற...

"அப்பா..." என்றதிர்ந்தான் தினகர்.

"அப்பா ப்ளீஸ்... சங்கடப்படுத்தாதீங்க... எந்திரிங்க. வினயா ஏமாந்துடக் கூடாதுன்னு நீங்க நினைக்கிறீங்க! உங்க கவுரவத்தை காப்பாத்த நானும் ஷீலாவும் ஏமாறலாம்... அப்படித்தானே? என்னப்பா நியாயமிது? இறுதியா, உறுதியா சொல்றேன். ஷீலாவை ஏமாத்திட்டு நம்பிக்கை துரோகின்னு பெயர் வாங்கறதை விட, உங்ககிட்டே கெட்ட பெயர் வாங்க தயாராயிருக்கேன்!"

"அப்ப... அப்ப... என் பேச்சை கேக்கமாட்டே!"

"முடியாது!"

"பிரபா... பார்த்தியாடி... எப்படி பேசறான் பாரு! என்னை அசிங்கப்படுத்தறானே. வெளியே தலைகாட்ட முடியாமப் பண்ணப் போகிறானே... ஐயோ... ஆ... ஆ... பி...ர...பா...?" பேசிக் கொண்



டேயிருந்தவர்... மார்பை அழுத்திப் பிடித்தபடி சாய்ந்தார்.

பிரபாவதி அழுதபடியே இருந்தாள்.

சவுந்தரபாண்டியன் அபாய கட்டத்தை தாண்டி விட்டாலும் இன்னும் ஐ.சி.யு.வில் தான் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிவியர் ஹார்ட் அட்டாக். மறுமுறை வந்தால் பிழைப்பது கடினம் என்று டாக்டர்கள் எச்சரித்திருந்தனர்.

"கோவில், கோவிலா ஏறியிறங்கி வரம் வாங்கி உன்னைப் பெத்தது என் தாலியை பறிக்கத்தானா? அப்படியென்னடா பெத்தவங்களைவிட காதல் முக்கியமா போய்டுச்சு? அப்படியும் நாங்க பெரிய மனசுப் பண்ணி ஏத்துக்கற அளவுக்கு அந்த பொண்ணுக்கிட்டே என்ன இருக்கு? அழகு மட்டும் வாழ்க்கைக்கு போதுமா? பணிவும், பண்பாடும் இல்லாத பொண்ணு குடும்பம் நடத்த தகுதியில்லாதவ தினகர். உங்கப்பாவை என்கிட்டேர்ந்து பிரிச்சிடாதேப்பா. அவர் போய்ட்டா நான் மட்டும் உயிரோட இருப்பேன்னு நினைக்காதே!"

"அம்மா... இது ஹாஸ்பிடல் கொஞ்ச நேரம் சும்மாயிரு. என்னமோ ஊர்ல யாரும் செய்யாததை நான் மட்டும் செஞ்ச மாதிரி பேசிக்கிட்டு. எத்தனையோ பேரண்ட்ஸ் பிள்ளைங்க விருப்பத்துக்காக காலத்துக்கு ஏத்த மாதிரி தங்களை மாத்திக்கலே? நீங்க மட்டும் என்ன? என் விருப்பத்தை விட உங்க கவுரவத்தை தானே பெரிசா நினைக்கிறீங்க யோசித்து நல்ல முடிவு எடுக்க வேண்டியது நீங்க தான்! நானில்லை" என்றான் வெறுப்புடன்.

மகனின் பேச்சைக் கேட்டு அதிர்ந்துப் போய் விட்டாள் பிரபாவதி.

'அப்பா உயிருக்கு போராடற இந்த நேரத்திலும் மனசு மாறலையே! அந்தளவுக்கு என் பிள்ளைய மாத்திவச்சிருக்காளே சண்டாளி!'

தினகரின் செல்போன் சிணுங்கியது.

நம்பரைப் பார்த்ததும் காரிடாருக்கு நகர்ந்தான்.

"சொல்லு ஷீலா!"

"எப்படியிருக்கார் உங்கப்பா?"

"காப்பாத்திட்டாங்க... பட், மறுபடியும் வந்தா ஆபத்துன்னு சொல்லிட்டாங்க!"

"மனசு மாறிடுவியா தினகர்?"

"சேச்சே... ஏன் இப்படி பேசறே?"

"பெரிசுங்க இப்படித்தான் டார்ச்சர்தரும். அதைப்பார்த்து பயந்துடக் கூடாது. நாம நினைச்சதை அடையணும். ஷீலா தோற்கக் கூடாது!"

"ஷீலா... எனக்கு எல்லோரையும் விட நீதான் முக்கியம்.

உன்னை எந்த சந்தர்ப்பத்திலேயும் இழக்க மாட்டேன்.''

''தட்ஸ் குட்...''

ஷீலா வீடு திரும்பிய போது படு அமைதியாய் இருந்தது. இத்தனைக்கும் அப்பா, அம்மா, தம்பி, தங்கை அத்தனை பேரும் வீட்டில் இருந்தனர்.

மேகி இவளைப் பார்த்தாலே முகத்தை திருப்பிக் கொள்வதும், ஹென்றி வெறுப்புடன் வெறிப்பதும் வழக்கமாயிற்று.

ஷீலாவும் கவலைப்படவில்லை.

'இன்னும் எத்தனை நாள் இங்கிருக்கப் போகிறோம்? ஆடட்டும், ஆடட்டும்!' என்று அமைதி காத்தாள்.

மேகியும், ஹென்றியும் டி.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருக்க... எங்கோ பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்தார் செபாஸ்டியன்.

ரோஸ்லின் கிச்சனில் வேலை செய்துக் கொண்டிருந்தாள். அவ்வப்போது... கண்களை துடைத்தபடி.

ஷீலா உடைமாற்றி... ப்ரஷ்ஷாக வந்தாள்.

ப்ரிட்ஜை திறந்து தண்ணீரை குடித்தவளை ''ஷீலா'' என்றழைத்தார் அப்பா.

ஆச்சர்யமாய் திரும்பினாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவளிடம் பேசுகிறாரே!

''இப்படி வந்து உட்கார்!''

உட்கார்ந்தாள்.

''என்னம்மா முடிவுப் பண்ணியிருக்கே?''

''எதைப்பத்தி?''

''விக்டரை கல்யாணம் பண்ணிக்கறதைப் பத்தி!''

''டாடி... நீங்க படிச்சவர்தானே? இன்டீசன்டா நடந்துக்கறீங்களே! நான் தினகரைதான் கல்யாணம் பண்ணிப்பேன். இனிமே இதைப்பத்தி பேசாதீங்க. நீங்கதான் என்னை பெத்தீங்க. அதுக்காக என் வாழ்க்கை முழுக்க உங்க விருப்பப்படி ஆடணும்னு எதிர்பார்க்கறது... சேடிஸ்ட்!''

''சரிம்மா... இனி பேச மாட்டேன். உன் விருப்பம் எதுவோ அதையே செய்! ரோஸ்லின் டீ எடுத்துட்டு வா! ஷீலாவுக்கு ஹார்லிக்ஸ்'' என்று தன்னை இயல்பாக்கிக் கொண்டு குரல் கொடுத்தார்.

கண்களும், மூக்கும் மிளகாய் பழமாய் சிவந்திருக்க ட்ரேயில் பானங்களுடன் வந்தாள் ரோஸ்லின்.

செபாஸ்டியன் முதலில் ஷீலாவுக்கு எடுத்துக் கொடுத்தார். அடுத்து, ஹென்றிக்கும், மேகிக்கும் கொடுத்து விட்டு, மனைவிக்



கும் தந்து, தானொரு கோப்பையை எடுத்துக் கொண்டு, பருக ஆரம்பித்தார்.

''ஷீலா!''

''....''

''காதலிக்கறதை தப்புன்னு சொல்ற அரக்கன் இல்லேம்மா! ஆனா, எந்த ஒரு சந்தோஷமும் அடுத்தவங்களை பாதிக்காத அளவுக்கு இருக்கிறதுதானே மனுஷத்தனம்? ஆனா, உன் காதலால எத்தனை உயிர் பாதிக்குது?''

''இனி, இதைப்பத்தி பேச மாட்டேன்னு சொன்னீங்க?''

''ரெண்டு நிமிஷம்தான்... அதுக்குப் பிறகு பேச மாட்டேன். உன்னால, என் கவுரவம், மேகியோட வாழ்க்கை பாதிக்கறதை கூட விட்டுருவோம். ஆனா, தினகரோட பேரண்ட்ஸ் பாவம்! ஒரே ஒரு பிள்ளையப் பெத்துட்டு கண்ணீர் விடறாங்க. சவுந்தரபாண்டியன் ஹாஸ்பிடல்ல சீரியஸ் கண்டிஷன்ல இருக்கார். உங்க கல்யாணம் நடந்தா அவர் தன்னைத்தானே மாய்ச்சுக்குவார். அதுக்குப் பிறகு அந்தம்மா மட்டும் உயிரோட இருப்பாங்களா என்ன? அதுக்குக் காரணம் என் பொண்ணு ஷீலா! ஊரெல்லாம் உன்னைப்பத்தி பேசும். எப்பேர்ப்பட்ட பேரை எனக்கு வாங்கித்தரப் போகிறே? ரொம்ப தாங்க்ஸ் ஷீலா!''

''டாடி ப்ளீஸ்... சினிமா டயலாக் எல்லாம் பேசி என் மனசை மாத்திடலாம்னு மட்டும் கனவு காணாதீங்க. உங்க டைமையும், என் டைமையும் வேஸ்ட் பண்ணா... ஹேய்.. மேகி... எ... என்னாச்சு உனக்கு?'' பேசிக் கொண்டே எழுந்தவள் யதேச்சையாய் மேகியைப் பார்த்து பதறி விட்டாள்.

மேகியின் கண்கள் மேலே செருகி... வாயில் நுரைத்தள்ளிக் கொண்டிருந்தது.

ஹென்றியின் கண்களும் செருக ஆரம்பிக்க...

ஷீலா அதிர்ந்து விட்டாள்.



'பெண் வீட்டாருக்கு வசதி இல்லை... பெண்ணை வைக்க வேண்டிய இடத்தில் பூவை வெச்சியிருக்கிறாங்கள்''

''அதுக்காகப் பெண்ணின் கழுத்திலும் காதிலும் கூட பூச்சூடி அனுப்பணுமா?''.

எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

‘‘டாடி... மேகிக்கு ஸம்த்திங் ராங்...!’’

‘‘பதட்டப்படாதே... அவ செத்துக்கிட்டிருக்கா!’’ என்றார் செபாஸ்டியன் கண்கள் கலங்க.

‘‘எ... என்ன?’’

## 10

அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே ரோஸ் லின் சுருண்டு விழுந்தாள்.

‘‘ஐயோ... என்ன நடக்குது இங்கே?’’ உடல் நடுங்க அலறினாள் ஷீலா.

‘‘உனக்கு உன்னைப் பத்தி யோசிக்கவே இரு பத்தி நாலு மணிநேரம் போதாத போது எங்களைப் பத்தி யோசிப்பியா என்ன? இதுவரைக்கும் கவுரவமா வாழ்ந்துட்டேன். நாளைக்கு அந்த பிரபாவதியம்மா... உங்க பொண்ணால தானே என் புருஷனை இழந்தேன்னு கைநீட்டி பேசறதை தாங்கிக்க எனக்கு தெம்பில்லே ஷீலா!’’

‘‘அதுக்காக?’’ விழிகள் அகன்றன.

செபாஸ்டியனின் இயக்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் கட்டுப்பாட்டை இழக்க ஆரம்பித்தது.

‘‘நீ விரும்பிய வாழ்க்கையை ஆசீர்வதிக்கிற மன முதிர்ச்சி... எ... எனக்கில்லே. கடவுள் கொடுத்த உயிரை போக்கிக்க யாருக்குமே உரிமையில்லை. ஆ... ஆனா, வேற வழி தெரியலே ஷீலா! நாங்க குடிச்ச டீயிலே விஷம் கலந்துட்டோம். பயப்படாதே... உனக்கு விஷம் தரலே... கர்த்தர் எ... எங்களை... ம...ன்..னி...க்..’’ சரிந்து விழுந்தார் செபாஸ்டியன்.

‘‘டா... டீ... ஹெல்ப்... ஹெல்ப்... யாராவது வாங்களேன்...’’ நெருப்பு பற்றிக் கொண்டதுப் போல் கத்தினாள்.

ஆடிப் போய் விட்டிருந்தாள் ஷீலா!

சரியான நேரத்தில் கொண்டு சேர்த்ததால் அனைவரும் உயிர் பிழைத்தனர்.

‘எப்பேர்ப்பட்ட முடிவு? ஏதாவது ஆகியிருந்தால்?’ நினைத்தாலே உடம்பு தூக்கிப் போட்டது.

‘காதலித்தது தவறா? யாரும் புரிஞ்சுக்க மாட்டார்களா? என் விருப்பப்படி வாழ்க்கையை தேர்ந்தெடுக்க எனக்கு உரிமையில்லையா? என்ன அநியாயமிது? ஆளாளுக்கு உயிரை வைத்து மிரட்டுகிறார்களே! போனால் போகட்டும் என்று தலைமுழுகுவதை விட்டு விட்டு எதற்காக உயிரை மாய்த்துக் கொள்ள முயல வேண்டும்?’

எதற்காகவும் அழாத ஷீலா... உடைந்துப் போய் அழுதாள்.



கண்ணெதிரே ஒவ்வொருவரும் சுருண்டு விழுந்து உயிருக்கு துடித்த காட்சி... வெகுவாய் இம்சித்தது.

ஷீலாவையே பார்த்துக் கொண்டிருந்தான் தினகர்.

முக்கியமான விஷயம் பேச வேண்டுமென்று தன் தோழியின் வீட்டிற்கு வரவழைத்திருந்தாள். இவர்களுக்கு இடைஞ்சலாய் இருக்க வேண்டாமென தோழி, தனியே விட்டு விட்டு ஷாப்பிங் போய் விட்டாள்.

‘‘இப்ப எல்லோருக்கும் எப்படியிருக்கு ஷீலா?’’ மவுனத்தை உடைத்தான் தினகர்.

‘‘ம்... பரவாயில்லை! உங்கப்பா?’’

‘‘டிஸ்சார்ஜ் பண்ணிட்டாங்க! ஆனா, எத்தனை தடைகள் வந்தாலும் நான் உன்னை விட்டுத்தர மாட்டேன் ஷீலா!’’

‘‘ஆனா... ஆனா... என்னால...’’ விசும்பியழுதாள்.

‘‘என்னடா... ஏன் அழறே? ஷீலா கண்லேர்ந்து கண்ணீரா? ஆச்சர்யமாயிருக்கு... ஆனா, என்னால தாங்கிக்க முடியலே... அழாதே... ப்ளீஸ்!’’ கண்ணீரைத் துடைத்தான்.

‘‘ஏன் தினகர் எல்லோரும் சேர்ந்து நம்மளைப் பிரிக்க நினைக்கிறாங்க?’’

‘‘நம்மை யாராலும் பிரிக்க முடியாது. நீ ஏன் கவலைப்படறே?’’

‘‘தினகர்... நான் என்ன சொன்னாலும் கேப்பியா?’’

‘‘என்ன புதுசா சொல்றே? உன்னைப் பார்த்த நாள் முதலா உன் பேச்சை மட்டும்தானே கேட்கிறேன்.’’

‘‘நான் ரொம்ப யோசிச்சுதான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன். நான் சொல்றதை நீ கேட்டாகணும்’’

‘‘புதிர் போடாம சொல்லு ஷீலா!’’

‘‘நீயும், நானும் கொஞ்ச நாள் பிரிஞ்சிருக்கலாம்!’’

‘‘வாட்?’’

‘‘யெஸ்... நீ உன் வீட்லே பார்த்த பொண்ணை கல்யாணம் பண்ணிக்க! நானும் விக்டரை பண்ணிக்கறேன்!’’

‘‘ஷீலா... உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?’’ கத்தினான்... தாங்க முடியாமல்.

‘‘அவசரப்படாதே தினகர்! நீ எனக்கு வேணும். காதல்ல நாம தோற்கக் கூடாது!’’

‘‘அதைதான் நானும் சொல்றேன். நீ என்னடான்னா, எவளையோ கல்யாணம் பண்ணிக்கச் சொல்றே?’’

‘‘இதெல்லாம் ஒரு ஐ வாஷ்... தட்ஸால்!’’

''புரியலே!''

''உயிரை கையிலே வச்சுக்கிட்டு நம்மளை மிரட்டறாங்க தினகர். அதை அலட்சியப்படுத்தி விடவும் முடியாது. நாம ரெண்டு பேருமே வீட்ல பார்த்த அலையன்ஸை கல்யாணம் பண்ணிக்கலாம். ஒரே வருஷம்... டைவர்ஸ் பண்ணிட்டு நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாம். அப்ப யாரு நம்மை தடுத்திட முடியும்?''

''அதுக்காக... இன்னொரு பெண்ணை... நான்!''

''இதோ பார் தினகர். இப்படியொரு முடிவை எடுத்திருக்கேன்னா உன்னை எந்தளவு நேசிக்கிறேன்னு புரிஞ்சுக்க!''

''நீ என்ன சொன்னாலும் என்னால சமாதானப்படுத்திக்க முடியலே ஷீலா!'' குரல் நைந்துப் போய் வந்தது.

''எல்லாமே... நாம சேர்ந்து வாழறதுக்காகத்தான் தினகர். இவங்கள்லாம் புத்திசாலித்தனமா நடந்துக்கறதா நினைச்சு நம்மை பிரிக்கிறாங்க. நாம எவ்வளவு புத்திசாலிங்கறதை காட்டுவோம்.''

ஷீலா பேசப் பேச ஒரு கட்டுக்குள் வந்தான் தினகர்.

''சரி... நீ சொல்றபடியே செய்வோம். ஆனா, நீ கல்யாணம் பண்ணிக்க... நான் இப்படியே உனக்காக காத்திருக்கிறேன்!''

''ஓ... மை டியர்!'' அவனின் காதலில் கசிந்துருகி, தாங்க மாட்டாமல் இழுத்தணைத்து இதழில் இதழ் பதித்தாள் ஷீலா.

''ஷீ... லா!''

''நீ என் மேலே வச்சிருக்கிற நேசத்துக்கு நான் தந்த பரிசு இது! ஆனா, நீயும் கல்யாணம் பண்ணிக்கனும் தினகர். கல்யாணம் பண்ணிக்கிட்டாலும், மனசால மட்டுமல்ல உடம்பாலேயும் பார்ட்னரை தொடவிடக் கூடாது!''

''சரி... ஆனா, என்னை விட்ரு ஷீலா. எனக்கு கல்யாணம் வேண்டாம்!''

''இல்லே... நீ கல்யாணம் பண்ணியே ஆகணும்!''

''ஏன் பிடிவாதம் பிடிக்கறே ஷீலா!''

''அதுக்கும் ஒரு காரணமிருக்கு. நான் உனக்கு எந்த விதத்திலேயும் தகுதியிலே குறைஞ்சிடக் கூடாது!''

''புரியலே!''

''எப்படியிருந்தாலும் டைவர்ஸ் பண்ணிட்டு நாம பண்ணிக்கப் போறது ரெண்டாம் கல்யாணம்தான். நீ மட்டும் கல்யாணம் பண்ணிக்காம எனக்காக வெய்ட் பண்ணினா உன்னை ஒரு தியாகி மாதிரி எல்லோரும் உயர்வா பேசுவாங்க. ஒரு டைவர்ஸிக்கு வாழ்க்கை கொடுத்தான்ங்கற மாதிரி. அது எனக்குப் பிடிக்கலே. புரியுதா?''

தினகர் பயத்துடன் அவளைப் பார்த்தான்.



இவர்கள் இருவரும் நடத்துவது நாடகம் என்று தெரியாமலே 'விட்டது சனியன்' என்று இருவீட்டாரும் திருமண ஏற்பாடுகள் செய்கின்றனர். முதல் கட்டமாய் தினகரும், ஷீலாவும் சந்திப்பதையும் போனில் பேசுவதையும் தவிர்த்தனர்.

காட்சிகள் அரங்கேறியது.

செபாஸ்டியன் உடனடியாக வீட்டை காலி செய்தார்.

சவுந்தர பாண்டியனுக்கும், பிரபாவதிக்கும் போன உயிர் திரும்பி வந்தது.

பின்னே... வினயாவை திருமணம் செய்து கொள்ள சம்மதித்து விட்டானே!

ஷீலாவுக்கும், விக்டருக்கும் ஏவி.எம். ராஜேஸ்வரியில் திருமண வரவேற்பு வெகு விமரிசையாய் நடந்தது என்று கேள்விப்பட்டான்.

அலுவலக வேலையாய் பெங்களூர் வரை போக வேண்டி இருக்கிறது என்று பொய் சொல்லி உள்ளூர் லாட்ஜில் ரூம் போட்டு, குடித்து விட்டு வாய் விட்டு அழுது, ஆற்றாமையை தீர்த்துக் கொண்டான்.

திருமணம் முடிந்த கையோடு விக்டர் ஷீலாவை மும்பை அழைத்துச் சென்று விட்டான்.

விக்டர் அழகானவன் மட்டுமல்ல, இனிமையான மனிதனும் கூட, எல்லோரையும் நேசிப்பவன்.

பேச்சுவாக்கில் அவன் இரண்டு குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதாகவும், ஊட்டி கான்வென்டில் படித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் கூறிய போது... இவனை சமாளிப்பது எளிது என்று நிம்மதியானாள் ஷீலா.

மும்பை கடற்கரை பகுதியில்தான் விக்டரின் வீடு... தப்பு பங்களா இருந்தது. மனசுக்கு நிறைவான இடம்.

''இந்த பங்களாவை நான் ஆசைப்பட்டு கட்டினேன், ஷீலா. ரொம்ப அழகாயில்லே... உன்னைப் போலவே!'' என்றான்.

மெலிதாய் புன்னகைத்தாள்.

''எனக்கு கல்யாணமானதும் இந்த பங்களாவுலதான் பர்ஸ்ட் நைட் கொண்டாடணும்ங்கறது என் கனவு, ஆசை... எல்லாமே! அதனாலதான் உடனே உன்னை இங்கே அழைச்சிட்டு வந்துட்டேன். நீ ரொம்ப அழகாயிருக்கே ஷீலா! உன் போட்டோவை பார்த்ததுமே நான் சொக்கிப் போய்ட்டேன் தெரியுமா?'' அவள் கையை எடுத்து தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டான்.

ஷீலா தன் கையை இழுத்துக் கொண்டாள்.

''என்ன ஷீலா நெர்வஸாயிருக்கா?''

''....?''

எனக்கு அவசரமில்லே! வெய்ட் பண்றேன். முதல்ல மனசு விட்டு பேசுவோம். ஒருத்தரையொருத்தர் நல்லா புரிஞ்சுபேன்... தென்....'' என்று அவளை பார்த்து ரம்மியமாய் சிரித்தான்.

''யெஸ்... நானும் உங்ககிட்டே மனசு விட்டு பேசணும்!''

''தட்ஸ் குட்... சொல்லு!''

''நான் ஒருத்தரை நேசிக்கிறேன். அவர் பேர் தினகர்!''

விக்டர் வியப்புடன் மனைவியைப் பார்த்தான்.

''என் பேரன்ஸ்ட் மிரட்டிதான் இந்த கல்யாணத்துக்கு பணிய வச்சாங்க. ஆனா, என் மனசுல தினகரை தவிர வேற யாருக்கும் இட மில்லை!''

சற்று நேர மவுனத்திற்கு பின் மென்மையாய் பேசினான்.

''அவ்வளவுதானே? ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் காதல் தோல்வி உண்டு ஷீலா! அமெரிக்காவுல இருந்தப்ப எனக்கும் ஒரு லவ் பெய்லியர் உண்டு. ஆனா, இந்த நிமிஷம் உன்னைத் தவிர வேற யாரும் என் மனசுல இல்லை. இதையெல்லாம் பெரிசா நினைச்சுக் கிற அளவுக்கு சிறு புத்திக்காரனில்லை நான்! உனக்காக வெய்ட் பண் றேன். உன் மனசு என்னை ஏத்துக்கிற வரை ஒன்லி வீ ஆர் ப்ரண்ட்ஸ் ஓகே?''

ஷீலாவுக்கு பெருத்த நிம்மதி ஏற்பட்டது.

''தாங்க்ஸ்'' என்றாள்.

## 11

மண்டபம் காலியாகிக் கொண்டிருந்தது. உறவி னர்களும், நண்பர்களும் மொய் எழுதி விட்டு, திருப்தியாய் சாப்பிட்டு விட்டு தாம்பூலப் பையை வாங்கிக் கொண்டு வெளியேறிக் கொண்டிருந்த னர்.

---



''என்ன சார் இது... இவ்வளவு பெரிய தொந்தி இருக்கிறதே... எப்படி சார் திருட னைத் துரத்திப் பிடிப்பீர்கள்?''

''எதுக்குத் துரத்தணும்... அவனாகவே தேடி வந்து மாமூல் தந்திட்டுப் போயிடுகி றான்!''.

எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.





சீர்வகை சாமான்கள் லாரியில் ஏற்றப்பட்டன.

வினயா பிரம்மிப்புடன் தினகரின் பக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

'இது... இந்த நிமிடம்.... என் பக்கத்தில் அத்தான் அமர்ந்திருப்பதும்... அவர் கட்டிய தாலி என் நெஞ்சில் தொங்குவதும் நிஜம் தானா? வாரம் தவறாது விளக்கேற்றி வழிபட்ட எனக்கு, துர்க்கையம்மன் என் வாழ்க்கையில் விளக்கேற்றி வைத்து விட்டது கனவல்லவே?'

எங்கோ பார்க்கிற சாக்கில் அத்தானையும் ஆசையுடன் நோட்டமிட்டாள்.

அவன் பார்த்தால்தானே? ஒரு பெண்ணின் பக்கத்தில் அமர்ந்திருக்கிறோம் என்கிற ஸ்மரணையே இல்லாமல், கைகுலுக்கி வாழ்த்து சொல்லி விட்டு செல்பவர்களுக்கு இன்ஸ்டன்டாய் ஒரு புன்னகையை உதித்து நன்றி சொல்லி உடனடியாக தீவிர யோசனையில் ஆழ்ந்து விடுவதுமாக இருந்தான் தினகர்.

வினயாவிற்கு எதையும் குறுக்குத்தனமாய் சிந்திக்கத் தெரியாது. கிராமத்து வெள்ளந்தி மனசு.

'பாவம்... அத்தான் களைச்சுப் போயிருக்கிறார். கல்யாண வேலையெல்லாம் இழுத்து போட்டு செய்திருப்பார் போல.'

ஆனால், அந்த பரிதாபத்துக்குரியவர் சவுந்தர பாண்டியன்தான் என்று பாவம் இவளுக்கு எப்படி தெரியும்? தினகரை திருமணத்திற்காக சம்மதிக்க வைக்க ஹார்ட் அட்டாக் வரை சென்று எமனிடம் கெஞ்சி போராடி மீண்டு வந்ததெல்லாம்... அவளுக்குத் தெரியாதே!

''மசமசன்னு நிக்காதே பிரபா... நீ உடனே வீட்டுக்கு கிளம்பு. பொண்ணும் மாப்பிள்ளையும் வரும் போது ஆரத்தி எடுக்க நீயிருக்க வேணாமா?''

''நல்லவேளை ஞாபகப்படுத்தினீங்க... ரொம்ப டல்லா தெரியறீங்க... வேர்த்து சட்டையெல்லாம் நனைஞ்சிருக்கு. உங்களுக்கொன்னும்...'' சந்தேகமாகப் பார்த்தாள்.

வாய் விட்டு சிரித்தார்.

''அடிப்போடி கூறுகெட்டவளே! நான் எவ்ளோ சந்தோஷமா இருக்கேன்னு எனக்குதான் தெரியும்! போ... போய் ஆகற வேலையைப் பார்!''

நகர்ந்தாள் பிரபாவதி.

''யாருப்பா அது? சமையல்காரரை அழைச்சிட்டு வா! மீதமான சாப்பாடெல்லாம் விஷ்ராந்தி முதியோர் இல்லத்துக்கு அனுப்பிட்டு, மளிகை சாமானை வீட்டுக்கு அனுப்பி வைங்க... அட... என்னம்மா இது?'' என்றார் ஆச்சர்யமாய்.

கமலம் கைகூப்பி... கண் கலங்க நின்றிருந்தாள்.



''எப்படி கரையேத்தப் போறேன்னு இவ்வளவு காலமும் தூக்
கம் வராம நான் பட்ட அவஸ்தைகள் நிறைய! ஆனா, என் பொண்
ணுக்கு...'' வார்த்தைகள் வராமல் தடுமாறினாள்.

''நன்றி சொல்லி.... ஒதுக்கி வைக்கிறியா? அருமையான
பொண்ணை என் பிள்ளைக்கு கொடுத்திருக்கே. சொல்லப் போனா
நான்தான் நன்றி சொல்லணும். போம்மா... பிரபா வீட்டுக்குதான்
போய்ட்டிருக்கா... பாக்கி சடங்கெல்லாம் வீட்லேதான் பண்ணணும்.
நீயும் அவளோட போய்டு. நான் மண்டபத்தை காலி பண்ணிட்டு வர்
றேன்!''

''இ.... இல்லேண்ணா... ஊர்க்காரங்க, உறவுக்காரங்க எல்லோ
ரும் தயாராயிருக்காங்க. பஸ் புறப்படப் போகுது. நானும் புறப்பட
றேன்!''

''என்னது? விளையாடறீயா? பொண்ணைப் பெத்தவ நீ... மறந்
துட்டியா?''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு புரியுது. ஆனா, நல்ல காரி
யம் நடக்கும் போது நான் அங்கே இருக்க வேண்டாம். வினயா
இனி, உங்க வீட்டுப் பொண்ணு.''

''முட்டாள் மாதிரி பேசாதே!''

''இல்லேண்ணா.., நான் போறேன். மனசு நிறைஞ்சு இருக்கு.
பொண்ணுக்கு செய்ய வேண்டிய கடமைய செஞ்சுட்டேங்கன்னு வின
யாவோட அப்பாகிட்டே சொல்லி ஒரு மூச்சு அழணும் போலிருக்கு!''

தங்கையை பரிதாபமாய் பார்த்தவர்... அதற்கு மேல் தடுக்க
முடியாமல் செயலிழந்து நின்றார்.

நெஞ்சம் முழுக்க படபடப்புடன் அமர்ந்திருந்தாள். முழு நிலவு
இன்ப நினைவுகளை உசுப்பேற்றிக் கொண்டிருக்க.... அறையி
னுள்ளே... தணலில் நின்றுக் கொண்டிருந்தான் தினகர்.

அலங்கரிக்கப்பட்டிருந்த கட்டிலைப் பார்க்கும் போது ஆவே
சம் வந்தது. கட்டிலை கவிழ்த்து பூக்களையெல்லாம் பிய்த்தெறிய
வேண்டும் போல் தோன்றிய கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்
டான்.

அப்போது... செல்போன் சிணுங்கியது.

லைனில் ஷீலா!

பரபரப்புடன்... ''ஹலோ'' என்றான்.

''கங்க்ராஜுலேஷன்ஸ் தினகர்!''

''எதுக்கு?''

''இன்னைக்கு உனக்கு பர்ஸ்ட் நைட்டாச்சே?''

''விளையாடறியா ஷீலா? என்னைப்பத்தி நல்லாத் தெரிஞ்சி

ருந்தும் கங்க்ராட்ஸ் பண்றியா?''

''சும்மா விளையாட்டுக்கு!''

''நாம இந்த முடிவை எடுத்திருக்கக் கூடாதோன்னு தோணுது ஷீலா! நம்மால புதிதாய் ரெண்டு பேர் வாழ்க்கையும் கேள்விக்குறியாகப் போகுதே... அதை நாம சிந்திச்சுப் பார்க்கலையே!''

''யாரைச் சொல்றே?''

''விக்டரும், வினயாவும்!''

''எல்லாத்தையும் போட்டு குழப்பிக்காதே தினகர். நம்ம மனசைப் பத்தி யாருமே யோசிச்சு பார்க்காதப்ப... நாம மட்டும் ஏன் கவலைப்படணும்? விக்டர் அமெரிக்காவுல இருந்தவர். அந்த கல்ச்சர்ல கொஞ்ச நாள் ஊறியவன். ஸோ, டைவர்ஸ்ங்கறதோ, ரீமேரேஜ் என்பதோ பெரிய விஷயமில்லே. அதே மாதிரி வினயாகிட்டே கொஞ்சமும் இளகிப் பேசிடாதே! அப்பதான் உன் பிரிவை சாதாரணமா எடுத்துப்பா!''

''நீ நல்லாயிருக்கியா ஷீலா?''

''பைத்தியக்காரத்தனமான கேள்வின்னு உனக்குப் புரியலியா?''

''உன் குரலை கேட்டாலே... இப்பவே எல்லாத்தையும் உதறி தள்ளிட்டு உன் கூட சேரணும் போலிருக்கு!'' குரல் ஏக்கமாய் வெளிப்பட்டது.

''ஒரு வருஷம்தானே? வெய்ட் பண்ணு... நான் பேசினாலே நீ டைவர்ட் ஆகிடறே... ஸோ, டைவர்ஸ் ஆகறவரை நாம போன் கூட பண்ணக்கூடாது.''

''பெரிய தண்டனை ஷீலா!''

''புரியுது. ஆனா நாம சேர்றதுக்கான உத்வேகத்தை இந்த பிரிவு தரும். வச்சிடட்டுமா? மறுபடியும் ஒண்ணை ரிமைண்ட் பண்றேன். நீ எனக்கு முழுசா வேணும்.''

''சந்தேகப்படறீயா?''

''ஞாபகப்படுத்தறேன்... தட்ஸால்!'' என்று போனை வைத்து விட்டாள்.

தொப்பென்று கட்டிலில் அமர்ந்தவன் ஷீலாவின் நினைவுகளில் மூழ்கிப் போனான்.

என் காதல் தேவதையே! அவனவன் காதலித்தவளை கைப்பிடிக்க கல்யாணம் செய்துக் கொள்கிறான். ஆனால், உன்னை சேர... நான் இன்னொருத்தியை கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன்.

கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டதும் தன்னிலை மீண்டான். மெல்லிய கொலுசொலியைத் தொடர்ந்து அலங்கார தேவதையாய்... கையில் பால் சொம்புடன் வினயா வந்தாள்.



அவளைப் பார்க்கவே வெறுப்பாய் இருந்தது.

பால் சொம்பை டீப்பாய் மீது வைத்தவள் தினகரின் காலில் விழ குனிந்தாள்.

''இதெல்லாம் எனக்கு பிடிக்காது!'' என்று கால்களை மடக்கிக் கொண்டான்.

அவளிடம் அவன் பேசிய முதல் வார்த்தை!

அவனாக கைப்பற்றி பக்கத்தில் அமர்த்திக் கொள்வான் என்று எதிர்பார்த்தவள்... மவுனமாய் நிமிடங்கள் கரையவே, ''பா... பால்... சாப்பிடறீங்களா?'' என்றாள்.

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். நீ குடிச்சிட்டு படு!''

வினயா அவனிடம் ஒரு மாற்றத்தை உணர்ந்தாள்.

''என்ன அப்படி பார்க்கிறே? என்னடா இவன் நடவடிக்கை எல்லாம் ஒரு மாதிரியா இருக்குன்னுதானே? நிஜம்தான்! எனக்கு இந்த கல்யாணத்துல துளிக் கூட இஷ்டமில்லே. வற்புறுத்தி தாலி கட்ட வச்சிட்டாங்க!''

''.....?''

''என் எதிர்பார்ப்புகள் வேறு! அதனால உன் எதிர்பார்ப்புகளை பொசுக்கிட்டு... அதோ அந்த ஹால்ல படுத்துக்க. எனக்கு கட்டில்ல படுத்துதான் பழக்கம்.'' ஒரு தலையணையையும், பெஷீட்டையும் எடுத்து கொடுத்து விட்டு படுத்துக் கொண்டான்.

ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. திக்குத் தெரியாத காட்டில் நிற்பதுப் போல் உணர்ந்தாள்.

'என்ன நடக்கிறது இங்கே? என்ன பேசுகிறார் இவர்? எதிர்பார்ப்புகளை பொசுக்கி விட்டு தனியே படுக்கணுமா? அப்படியானால், அப்படியானால்?'

இதுவரை யாரையும் காயப்படுத்தியிராத அவளின் இளநெஞ்சு வேதனையில் சுருங்கிப் போனது. இரவு முழுக்க விழித்திருந்தாள்.

தினகரின் படுக்கையறையுடன் ஒரு சின்ன ஹாலும், அதோடு ஒட்டிய பால்கனியும் உண்டு என்பதால்.... இந்தக் கூத்து வீட்டினருக்கு தெரிய் வாய்ப்பில்லை.

தினகருக்கு ஆறுமணிக்கு விழிப்பு வந்து விட்டது. ஹால் காலியாக இருந்தது.

கீழே... மணியடிக்கும் சப்தத்தைத் தொடர்ந்து கற்பூர வாசனை நாசியைத் தொட்டது.

படிவழியே எட்டிப்பார்த்தான்.

வினயா குளித்து முடித்து பூஜை பண்ணிக் கொண்டிருந்தாள். கூடவே பரவசமுடன் தினகரின் பெற்றோர்.

''உன்னால இந்த வீடே நிறைஞ்சிருக்கு வினயா! நான் எந்திரிக்கும் போது உங்க மருமகள் குளிச்சு, டிபனையும் சமைச்சு வச்சுட்டா!'' என்றாள் பெருமையுடன் பிரபாவதி.

''என் தங்கச்சி பொண்ணுன்னா சும்மாவா?''

''வினயா... தினகருக்கு எந்திரிச்சதும் காபி கொடுத்திடணும். முதல்ல காபி எடுத்துட்டு போ...'' என்றபடி அவளை கிச்சனுக்குள் அழைத்து வந்தவள் ஆவலாய் கேட்டாள்.

''என் பிள்ளை உன்கிட்டே சந்தோஷமா இருந்தானா வினயா?''

''போங்கத்தே!'' வெட்கப்பட்டு தலைகுனிந்த வினயா அவசரமாய் துளிர்த்த கண்ணீரை பிரபாவதி அறியாதவாறு துடைத்துக் கொண்டாள்.

மருமகளின் வெட்கம் பிரபாவதிக்கு திருப்தியை தர ''இனி எனக்கு எந்த கவலையுமில்லை!'' என்று போய் விட்டாள்.

காபியோடு தினகரின் முன் நின்றாள்.

''தாங்க்ஸ்'' என்றபடி எடுத்து பருகினான்.

''ஏ... என்னை உங்களுக்கு பிடிக்கலையா?''

''ஆமான்னு சொன்னா... என்னை விட்டு போய்டுவியா?''

''ம்ஹூம்... என்னை பிடிக்கிற அளவுக்கு உங்க மனசை மாத்துவேன்!'' அழுத்தமான புன்னகையொன்றை உதிர்த்து விட்டு திரும்பி நடக்கையில்... அவளின் அழகிய நீண்ட கூந்தல் நடனமாடியது.

தினகர் அவளையே அலட்சியமாக நோக்கினான்.

## 12

பிரபாவதியை ஒரு வேலையும் செய்ய விடாமல் எல்லாவற்றையும் தானே செய்தாள் வினயா. சமையலிலும் அசத்தினாள்.

வீடு பளிச்சென்று சுத்தமாய் வைத்துக் கொண்டாள். காலையும் மாலையும் தவறாது பூஜை செய்தாள். தினகரின் தேவைகளை பார்த்து பார்த்து உடனே பூர்த்தி செய்தாள்.

தப்பித் தவறிக் கூட தினகர் தன்னிடம் விலகியிருப்பதை சொல்லிக் கொள்ளவில்லை.

அவன் ஹாலில் தென்பட்டால் போதும்... ஓடிப் போய் மறைந்துக் கொள்வாள் வினயா.

பிரபாவதி சிரிப்பாள்.

''அடி மக்குப் பெண்ணே! இன்னும் என்ன வெட்கம்? கல்யாணமாகி பத்து நாளாய்டுச்சே... அப்புறமென்ன? சகஜமாயிரு!''

''ம்ஹூம்... அவரைப் பார்த்தாலே எனக்கு வெட்கமாயிருக்கு!''



பிரமாதமாய் நடித்தாள்.

அலுவலகம் செல்லும் போது புதுமனைவியை கொஞ்சி விட்டு செல்லாத கணவன்மார்களே நம் நாட்டில் இல்லை. இவள் கண்டிப்பாய் வாசல் வரை சென்று வழியனுப்ப வேண்டும். தினகர் அவள் இருக்கும் பக்கமே ஏறிட்டுப் பார்க்க மாட்டான். பிறகு, நான்கு சுவற்றுக்குள் நடப்பது நடு வீட்டுக்கு வந்து விடுமே! உண்மை தெரிந்தால் மாமாவிற்கு மறுபடியும் அட்டாக் வந்து விட்டால்?

பிரபாவதியின் காலுக்கு எண்ணெய் தடவி இதமாய் மசாஜ் செய்தாள்.

''பரவாயில்லை போதும் விடு! காலைலேர்ந்து பம்பரமாய் சுழன்று வேலை செய்யறே... சித்த படுத்து எந்திரி.''

''வேணாம் அத்தை! பகல்ல படுத்தா நைட்ல தூக்கம் வராது!''

''புதுசா கல்யாணமானவங்க பகல்ல படுத்து ரெஸ்ட் எடுத்தா தான் உண்டு. நாசூக்காதான் சொல்லுவேன். புரிஞ்சுக்க வேணாமா மக்கு பெண்ணே!''

''போங்கத்தே... உங்களுக்கு எப்பவும் கிண்டல்தான்!'' எழுந்து ஓடிவிடுவாள்... மேற்கொண்டு பேச விடாமல்.

''தினகர் உன்கிட்டே கொஞ்சம் பேசணும்!''

''என்னப்பா?''

''கல்யாணமாகி ரெண்டு மாசமாகப் போகுது. வினயாவை வெளியே எங்கேயும் அழைச்சிட்டுப் போனதேயில்லே! உனக்கேத்த மாதிரி அவளும், வெளியேப் போகவே பிடிக்கலே மாமான்னு ஜால்ரா தட்றா! ஆனா, நீங்க ரெண்டு பேரும் வெளியே ஜோடியாப் போறதை பார்க்க எங்களுக்கு ரொம்ப ஆசையாயிருக்கு. இந்தா ரெண்டு டிக்கட் ரிசர்வ் பண்ணிட்டேன். போய்ட்டு வாங்க!''

''அப்பா... என்னால லீவுபோட முடியாது. ஆபீஸ்லே நிறைய வேலையிருக்கு!''



''பாகவதர் இவர்தான்னு எல்லா சபாக்காரர்களையும் விரும்பிக் கூப்பிடுகிறார்களே... அவ்வளவு நல்லாப் பாடுவாரா?''

''கச்சேரி கேட்க ஆளுங்களையும் அவரே கூட்டிட்டு வந்து களைக்கட்ட வச்சிடுவாராம்.

எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

"நான் தான் சொல்றேனே... லீவு தரலேன்னா ரிஸைன் பண்ணிட்டு வா! நீங்க ரெண்டு பேரும் இன்னைக்கு சினிமாவுக்கு போய்ட்டு வர்றீங்க!" என்றார் அழுத்தமாய்.

வேறு வழியின்றி! மனதிற்குள் குமைந்தபடி சம்மதித்தாள்.

விர்ரென்று ராக்கெட்டில் பறப்பது போலிருந்தது வினயாவுக்கு.

'அத்தானுடன் சினிமாவுக்கு போகப் போகிறேனா? மூன்று மணி நேரம் அவர் பக்கத்திலேயே இருக்கிற வாய்ப்பா?' குதூகலத்துடன் தன்னை தயார்படுத்திக் கொண்டாள்.

"உங்களை கைது செய்யறோம்..."

"எதுக்கு இன்ஸ்பெக்டர்..."

"உங்கப் பொண்ணோட காதலுக்கு கறுப்புக் கொடி காட்டியதுக்காக...!"

-ஜக்கி, லட்சுமி புரம்.



அவளின் நீண்ட கருநாகக் கூந்தலை பெருமையுடன் சலித்தபடி ஜடை பின்னி பந்து மல்லிகை சரத்தை சொருகினாள் பிரபாவதி.

இதிகாச சீதாதேவியின் அழகு வினயாவிடம் பிரதிபலித்தது.

டிரஸ் பண்ணிக் கொண்டு வந்த தினகர், "ஆட்டோ கூட்டிட்டு வர்றேன்!" என்று புறப்பட, "இரு" என்று தடுத்தார் சவுந்தரபாண்டியன்.

"எதுக்கு ஆட்டோ? பைக் என்னாச்சு?"

பிரேக் சரியா பிடிக்கலே. எதுக்கு வம்பு?" என்று கிளம்பினான்.

"அதுவும் சரிதான்!"

ஆட்டோவில் அவள் காற்று கூட தன் மீது படாத அளவுக்கு நுனியில் அமர்ந்திருந்தான் தினகர். மறந்தும் கூட பார்வையை அவள் பக்கம் நகரவில்லை.

புறப்படும் போதே அரித்துக் கொண்டிருந்த கேள்வியை கேட்டாள்.

"நிஜமாகவே பைக் ரிப்பேரா அத்தான்?"

"...."

"பொய் தானே சொன்னீங்க?"

"ஆமாம்! பொய்தான் சொன்னேன். பைக் போகும்போது யாரும் நம்ம ஜோடிப் பொருத்தம் பார்த்து கண்வச்சிடக் கூடாதில்



லையா?" நக்கலாக சொன்னான்.

சுருக்கென தைத்தது.

ஆட்டோ டிரைவர் கண்ணாடி வழியே அவர்களைப் பார்த்தான். வினயாவுக்கு அவமானமாய் இருந்தது.

"உனக்கு என்னை பிடிக்கலாம். எனக்கும் உன்னைப் பிடிக்கணுமில்லையா? நான் யாரு? என் ஜாப், சர்க்கிள், இமேஜ், எதுக்கும் பொருந்தாத சோளக் கொல்லை பொம்மை நீ! என் டேஸ்ட் எப்படிப் பட்டது தெரியுமா? எல்லாத்துக்கும் வேட்டு வைக்கிற மாதிரி வந்து தொலைஞ்சிட்டே... சே!"

"அ..த்...தா...ன்!"

"த... பார்... முதல்ல இப்படி கூப்பிடறதை நிறுத்து. வெறுப்பாயிருக்கு. சீக்கிரம் இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்றேன்... இரு!" என்றான் உறுமலாய்.

"தாங்க மாட்டாமல் கண்களில் சிற்றருவி பொங்கியது.

"அடச்சீ... அழறதை நிறுத்து! நடந்தது, நடக்கப் போறது எதுவும் வீட்டுக்கு தெரியக் கூடாது... தெரிஞ்சுதோ...

தலைகவிழ்ந்துக் கொண்டாள்.

டிரைவர் பார்வையை விலக்கிக் கொண்டான்.

ஆனால் அதன் பிறகு தினகர் செய்த காரியம்தான் வினயாவின் இதயத்தை பறித்து காலால் நசுக்கியதுப் போலிருந்தது.

ஒரு டிக்கெட்டை மூதாட்டி ஒருத்திக்கு கொடுத்து வினயாவின் பக்கத்தில் அமர்த்தி விட்டு வெளியே சென்று விட்டான் தினகர். படம் முடிந்ததும் வந்து அழைத்துக் கொண்டான்.

"வாடி என் கண்ணு... படம் நல்லாருந்துச்சா? ஏன் கண்ணெல்லாம் சிவந்திருக்கு? அழுதியா?" எதிர் கொண்ட மாமியார் படபடத்தார்.

"இ... இல்லே... ப... படம் ரொம்ப அழுகையாயிருந்துச்சு..."

"அதானே பார்த்தேன்... அப்படியே ஹோட்டலுக்கு போய் சாப்பிட்டீங்ககளா?"

"எ.. எனக்கு ஹோட்டல்ல சாப்பிட பிடிக்காதுன்னதும்... அவரும் வேண்டாம்னுட்டார்."

"சந்தோஷமாயிருக்குடி தங்கம். மனசு நிறைஞ்சிருக்கு. சீக்கிரமே என்னை பாட்டியாக்கிடு..."

"சும்மாயிருங்க அத்தை!" வெட்கத்துடன் ஓடியவளின் முகத்தைப் பார்த்திருந்தால்... தெரிந்திருக்கும்... அந்த வெட்கமெல்லாம் வேஷமென்று.

புழுக்கமாய் இருந்தது! அவள் படுத்திருந்த இடத்தில் பேன் வசதி இல்லை. தினகர் கொசுவலைக்குள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான்.

மெல்ல எழுந்தமர்ந்து கால்களை மடக்கி முகத்தை கவிழ்ந்து மனபாரம் தாங்காமல் அழுதாள்.

‘எவ்வளவு ஆசை வைத்திருந்தேன்? ஆனால், அத்தானுக்கு என்னை கொஞ்சமும் பிடிக்கவில்லையே! பிறகெதற்கு என்னை கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்? புரியவில்லையே! அவ்வளவு மோசமாகவா இருக்கிறேன்? மேலத்தெரு மோகனும், பஞ்சாயத்துத் தலைவர் மகன் உபேந்திரனும் என்னைத் திருமணம் செய்து கொள்ள தவமிருந்தார்களே! எவ்வளவோ வரன்கள் வீடு தேடி வந்ததே! அம்மாக் கூட வற்புறுத்தினார்களே! நல்ல நல்ல வரன்கள் வீடு தேடி வருகிறது... புத்திசாலித்தனமாய் முடிவெடு வினயா என்றாளே! அவர்களுக்கெல்லாம் அழகியாய் தெரிந்த நான் இவர் பார்வைக்கு ஒரு பெண்ணாய் கூடத் தெரியவில்லையே! ஏன்? இவர் மனசில் என்ன இருக்கிறது? இனி, என் வாழ்க்கை எப்படி போகும்? பாவம்... இவருக்கும் நிம்மதியில்லை. நானும் மனசுக்க பிடிக்காததால் தானே வந்த வரன்களை தட்டி கழித்தேன்? இவர் மட்டும் பிடிக்காமல் எப்படி வாழ்க்கை நடத்துவார்? ஆனால், அதே சமயம் காலம் முழுக்க இப்படியே இருந்து விட முடியாதே! அன்பால் சாதிக்க முடியாதது இந்த உலகில் என்ன இருக்கிறது? மாமாவின் வற்புறுத்தலால்தான் என்னை திருமணம் செய்திருக்க வேண்டும். அதுவும் அன்பால்தானே? அதே மாதிரி என் அன்பால் ஏன் இவரை மாற்ற முடியாது? பெண்ணின் பொறுமைக்கு பெருமை கிடைக்காமல் போனதில்லையே! என் அத்தான் கண்டிப்பாய் எனக்கு கிடைப்பார்!’

அழுத்தமான நம்பிக்கை அவள் மனதில் பதிய... இமைகள் ஒன்று சேர்ந்தன.

அன்று அவளுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

கமலம் மகளைப் பார்க்க வந்திருந்தாள்.

“அம்மா... வாம்மா!” ஓடிப்போய் அணைத்துக் கொண்டவளுக்கு ஆறுதலாய் இருந்தது.

‘எதிர்பார்ப்பில்லாத அன்பையும், எந்த சூழ்நிலையிலும் வெறுக்காத நேசமும் தருவது தாய் ஒருத்திதானே?’

“எப்படிம்மா இருக்கிறே?”

“என்னை விடு. நீ எப்படியிருக்கே வினயா?”

“எனக்கென்னம்மா குறைச்சல்? உள்ளே வா?”

“அட... கமலம்... வா...வா... இப்பதான் இங்கே வர வழி





“எம்.எல்.ஏ.வைப் போட்டு ஏன் இப்படி அடிக்கிறார்கள்?”

“பின்னே... அவரோட சொந்தக் தொகுதியிலே பிரச்சாரத்துக்கு வந்தார்” என்ன ரோடெல்லாம் சரியில்லை, யாரு உங்க எம்.எல்.ஏ.னு கேட்டால் ஜனங்களுக்கு கோபம் வராதா?

**எம்.அசோக்ராஜா, அவரக்குறிச்சிப் பட்டி.**

தெரிஞ்சுதா?” உரிமையுடன் கோபித்துக் கொண்டார் சவுந்தர பாண்டியன்.

“கொண்டான் கொடுத்தான் அடிக்கடி வந்துட்டுப் போறது நல்லாயிருக்காதேண்ணா! வினயாவை பார்க்கணும் போல இருந்ததால தான் வந்தேனே தவிர, அவ எப்படி இருக்கான்னு தெரிஞ்சுக்கறதுக்காகயில்லே. என் பொண்ணை இந்த வீடு எப்படி வச்சு கொண்டாடும்னு எனக்குத் தெரியும். அண்ணி எப்படியிருக்கீங்க?”

“அண்ணின்னு உரிமையோடு கூப்பிடறே! ஆனா மூணாவது மனுஷி மாதிரியில்லே நடந்துக்கறே! யார் வீடு இது? உன் அண்ணன் வீடு! இங்கேயே இருந்துடுன்னு சொன்னா கேக்கறீயா?”

“அதெல்லாம் விடுங்கண்ணி... உங்க கால்வலி இப்ப எப்படியிருக்கு?”

“பிடிச்சா... உடும்புப் பிடிதான் உனக்கு!”

அதன்பின் அனைவரும் சகஜமாய் பேசிக் கொண்டனர். அண்ணனும், அண்ணியும் தன் மகளை வாய் ஓயாமல் புகழ்ந்ததைக் கேட்டு மகிழ்ச்சியில் கண் கலங்கினாள்.

தினகர் உள்ளே வருவதைப் பார்த்ததும் சட்டென எழுந்துக் கொண்டாள் கமலம்.அவளைப் பார்த்ததும் பேசுவதா, வேண்டாமா என்று சங்கடப்பட்ட தினகர், போனால் போகட்டுமென்று “எப்ப வந்தீங்க?” என்றான்.

“காலைலதான் மாப்பிள்ளை!”

அவ்வளவுதான்! போய் விட்டான்.

மகளிடம் தனியே பேச வேண்டும் என்று ஆசைப்பட்ட கமலம் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததும்... கேட்டு விட்டாள்.

“வினயா... ஏதாவது விசேஷம் உண்டா?”

அந்தக் கேள்வியில் குமைந்துப் போனாள். தன் வேதனைகள் முகத்தில் தெரியாமல் சாமர்த்தியமாய் சிரித்தாள்.

“இல்லேம்மா... இப்போதைக்கு வேண்டாம். லைப்பை நல்லா

என்ஜாய் பண்ணலாம்னு ஒத்திப் போட்டிருக்கிறார் உங்க மாப்பிள்ளை!''

''ஓகோ... அதுவும் சரிதான்!''

இவங்கள் பேசியது தினகரின் காதில் விழ நக்கலாய் சிரித்துக் கொண்டான்.

## 13

''ஏய்... இங்கே வா!'' அழைத்தான் தினகர்.

''என்னங்க?''

''உங்கம்மா போயாச்சா?''

''ம்... மதியமே போய்ட்டாங்க!''

''காலையிலே உங்கம்மாகிட்டே என்னமோ சொல்லிட்டிருந்தே? லைப்பை நல்லா என்ஜாய் பண்ணனும் தள்ளிப் போட்டிருக்கார்னு!'' கிண்டலாய் கேட்டான்.

''அது... அது...!''

''கனவுக் கூட காணாதே! உன்னை பார்த்தாலே எனக்கு பிடிக்கலே.''

''ஏன் என்னைப் பிடிக்கலே? கிராமத்துப் பொண்ணுங்கிறதாலா? இல்லே நான் வசதியில்லாதவங்கறதாலா?''

''இல்லேன்னா மட்டும்? என்ன இருக்கு உன் கிட்டே? உன் முகத்தை கண்ணாடியிலே பார்த்திருக்கியா?''

''அப்புறம் ஏன் என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?'' அழுகை கலந்து வந்தது வார்த்தைகள்.

''கட்டாயக் கல்யாணம். சில காரணங்களுக்காக தவிர்க்க முடியாம எடுத்த முடிவு. ஆனா, கண்டிப்பா உன்னோட வாழ முடியாது!''

''நான் உங்க மேலே உயிரையே வச்சிருக்கேன் அத்தான்!''

''நிஜமாகவா?''

''சத்தியமா!''

''அப்படின்னா எனக்காக ஒண்ணை செய்வியா?''

''காத்திருக்கிறேன் சொல்லுங்க... என்ன செய்யணும்?''

''நீ என் மேலே வச்சிருக்கிற அன்பு உண்மைன்னா... என்னை விட்டுப் போய்டு!''

''எ... ன்... ன..?''

அதிர்ச்சியில் உறைந்துப் போனாள் வினயா.

அவள் முகத்தை வைத்து எந்த முடிவுக்கும் வர முடியவில்லை



தினகரால். எந்த சலனமுமில்லாமல் தெளிவாய் இருந்தது. எப்போதும் போல் இயல்பாய் வலம் வந்தாள்.

இப்படியே இரண்டு நாட்கள் ஓடிப்போனது. அன்று தினகருக்கு சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை பொறுமைக்காத்தவள். கையை துடைக்க டவலை கொடுத்து விட்டு, ''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

''என்ன?'' என்றான் கடுப்பாய்.

''நீங்க எரிஞ்சு விழற அளவுக்கு மோசமான விஷயமில்லே... நீங்க சந்தோஷப்படற விஷயம்தான்!''

''....?''

''சுத்தி வளைக்க விரும்பலே... உங்க மனசிலே நான் இல்லைன்னு தெரியும். வேறு யாரோ ஒரு பெண் இருக்கிறாள். அது யாருன்னு தெரிஞ்சுக்க நான் விரும்பலே. ஆரம்பத்திலே... உங்க மனசிலே இடம் பிடிச்சிடணும்னு ஆசைப்பட்டேன், நம்பினேன். அது சாத்தியமில்லைன்னு புரிஞ்சுக்கிட்டேன். திணிப்பதில் பலன் இல்லை. ஏற்றுக் கொள்ள இடமிருக்கணுமே!''

''....?''

''நான் உங்கக்கிட்டே எதையும் எதிர்பார்க்கலே... அன்பைத்தவிர. அது கிடைக்கலேன்னாலும் என் அன்பு குறையாது. அது என்னைக்கும் ஒரே மாதிரிதான். நாம ரெண்டு பேருமே சந்தோஷமாயில்லே. யாராவது ஒருத்தராவது சந்தோஷமாயிருந்தால் நல்லது. நான் உங்களை விட்டு பிரியறதுதான் அதுக்கு ஒரே வழி. ஆனால் கொஞ்ச நாள் பொறுத்துக்குங்க. மாமா இப்பதான் தேறி வந்திருக்கிறார். இந்த சூழ்நிலையில் நான் உங்களைப் பிரிவதை அவர் உடல் தாங்குமா? குணமாகட்டும். நீங்கள் எப்போது சொல்கிறீர்களோ... அப்போது போய் விடுகிறேன்!''

''.....?''

''அப்ப மட்டும் எப்படி ஒத்துக்குவாங்கன்னு யோசிக்கறீங்களா? நீங்கள் இவர்களுக்கு ஒரே பிள்ளை. குலம் தழைக்க வாரிசு அவசியம். அதற்கான தகுதி என்னிடம் இல்லைன்னு நானே சொல்லும் போது நம்பித்தானே ஆகணும்? இதோ... இந்த வெற்றுப் பேப்பர்ல கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறேன். பத்திரமா வச்சுக்குங்க!''

''எ... எதுக்கு?'' அவள் பேசுவதையெல்லாம் நம்ப முடியாத அதிர்ச்சியோடு கேட்டுக் கொண்டிருந்தான் தினகர்.

''டைவர்ஸ்க்காக கோர்ட்டு படியெல்லாம் ஏற வேண்டாம். கவுரவமான குடும்பத்துக்கு அது அசிங்கம். மாமாவாலும் அத்தையா

லும் தாங்கிக்க முடியாது. தவிர, எதிராளியா நான்? உங்களுக்காக எதையும் செய்ய காத்திருக்கிறேன். அந்தளவு அன்பு வைத்திருக்கிறேன்! அந்த வெற்றுப் பேப்பரில் நீங்கள் எதை வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளுங்கள். விடுதலைப் பத்திரமாக பயன்படும்!'' துளிர்த்த கண்ணீரை துடைத்தபடி விலகிப் போய் விட்டாள்.

''வி... ன...யா!'' முதல் முறையாய் அவள் பெயரை உச்சரித்தான். ஆனால் வார்த்தைகள் வாய்க்குள்ளேயே மடிந்தன.

'ஆனால், நேற்று வரை யாரோப் போல் தோன்றியவள் இப்போது மனசுக்கு நெருக்கமாய் வந்தது எப்படி?'

பால்கனியில் வந்து நின்றாள் ஷீலா.

பரபரப்பான மும்பை நகரின் வட இந்திய முகங்கள் தென்பட்டன. பால்கனியில் வந்து நிற்கும் போதெல்லாம் ஷீலாவுக்கு தினகரின் நினைவு வந்து விடும். ஒரு நாள் அவன் நிற்கவில்லை என்றாலும் காய்ச்சி எடுத்து விடுவாளே!

'உன்னைப் பார்த்து எட்டு மாதமாகி விட்டது தினகர். ரொம்ப மிஸ் பண்ணுகிறேன்டா! என் முடிவு முட்டாள்தனமானதோ என்று தோன்றுகிறது. இது அழகான பங்களாதான். கடற்கரை காற்றும் அலையும் சுகமான கவிதைதான். இதையெல்லா இந்த பால்கனியில் நின்றபடி தரிசிக்க முடிகிற என்னால், உன்னை பார்க்க முடியலையே தினகர்!'

சென்னையில் சுறுசுறுப்பாய் இருந்து பழகிவிட்ட ஷீலாவினால் சும்மா உட்கார்ந்திருக்க பிடிக்கவில்லை. ஒரு தனியார் நிறுவனத்தில் விக்டரின் விருப்பமின்றி வேலைக்கு சேர்ந்து விட்டாள்.

நேரமாகி விட்டது. சாப்பிட்டு விட்டு கிளம்ப வேண்டும். சமையல்காரி மூன்று நாட்களாய் லீவு இன்றும் ப்ரெட்டும் ஆம்லெட்டும் தான் சாப்பிடணுமா? அலுப்புடன் டைனிங் டேபிளுக்கு சென்றவளின் விழிகள் வியப்பில் விரிந்தன.

டேபிள் மேல் அவளுக்குப் பிடித்த ஊத்தப்பமும், இட்லியும் சட்னியும் இருந்தன.

ஆவலாய் தட்டில் வைத்து சாப்பிட ஆரம்பித்தாள் ஷீலா. அவள் சாப்பிட்டு முடிக்கும் தருவாயில், குளித்து முடித்து, டிரஸ் பண்ணிக் கொண்டு வந்தமர்ந்தான்.

''அட சாப்பிட்டே முடிச்சிட்டியா? ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடணும்னு ஆசைப்பட்டேன். பரவாயில்லை... நல்லார்ந்ததா?''

''ம்... ரொம்ப தாங்க்ஸ்... எனக்காக, எனக்கு பிடிச்ச டிபனை ஹோட்டல்லேர்ந்து வரவழைச்சதுக்கு!''

''ஹோட்டல்லேர்ந்தா? யார் சொன்னது?''



''பின்னே?''

''நானே சமைச்சது! அமெரிக்காவுல இருந்தப்ப... நேரம் கிடைக்கிறப்ப செல்ப் குக்கிங்தான். ஸோ, ஓரளவு சமையல் அத்துபடி. மூணு நாளா குக் வராம நீ சாப்பிட கஷ்டப்பட்டத பார்த்ததும்... இன்னைக்கு நானே சமைச்சேன். குக் வரவரைக்கும் நான்தான் குக்.. ஓக்கேயா?''

இப்போது மட்டுமல்ல.... ஆரம்பத்திலேர்ந்தே விக்டர் இப்படித்தான். அவள் தேவைகளை குறிப்பறிந்து நிறைவேற்றி வைப்பதில் அலாதி ஆனந்தம் அவனுக்கு. அதன் உள்நோக்கம் ஷீலாவுக்கு புரியாமலில்லை. அவள் மனசு மாறாதா என்று நம்பிக்கையுடன் காத்திருப்பவன்.

''நான் கொஞ்சம் வெளியே போக வேண்டியிருக்கு, கால் டாக்ஸியை அரேஞ்ச் பண்ணித்தர முடியுமா?''

''நானே ட்ராப் பண்றேன் ஷீலா!''

''வேண்டாம்... நான் லாயரை பார்க்கப் போகிறேன்.''

''ஓ!'' என்றவனின் முகம் சட்டென மலர்ச்சியை தொலைத்தது.

குடும்ப நல கோர்ட்டில் விவாகரத்து அப்ளைப் பண்ணி ஆறு மாதமாகிறது. அது குறித்த விஷயமாகத்தான் என்று விக்டருக்கு புரிந்தது.

''பழசை மறக்கக்கூடாதா ஷீலா?''

''யூ மீன் தினகர்?''

''ம்!''

''ஸாரி... என்னால எப்போதும் தினக்ரை மறக்க முடியாது! நான் அவரோட சேரணும். அதைத் தவிர வேறெந்த சிந்தனையும் இல்லை!''

''தினகரை திருமணம் செய்ய முடிவுப் பண்ணிட்ட பிறகு எதற்காக என்னைத் திருமணம் செய்தாய் ஷீலா? எனக்கு வேற வேலையே இல்லையா என்றா?''

''ஏற்கனவே சொன்னேனே! விஷம் குடிச்சிட்டு என்னை இப்படி... சரி விடுங்க... அதைப்பத்தி இப்ப பேச வேணாம்.''

''நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா?''

''என்ன?''

''தினகர் உனக்காக காத்திருப்பார்னு நினைக்கிறியா?''

''ஷ்யூர்! ஏனிந்த சந்தேகம்? ஐ நோ தினகர்!''

''நினைச்சா சேர்ந்து வாழவும், பிடிக்காதப்ப பிரிஞ்சு வாழறதும், நம்ம கலாச்சாரத்துக்கு ஒத்து வராத முறைகள் ஷீலா! நீ நினைக்கிறது அவ்வளவு ஈஸியில்லே!''

"ஏன்... நான் இல்லே? தினகரும் என்னை மாதிரிதான். இந்த உலகிலே என்னைத் தவிர வேற எதுவும் அவருக்கு முக்கியமில்லே!"

"மனித உறவுகளையும், உணர்வுகளையும் தவறா எடைப்போட்டுடக் கூடாது ஷீலா! நாம எட்டு மாசமா ஜஸ்ட் ப்ரெண்டாதான் பழகறோம். ஆனா, உன்னை இழக்க எனக்கு மனசில்லே! தினகரின் வொய்ப்பும் என்னை மாதிரி இருக்கலாம். அந்த அன்பு தினகரை மாற்றலாம்!"

"ப்ளீஸ் ஸ்டாப் இட்! தினகர் அப்படிப்பட்டவரில்லே. இந்தப் பேச்சு இத்தோடு போதும்!" கோபமாய் எழுந்துச் சென்று விட்டாள்.

விக்டர் சாப்பிட பிடிக்காமல் கையைக் கழுவினான்.

தூரத்தில் தேர் போல் ஜோதியாய் காட்சியளித்தன கப்பல்கள். அலைகளின் ஓயாத இரைச்சல் சந்தடி அடங்கிய இரவு நேரத்தில் துல்லியமாய் கேட்டன.

கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக் கொண்டு கரிய நிற கடலையே வெறித்து பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஷீலா ஏனிப்படி இருக்கிறாள்? இந்தியப் பெண்களுக்கே உரிய அழகுதான் என்னை ஈர்த்தது. ஆனால், அவள் மேல் நாட்டு கலாச்சாரத்தையல்லவா பின்பற்றுகிறாள்? ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் திருமணம் ஒருமுறை என்பது தமிழனின் வரைமுறை! ஆனால், அதை ஒரு கண்ணாமூச்சு விளையாட்டைப் போலல்லவா கண்களை கட்டிக் கொள்வதும், அவிழ்த்துக் கொள்வதுமாக இருக்கிறாள்? திருமணம் என்பது விளையாட்டா? இதனால் என் மனசு துடிப்பதை உணர மாட்டாளா? ஆனாலும், இவ்வளவு வீம்பாய் நீ இருந்தும், ஏன் என் இதயம் உன்னையே நாடுகிறது? வருத்தமிருந்தாலும், வெறுப்பு வரவில்லையே! நோ... இதை இப்படியே விடக் கூடாது. இங்கிருந்தால் மிகவும் காயப்பட்டுப் போய் விடுவேன். ஷீலா என்னைப் பிரிந்த மறுகணமே... நான் இந்த ஊரை விட்டு, நாட்டை விட்டு போய் விட வேண்டும். யெஸ்... அது தான் சரி!" தீர்மானித்தான்.



" என்னோட பொண்ணு காரணமே இல்லாமல் சிரிச்சுக்கிட்டே இருக்கா டாக்டர்?"

"எதாவது தொ.கா.சேனல் அறிவிப்பாளரா சேர்த்து விட்டுடுங்களேன்!".

- சீர்காழி வி.ரேவதி, தஞ்சை.



# 14

"வினயா..."

"இதோ வந்துட்டேன் அத்தை... குடிக்க ஏதாவது கொண்டு வரவா?"

"இல்லை. இப்படி உட்கார்... உன்னிடம் கொஞ்சம் பேசணும்!"

"என்ன அத்தை?" மெல்லிய உதறலுடன் அமர்ந்தாள்.

"தினகர் கூட ஏதும் சண்டையா?"

"சேச்சே... இல்லையே!"

"பின்னே ஏன்ம்மா அடிக்கடி உன் கண்கலங்குது? நானும் பல முறை உன்னைப் பார்த்துட்டேன். தனிமையிலே அழுதுக்கிட்டிருக்கே! ஏன் வினயா, எதுவாயிருந்தாலும் என்கிட்டே சொல்லு.... நான் இருக்கேன்!"

'கடவுளே... பார்த்து விட்டார்களே... இப்போது என்ன சொல்லி சமாளிப்பது? இன்னும் சில மாதங்களில் இந்த வீட்டை விட்டு போய் விடுவேன் என்றா?'

"நான் ஏன் அழறேன்? தூசி விழுந்திருக்கும்.... நீங்க அதை..."

"உன் வயசையெல்லாம் தாண்டி வந்தவ நான். தினகர் உன்னை திட்டினானா?"

'ம்ஹூம்...'

"பின்னே"

"கல்யாணமாகி ஒன்பது மாசம் ஆகிடுச்சு!"

"ஆமாம்!"

"எனக்கும் சரி... அவருக்கும் சரி... குழந்தைகன்னா ரொம்ப இஷ்டம்!"

".....?"

"ஆனா, இதுநாள் வரைக்கும் ஒரு புழு, பூச்சிக்கூட உண்டாகலை!" சாமர்த்தியமாய் பொய் வந்தது.

"நீங்கதான் இப்போதைக்கு வேண்டாம்னு தள்ளிப்போட்டுட்டதா உங்கம்மா சொன்னாங்களே!"

"அ... அது அம்மாவை சமாளிக்கறதுக்காக சொன்னது ஆனா, எனக்கு பயமாயிருக்கு அத்தை!"

"பைத்தியம்... கல்யாணமாகி ஒன்பது வருஷமா ஆகிடுச்சு பயப்படறதுக்கு? நல்லதே நினை!"

"என்னமோ, எப்பவுமே உறுத்தலாயிருக்கு. இந்த குடும்பத்து பேரை சொல்ல ஒரு வாரிசு வேண்டாமா? என்னால அதுக்கு பங்கம் வந்துடுமோன்னுதான்...

இப்போது பிரபாவதியின் முகத்தில் சிறுமிரட்சி தோன்றியது.

அப்படியொரு மோசமான செய்தியை அந்த குடும்பம் எதிர் பார்த்திருக்காது.

தினகர் அலுவலகம் செல்லும் போது கண்டெய்னர் ஏற்றிச் சென்ற லாரி மோதி, பைக்கிலிருந்து தூக்கி எறியப்பட்டு பலத்த அடி. பைக் அப்பளமாய் நொறுங்கிப் போனது.

கேள்விப்பட்டு வீடே செயலிழந்துப் போக, அவனை நேசித்த மூன்று ஆத்மாக்களின் நிலையை கேட்கவா வேண்டும்? விடாத மழையாய் கண்களில் கண்ணீர்.

மிக சீரியஸான நிலை! தினகருக்கு தலையில் பலத்த அடி. ரத்தம் உறைந்துப் போயிருப்பதால் உடனடியாக ஆபரேஷன் செய்தாக வேண்டும்.

கம்பீரமான மனிதர்... எவ்வளவு பெரிய பிரச்சினைகள் என்றாலும் தைரியமாய் எதிர்கொள்ளக் கூடியவர்தான் சவுந்தர பாண்டியன். ஆனால், இந்த செய்தியால் நடுநடுங்கிப் போய் விட்டார். சிறு குழந்தை போல் அழுதபடி ஒரு மூலையில் போய் அமர்ந்தவர்தான். அவருக்கு தோதாய் பிரபாவதியும்.

வெளி உலகம் அறியாத, சென்னையைப் பற்றி அதிகம் அறியாத வீட்டுப் பறவை வினயாதான்... பொங்கி வந்த அழுகையையும், வேதனைகளையும் மூட்டைக் கட்டி விட்டு, ஹாஸ்பிடலும், வீடுமாக அலைந்தாள்.

ப்ளட் பாங்கிற்கு போன் பண்ணி ஆபரேஷனுக்கு தேவையான ரத்தத்திற்கு ஏற்பாடு செய்தாள்.

ஆபரேஷன் நடந்தது. 48 மணி நேரத்திற்குப் பிறகே எதையும் சொல்ல முடியும் என்று டாக்டர்கள் கூறி விட்டனர்.

''வினயா என் பிள்ளை பிழைப்பானாம்மா?''

''அழாதீங்க அத்தை... நாம யாருக்கும் எந்த கெடுதலும் செய்திடலியே! கண்டிப்பா அவர் பிழைப்பார். அந்த ஏழுமலையான் நம்பினவங்களை கைவிட மாட்டார்.''

வினயாவின் முகத்தில் ஒருவித தீவிரம்.

தன் தாயை உடனடியாக வரவைத்தாள். மாமனார், மாமியாரின் வேண்டுகோளையும் மீறி அம்மாவுடன் திருப்பதி புறப்பட்டாள்.

''பெருமாளே! என் வேண்டுகோளை நிறைவேத்து... காணிக்கையை செலுத்துகிறேன் என்று கேட்கவில்லை. என் காணிக்கையை இப்போதே தந்து விடுகிறேன். கருணை உள்ளத்துடன், என் தாலியின் ஆயுளை கெட்டிப்படுத்து!' உளமார வேண்டிக் கொண்டவள், கமலம் மறுத்தும்... அவளின் நீளக் கூந்தலை மொட்டை அடித்துக்



கொண்டாள்.

நல்ல உள்ளங்களின் வேண்டுதலை கடவுள் எப்போதுமே நிராகரித்ததில்லை.

பிரபாவதியும், சவுந்தர பாண்டியனும் மருமகளின் செயலைக் கண்டு வார்த்தைகள் வராமல் ஸ்தம்பித்துப் போயினர்.

தினகர் கண் விழித்தான்.

சுய நினைவுப் பெற்று திரவ உணவுகள் வாய் வழியே இறங்கும் நிலையில்தான் வினயாவை பார்த்தான்.

அந்த கணம்... அதற்கான காரணம் சொல்லாமலே உணர்ந்து நொறுங்கிப் போனான்.

'என்னப் பெண்ணிவள்? ஒவ்வொருப் பெண்ணும் தன் உயிராக நினைத்து பாதுகாப்பதே கூந்தலைத்தானே? அதுவும் இவளுக்கு மிக நீளமான கூந்தலாயிற்றே? அம்மாவுக்கு தான் அதில் எவ்வளவு பெருமை அதைப் போய்...

நினைக்க... நினைக்க மூச்சடைத்தது.

மொட்டையடிப்பது. தீமிதிப்பது, அலகு குத்திக் கொள்வது இதெல்லாம் மூடத்தனம் என்று வாதிடும் கும்பலை சேர்ந்தவன் தினகர். ஆனால், அதைதன் பொருட்டு ஒருவர் செய்வார் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை. அந்த செயலின் பின்னே ஒளிந்திருந்த நேசம் எப்பேர்ப்பட்டது?

மலைத்துப் போனான். அதே சமயம் கன்னத்தில் அடிபட்டதுப் போல் அவமான உணர்வும் எழுந்தது. அவள் முன் தானொரு புழு போன்று உணர்ந்தான்.

வினயா பம்பரமாய் சுழன்றாள்.

தினகர் வீட்டிற்கு வந்து இரண்டு வாரம் ஓடி விட்டது. ஒரு தாயாய்... தாதியாய் அவள் அவனை கவனித்துக் கொண்ட பாங்கு கண்களை கசிய வைத்தது.

காயப்பட்ட இடங்களை துடைத்து மருந்து போடுவதாகட்டும், உடம்பை துடைத்து உடைமாற்றுவதாகட்டும், இயற்கை உபாதைகள் போக செய்த உதவிகளும்.. ஒரு வேண்டுதல் போல... தவம் போல செய்த போது... தினகரின் உள்ளே... எதுவோ நொறுங்கியது.

தன் அழகைப்பற்றி, தன்னைப்பற்றி, தன் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க மாட்டாளா? எளிமையான இந்த பெண்ணிற்குள் எப்படி வந்தது சுயநலமில்லா பெருந்தன்மை? இவளைப் போயா நான்...?

எழுந்து நடமாட ஆரம்பித்தான்.

மாத்திரைகளை கொடுத்த பின், ஹார்லிக்ஸை இதமாய் ஆற்றி

அவனிடம் நீட்டினாள்.

''குடித்து விட்டு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். மாலை செக்கப்பிற்கு வரச் சொல்லியிருக்கிறார் டாக்டர். ஆட்டு எலும்பு சூப் வைத்துத் தருகிறேன். சாப்பிட்டு ஒரு மணி நேரம் தூங்கி எழுந்தால் கிளம்ப சரியா இருக்கும்!''

அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த தினகர் ஹார்லிக்ஸை வாங்கி ஓரமாய் வைத்து விட்டு அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

புரியாமல் பார்த்தாள் வினயா.

''என்னை மன்னிப்பாயா வினயா?''

''எ... என்ன இது? என்னென்னவோ பேசிக்கிட்டு''

''மனம் உணர்ந்து கேட்கிறேன். என்னை மன்னிச்சிடு!''

''எதற்காக?''

''உன் அன்பு பிரம்மிக்க வைக்கிறது, வெட்கப்பட வைக்கிறது. உன்னைப் புரிஞ்சுக்காம எவ்வளவோ பேசிட்டேன்.''

''....?''

''என்ன ஏதுன்னு காரணம் கேட்காம, அதுக்கான காரணமான பெண் யார்னு தெரிஞ்சுக்க ஆர்வமில்லாம, எனக்காக நீ எடுத்த முடிவு... அந்த தெளிவு... என்னை உலுக்கிடுச்சு வினயா!''

''...?''

''நான் உன்னை வெறுத்தேன். குறைகளை தேடிதேடி கண்டுபிடித்தேன். ஆனா அப்பக் கூட என்னைப் பற்றி ஒரு குறை சொல்லாம உன் நேசிப்பிலே உறுதியா இருந்தேப் பாரு... அது தெய்வகுணம்!''

''...?''

''பெண்களுக்கு கூந்தல்தான் அழகு! ஆனா, அதைப் பற்றி கவலைப்படாம எனக்காக வேண்டிக் கொண்டு மொட்டையடிச்சிருக்கியே... இதை என்னன்னு சொல்ல?''

''.....?''

''இப்பதான் நீ எனக்கு பேரழகியா தெரியறே! கடவுள் காரணமில்லாம, தேவையில்லாம இன்னார்க்கு இன்னார்னு முடிச்சுப் போடலே! மனசுக்கு நிறைவா இருக்கு வினயா. நான் உன்னை புரிஞ்சுக்காம பேசினதையெல்லாம் மறந்திடு. அரக்கத்தனமா நடந்துக்கிட்டதையெல்லாம் மன்னிச்சிடு. இந்த அன்பு எனக்கு கடைசி வரை வேண்டும். தருவாயா வினயா?''

வினயா அதிர்ச்சியுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'பேசுவது அத்தான்தானா?'

''என்ன வினயா... ஒண்ணுமே பேச மாட்டேங்கறே, என்னை



மன்னிக்க மாட்டாயா?''

''உங்களை மன்னிக்கவோ, தண்டிக்கவோ என்னால முடியாது. காரணம் அன்பு! உங்க சந்தோஷம்தான் என் வாழ்க்கைன்னு வாழற சாதாரண பெண் நான்!''

''ரொம்ப தாங்க்ஸ் வினயா!'' அவளை இழுத்தணைக்க முயன்றான்.

நாசூக்காய் விலகினாள்.

''புரிஞ்சுக்குங்க மாமா! உங்க அன்புக்காக ஏங்கியவள்தான் நான்! ஆனா, நான் செஞ்சதை ஒரு தியாகமாய் நினைச்சு, பரிதாப்பட்டு என்னை ஏத்துக்க நினைக்கிறது அசிங்கமாய் இருக்கிறது.''

''வினயா! இது அப்படியல்ல...!''

''இன்னும் கொஞ்சம் நாள் போகட்டுமே மாமா! 'இவள் என் மனைவி' என்ற கர்வம் உங்களுக்குள் வரணும். யாராலும் எந்த இடையூறாலும் அந்த எண்ணம் மாறாது என்கிற உறுதி உங்களுக்குள் வரட்டும்... அப்புறம்... இந்த வினயா உங்கள் காலடியிலேயே வீழ்ந்து கிடப்பாள்!'' என்றாள் உறுதியான குரலில்.

## 15

விமான நிலையம்!

''விஷ் யூ ஆல் த பெஸ்ட்... ஷீலா!'' விக்டர் கையை நீட்ட சங்கடத்துடன் பற்றி குலுக்குகிறாள்.

''ஸாரி விக்டர்!''

''எதுக்கு?''

''உங்களை கஷ்டப்படுத்திட்டதுக்கு!''

சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''காலம் கடந்து லேட்டா உணர்ந்திருக்கியே.... சரி அதை விடு... அடுத்த மாசம் நீ இங்கே வரவேண்டியிருக்கும்!''

''புரியுது... நம்ம டைவர்ஸ் கேஸுக்கு ஜட்ஜ்மெண்ட்! வருவேன்!''

''நீ சென்னைக்குப் போனதும் உன் பேரண்ஸ்சைப் பார்க்க மாட்டாயா?''

''ப்ச்... சுயநலக்காரர்கள். பார்க்க மாட்டேன். ஏதாவது ஹோட்டலில் தங்கிக் கொள்கிறேன்!''

''அவஸ்தைப் பட வேண்டாம். ஒரு கண்ணியமான எனக்கு தெரிந்த ஹோட்டலில் உனக்காக ரூம் போட்டிருக்கிறேன்! எத்தனை

நாட்கள் வேண்டுமானாலும் தங்கிக் கொள்ளலாம், பில் எனக்கு வந்து விடும்!''

''விக்டர்... உங்களுக்கெதற்கு சிரமம்?''

''சாதாரணமாகவே என்னிடம் அடைக்கலம் தேடி வர்றவங்களை திருப்திப்படுத்துகிற அளவுக்கு உதவிகள் செய்பவன்நான்! ஆனால்... நீ என்னை உன் ஹஸ்பண்டாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நான் உன்னை வொய்பாகத்தான் நினைத்தேன். உன்னை பாதுகாக்கும் கடமை இன்னும் எனக்கிருக்கிறது ஷீலா!''

'ஒரு நல்ல இதயத்தை புண்படுத்தி விட்டோமோ' என்று முதல் முறையாய் வருத்தப்பட்டாள்.

''சரி... நான் புறப்படட்டுமா?''

''ம்!'' கனமான உள்ளத்துடன் விடை கொடுத்தான்.

பார்மாலிட்டீஸ் முடித்து விமானத்தில் ஏறி அமர்ந்தாள்.

அதன்பின் உற்சாகமானாள். ஒன்றரை வருடத்திற்கு பிறகு தினகரை பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பே... சற்று முன் விக்டரை பற்றியெழுந்த அனுதாப அலையை சுருட்டி வாயில் போட்டுக் கொண்டது.

கைகளை கட்டிக் கொண்டு சிறிது நேரம் எதிரில் அமர்ந்திருந்த தினகரையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஷீலா. முகத்தில் உற்சாகம்.

தினகர் இயல்பாய் இருந்தான்.

''ஒன்றரை வருஷம் என்னைப் பார்க்காம துடிச்சுப் போய்ட்டியா தினகர்? நோய்ல படுத்து எழுந்தவன் மாதிரி பாதியா இளைச்சிட்டியே?''

''நீ நல்லாயிருக்கியா ஷீலா?''

''விக்டர் என்னை நல்லா கவனிச்சுக்கிட்டான். ஜென்டில்மேன், கடைசி வரை நான் மனசு மாற மாட்டேனான்னு காத்திருந்தான் பாவம்! ஆனா, உன்னைப் பார்க்காம நான் எப்படி கஷ்டப்பட்டேன்



''தலைவர் ரொம்ப நாணய மணவருன்னு தொண்டர்களெல்லலாம் நிரூபிச்சிட்டாங்க எப்டி?''

''நிதி வசூலை 'நாணயமா' வந்து கொட்டிட்டாங்களே...''

ஜெ.கோவிந்தக்கனி,
இனாம் கரிசல் குளம்.



தெரியுமா?''

''டைவர்ஸ் ஆயிடுச்சா?''

''அடுத்த மாசம் ஜட்ஜ்மெண்ட்! நீ பண்ணிட்டியா?''

''ம்ஹூம்... விளையாவே வெற்று பத்திரத்துல கையெழுத்துப் போட்டு, விடுதலைப்பத்திரமா என்ன எழுதிக்கணுமோ, அதை எழுதிக்குங்கன்னுட்டா!''

''பரவாயில்லையே... அந்த பட்டிக்காடு இந்தளவு விட்டுக் கொடுத்திருக்கா? தென், நீ அவளை டச் பண்ணிடலையே!''

''இந்த நிமிஷம் வரைக்கும் இல்லை!''

''தாங்க்ஸ்டா... இனி நாம ஒண்ணு சேர்றதுல எந்த பிரச்சினையும் இருக்காது. என் கேஸ்ல தீர்ப்பான மறுநாளே நம்ம கல்யாணத்தை வச்சுக்கலாம்!''

''நீ என் மேலே ரொம்ப அன்பு வச்சிருக்கியா?''

''பின்னே? என்ன புதுசாக் கேக்கறே?''

''எனக்காக எதுவும் செய்வியா ஷீலா?''

''மோசமான கேள்வி! நம் நாட்டிலே 90% பெண்களோட சாய்ஸ் விக்டர் மாதிரியான ஜென்டில்மேனாதான் இருக்கும். பணம், அழகு, எல்லாமே இருக்கு. அப்படிப்பட்ட ஆளை டைவர்ஸ் பண்றேனே. இதை விட பெரிதாய் என்ன செய்து விட முடியும்? எல்லாமே உன் மேலுள்ள காதலால் தானே?''

''உனக்கு நான்வெஜ் ரொம்ப பிடிக்குமில்லையா?''

''ஆமாம்... அதில்லாம சாப்பாடே இறங்காது!''

''எனக்கு பிடிக்காதுன்னு வச்சுக்க... உன்னையும் சாப்பிடக்கூடாதுன்னு கட்டுப்படுத்தறேன். நீ என்ன செய்வே?''

''ரொம்ப நாள் கழிச்சுப் பார்க்கிறோம். எதுக்கு தேவையில்லாம பேசிக்கிட்டு...''

''சொல்லேன் ப்ளீஸ்!''

''உனக்கு பிடிக்கலேன்னா நீ சாப்பிடாதே! என் சுதந்திரத்துல தலையிட்டா பிடிக்காதுன்னு தெரியுமில்லே! நான் ஏன் சாப்பிடறதை விடணும்?''

''எனக்காக மொட்டையடிச்சுக்குவியா?''

''மொட்டை?''

''ம்!''

''வாட் நான்சென்ஸ்? நான் ஏன் மொட்டையடிச்சுக்கணும்? என்னோட ப்ளஸ் பாய்ண்ட்டே சில்க் ஹேர்தான்! நோ சான்ஸ்!''

''சில பொண்ணுங்க ஹஸ்பண்டுக்காக வேண்டிக்கிட்டு மொட்டையடிச்சுக்கறாங்களே...''

''முட்டாளுங்க... பைத்தியக்காரிங்க...!''

''மொட்டையடிச்சா என்ன? திரும்ப வளர்ந்துடப் போகுது. புருஷனோட அன்பு முக்கியம்தானே?''

''மண்ணாங்கட்டி... ஏன் இப்படியெல்லாம் பேசறே? வெறுப்பாயிருக்கு தினகர்!''

''ஆனா, இதுதானே வாழ்க்கை?''

''எது... மொட்டையடிச்சுக்கறதா?'' ஆத்திரத்துடன் கேட்டாள்.

''பரஸ்பரம் விட்டுக் கொடுக்கறது!''

''ஸாரி... சுயகவுரவத்தை விட்டுக் கொடுத்துட்டு அப்படி வாழ்ந்துதான் ஆகணும்னு என்ன கட்டாயம்?''

''நீ சொன்னியே முட்டாள்தனம் பைத்தியக்காரத்தனம்னு... நல்ல குடும்ப வாழ்க்கைக்கு இது ரெண்டுமே அவசியம்தான் ஷீலா! அதுதான் தாம்பத்யம்... விட்டுக் கொடுத்தல்தான் அன்பு! இதோ இது வினயா கையெழுத்துப் போட்டுக் கொடுத்த பேப்பர். தன் வாழ்க்கையையே விட்டுக் கொடுத்து அதிகப்படியான அன்பால போட்டுக் கொடுத்த கையெழுத்து! இந்த அன்பு முன்னாடி நீயும் நானும் தூசி ஷீலா!'' அந்தப் பேப்பரை சுக்கல் சுக்கலாய் கிழித்தெறிந்தான்.

''தி..ன..க...ர்...''

''ஸாரி ஷீலா... என் வினயாவை நான் இழக்க விரும்பலே..''

''வாட்?'' துணுக்குற்றாள்.

''உன் அழகால என்னை கட்டிப்போட்டு நீ சொல்றதை எல்லாம் கேட்கற ஒரு தலையாட்டி பொம்மையாதான் நினைச்சே! என் அன்பை உன் சுயநலத்துக்காகத்தான் பயன்படுத்திக்கிட்டே! ஆனா, வினயா அப்படியில்லே. அன்பால என்னை கட்டிப்போட்டுட்டா! எனக்காக... நாம சேர்ந்து வாழறதுக்காக அவ எடுத்த முடிவு... சுயநலக்காரங்களான நம்மால எடுக்க முடியாது.''

''என்ன தினகர்... புரிஞ்சுதான் பேசறியா? பின்னாடி வருத்தப்படுவே... இதுக்காக உன் கால்ல விழுந்து கெஞ்சுவேன்னு எதிர்பார்க்காதே!'' கோபத்தில் மூச்சு வாங்கியது.

''நமக்குள் விவாதம் வேண்டாம் ஷீலா! ஒரு நல்ல காதலை' முட்டாள் தனமான முடிவால் சிதைச்சிட்டோம். வினயாவோட எதிர் காலத்தையோ, விக்டரின் மனசையோ பத்தி கவலைப்படாம நாம எடுத்த முடிவு மட்டமானது. நினைச்ச போது, கழற்றி மாட்டிக்க கல்யாணம் உடையல்ல. அது வாழ்க்கையில் ஒரு முறைதான் வரணும். அதை ஒழுங்காய் கடைசி வரை மதிப்பவன்தான் மனிதன்! நான் நல்ல மனிதனாய் இருக்க விரும்பறேன்! நீ உன்னைப் பற்றி மட்டும் தான் நினைப்பே! வினயா என்னைப் பற்றி மட்டும் நினைப்பவள்!''

''ச்சீ... யூ ஆர் சீட்! வாக்கு தவறிட்டேயில்லே?''

''திட்டு... உன் மனசு எனக்குப் புரியுது. உன் ஆதங்கம் புரியுது. அவசரப்பட்டு கல்யாணம் பண்ணிட்டோம். ஆனா, அவசரப்பட்டு பிரிஞ்சிட முடியாது ஷீலா! வினயாவுக்கும் விக்டருக்கும் ஏனிந்த தண்டனை? அவங்க என்ன தப்புப் பண்ணினாங்க? அவசரப்பட்டு பண்ணினாலும் கல்யாணம் கல்யாணம்தான். உயிரோடு இணைந்த உரிமை. அதை லேசிலே உதறிட முடியும்மா? நம்ம கோழைத்தனத்துக்காக அவங்களை பழிவாங்கணுமா? வாக்கு தவறிட்டதா நீ நினைக்கலாம். ஆனா, உனக்கு வாக்கு கொடுத்ததால் தான் இன்று வரை வினயாவை நான் தொட்டதில்லை. ஆனா, அவகிட்டே கொடுத்த வாக்குப்படி... என் இதயம் முழுக்க அவளை நிரப்பி, மனைவிங்கற அந்தஸ்துடன்... கர்வத்துடன் என் சொந்தமாக்கிக் கொள்ளப் போகிறேன்!''

''....?''

''அவசரப்பட்டு விக்டரை இழந்திடாதே ஷீலா... இது என்னுடைய அட்வைஸ். நாம் சந்திப்பது இதுவே கடைசியாக இருக்கட்டும்!''

திரும்பிப் பார்க்காமல் நடக்கிறான்.

ஷீலா சிலைபோல் நின்றிருந்தாள்.

**16**

'சே.. இவனைப் போயா காதலித்தோம்? இவனுக்காக, இவனுடன் சேரணும்ங்கறதுக்காகத் தானே கல்யாணம் செய்தேன்? கோழை! மொட்டையடித்துக் கொள்ளணுமாம்... விட்டால் தீக்குளிப்பது கூட அன்பின் வெளிப்பாடுதான் என்பான்! சாடிஸ்ட்!

மிரட்டலுக்கு பயந்து அந்த பட்டிக்காட்டை விட்டு வர முடியாமல் போயிருப்பான். அதற்கு மீசையில் மண் ஒட்டாமல் ஏதேதோ அளந்து விட்டுப் போகிறான்.

---



''சுமாராகப் படிக்கிற மாணவனைப் பற்றிய படமா இது... டைட்டில் என்ன?

மக்குபாய்

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

'விக்டரை இழந்திடாதே ஷீலாவாம்! சாத்தான் வேதம் ஓதுவது போலிருக்கிறது. விக்டரை பற்றி பேச இவனுக்கு என்ன அருகதை இருக்கிறது? விக்டர் எப்பேர்ப்பட்டவன்? இவனுக்காக அவனை இழந்தேனே? சே!'

மனம் தாங்காமல் கண்ணீர் எட்டிப் பார்த்தது. அடிப்பட்ட வேதனையுடன் ஹோட்டலுக்குத் திரும்பினாள்.

இரண்டாவது மாடியிலிருந்த தன் அறையை நோக்கிச் சென்றாள்.

உடம்பிலிருந்த சக்தியெல்லாம் கரைந்து ஓடிவிட்டதுப் போலிருந்தது. சாவியைப் போட்டு திறக்க முயன்றவளுக்கு குழப்பத்தில் சாவி சரிவர ஒட்ட மறுத்தது. இரண்டு முறை சாவி கீழே விழுந்தது.

மூன்றாம் முறையும் தவறி கீழே விழ, எடுக்க முயன்றவளை தடுத்தது ஒரு குரல்.

''மே ஐ ஹெல்ப் யூ ஷீலா?''

நிமிர்ந்தவளின் முகமெங்கும் ஆச்சர்யப் பூக்கள்.

''வி..க்..ட..ர்!''

''யெஸ்... விக்டரேதான்!'' புன்னகையுடன் காரிடாரின் ஓரமாய் நின்றிருந்தவன், நெருங்கி சாவியை எடுத்து திறந்தான்.

''உள்ளே வாங்க விக்டர்! நீங்க எப்படி இங்கே? எப்ப வந்தீங்க?''

''உன்னை ப்ளைட்ல ஏத்தி அனுப்பிட்ட பிறகு மனசே கேக்கலே ஷீலா! சூழ்நிலைகளைப் போல மனுஷனின் மனசும் மாறும். தினகரால் உனக்கேற்றபடி நடக்க முடியாமல் போகலாம். அப்படி நடந்தால் உன்னால் தாங்கிக் கொள்ள முடியாது. ஏன்னா, இந்த நாளுக்காக ஒன்றரை வருஷமா தவமிருந்தவ நீ! சப்போஸ் அப்படி நடந்தால் சாஞ்சுக்க உனக்கொரு தோள் வேணுமே! அதனால தான் இன்னைக்கு காலைல ப்ளைட்ல வந்துட்டேன்!''

''வி..க்..ட..ர்! எப்படி விக்டர் இந்த நேரத்திலும் கூட என்னைப் பத்தி மட்டுமே கவலைப்பட முடியுது உங்களால்?''


தேவியின் **கண்மணி**

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஓர் ஆண்டு | ரூ. 140/- |
| 6 மாதம் | ரூ. 70/- |
| வெளிநாடு | ரூ.750/- |

அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி
தேவியின் கண்மணி
246, அண்ணாசாலை,
சென்னை- 600 006.




''அன்பு... உன் மேலே வச்சிருக்கிற அளவுக்கதிகமான அன்பு! சரி என்னை விடு! தினகரைப் பார்த்தியா? என்ன சொன்னார்?''

அதற்கு மேல் ஷீலாவால் அமைதியாயிருக்க முடியவில்லை. கதறியபடி அவன் தோளில் சாய்ந்துக் கொண்டாள்.

''ஹேய்... வாட் ஹாப்பண்ட் டு யூ?''

''எனக்கு சாஞ்சுக்க உங்க தோள் வேணும் விக்டர்!

''ஓ!'' சகலமும் புரிந்தது.

''ஏமாந்துட்டேன் விக்டர். ஏமாத்திட்டான்! சிறு குழந்தையைப் போல் தேம்பியழுதாள்.

''வேண்டாம்... நீ எதையும் சொல்லாதே... என்னால் புரிஞ்சுக்க முடியுது...'' அவள் கண்ணீரை துடைத்தான்.

''இவ்வளவுக்கும் பிறகு உங்களால எப்படி... என்னை...''

''தோள்ல மட்டுமில்லே... என் மார்புல சாய்ச்சுக்கவும் தயாராயிருக்கேன்... உனக்கு விருப்பமிருந்தா!''

நிமிர்ந்து அவனை பார்த்தாள். அவள் விழிகள் விக்டரின் இதயத்தை துளைத்துச் சென்றன.

வாத்சலயத்துடன் ஷீலாவின் தலையை கோதிவிட்டான். அந்த புரிதலும், நேசமும் ஷீலாவுக்கு திருமண பந்தத்தின் தாத்பரியத்தை புரிய வைத்தது. அவள் தலை அவன் நெஞ்சில் சாய்ந்தது. விக்டர் ஷீலாவின் முதுகில் கை வைத்து அழுத்தி... நிம்மதியாய் மூச்சு விட்டான்.

தினகர் நடு வழியில் பைக்கை நிறுத்தி அடையாறு ஆனந்தபவனில் நுழைந்தான்.

வினயாவுக்கு பிடித்த பாஸந்தியை தாராளமாய் வாங்கிக் கொண்டான்.

ஒன்றரை வருடமாய் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்த முள் இப்போதில்லை. நிம்மதியாய் உணர்ந்தான். புரட்சி பேசும் பெண்ணால் சாதிப்பதை காட்டிலும், அன்பு காட்டும் பெண்ணால் சாதிக்க முடிவது அதிகம். எடுப்பதை விட கொடுப்பது நிறைய பலன்களைத் தருகிறது. சர்வாதிகாரத்தின் முன் அடிபணியாத ஆண்மகன் கூட அந்த அன்பின் முன் மண்டியிடவே ஆசைப்படுகிறான்.

வீட்டை நெருங்கிய தினகரை உற்சாகம் அணைத்துக் கொண்டது. கர்வத்துடன் தன் வினயாவை தேடி நுழைந்தான். குளிர் தென்றலும் அவனுடன் போட்டிப் போட்டுக் கொண்டு வீட்டினுள் நுழைந்தது.

**முற்றும்**